குறுகிய நீளக்கப்பல். ஒருவர் மேலும் ஒருவர் கீழுமாகப் பல துடுப்புக்காரர்கள் இதன் பக்கங்களில் வரிசையாய் உட்கார்ந்து கப்பலைத் தள்ளுவார்கள். காற்று அநுகூலமாயிருந்தால் கப்பலில் உள்ள பாய் விரிக்கப்படும். இக்கப்பல்கள் காற்று அடிக்கும் வழியாய்ப் போகவேண்டியன அல்ல; எத்திசையும் செல்லக்கூடும். சில கப்பல்களில் துடுப்பு ஆட்கள் இரண்டு அல்லது மூன்று அல்லது நான்கு வரிசைகளாக உட்கார்ந்து கப்பல்களை ஓட்டுவதும் உண்டு. துடுப்புப் பெரிதாயும் கனமானதாயும் இருந்தால் பல பேர்

அதைத் தள்ளிவைண்டும். இக்கப்பலில் ஓட்டிய குடிப்பாட்
கள் பெரும்பாலும் ஆயுட்கால சிட்சை பெற்ற அடிமை
களே. பாவம்! இந்த அடிமைகள் ஒரு பொருட்டாக
மதிக்கப்படாமல் மிகவும் குரூரமாக நடத்தப்பட்டார்கள்.
இவர்களை நிரம்பாமையிலிருந்து கண்காணி ஒருவன் பிரம்பு
கொண்டு அடிக்கடி இவர்களை அடித்து வேலைவாங்கி
வந்து வந்தான்.

மற்றொருவகையான வியாபாரக் கப்பலுக்குக் குடிபட
ஆட்கள் இலலை. இது பாய்மரத்தின் உருவியல் ஓடிய
இக்கப்பலின் பக்கத்தில் மக்கான் அமைக்கப்பட்டிருந்தது.
இந்த பிரமாண வியாபாரக் கப்பலிலிருந்து தான் நாள்
படகுகள் வந்தன. எறக்குறைய பிரிட்டிஷார் செய்
யப்பட்ட பிரமாண வியாபாரக் கப்பல்களை படகு என்று
சொன்னால் பிசகையாகாது. பாய்மரங்களை வரிசையாக
அமைப்பதிலும் பிரிட்டிஷார் வல்லவர்கள். காற்றுக்குப்
பதிலாக நீராவியை உபயோகிக்கக் கண்டுபிடித்த பத்
தொன்பதாம் நூற்றாண்டின் முதல் முப்பது ஆண்டுகள்
வரையிலும் குறிப்பிடத்தக்க மாறுதல் எதுவும் உண்டாக
வில்லை. நீராவியைப் பயன்படுத்தும் வழக்கம் கப்பற்
றொழிலில் புகுந்ததும் கப்பற்றொழிலில் ஆச்சரியமான
மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன.

கப்பற்கலை வளர்ச்சி வரலாறு

பத்தொன்பதாவது நூற்றாண்டுக்குமுன் கப்பற்கலை
யில் சீர்திருத்தங்கள் மெதுவாகவே தொன்றி வந்து
கொண்டிருந்தன. கப்பற்கலை வளர்ச்சியைப்பற்றி ஆராய்
வோமானால் சீர்திருத்தங்கள் பல நூற்றாண்டுகளாக
நடைபெற்றுவந்ததை நன்கு காணலாம்.

ஏறக்குறைய சரித்தகாலத்துக்கு முன்னிருந்தே கிரேக்க
இந்தியர்களும் அரபியர்களும், மேற்கே பொனீஷியர்களும்

கப்பல் ஓட்டும் திறமையிற் சிறந்து விளங்கினார்கள். இவர்களிடத்தில் கடலாட்சி இருந்துவந்தது. கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடிப்பதற்கு முன்னமே இந்திய மாஹுமிகள் அமெரிக்காவின் சில பாகங்களை அறிந்திருந்தார்கள். டையாஸ்¯ வாஸ்கோடகாமாவிற்கு இந்தியாவிற்குக் கடல்மார்க்கத்தைக் கண்டுபிடிக்க ஹீலமக்காவதற்கு முன்னமே எகிப்து அரசனாகிய இரண்டாவது நிக்கோவிடமிருந்து (Necho II) வேலை பார்த்துவந்த பொனீஷிய மாலுமிகள் ஆப்பிரிக்காவைச் சுற்றிப் பிரயாணஞ் செய்தார்கள்.

பொனீஷியர் வியாபாரஞ் செய்யுமிடமெங்கும் கடலில் நெடுந்தூரம் பிரயாணஞ் செய்துவந்தார்கள்; அப்பிரிக்காவின் கரையிற் சுமார்பல நகரங்களையும் ஸ்தாபித்தார்கள். அவர்கள் ஸ்தாபித்த சுமார்பல நகரங்களில் ஒன்றுதான் கார்த்தேஜ் (Carthage) என்பது. இது செல்வமும் பலமும் பொருந்திய நாடாக விளங்கிற்று. இன்னும் அவர்கள் ஹெர்குயுலீஸ் தூண்களை எனப்படும் ஜிப்ரால்டர் கால்வாயைக் கடந்து ஸ்பெயினுக்குச் சென்று அங்கே காடிஸ் (Cadiz) என்னும் ஊரையும் ஸ்தாபித்தார்கள்; அதன்பின் அவர்கள் பிரித்தானிய நாட்டிற்குஞ் சென்றார்கள். பின்னால் வந்த பிரித்தானியரைப்பற்றிக் கூறுவது, முன்னிருந்த பொனீஷியருக்கும் பாதியளவு ஏற்றதாயிருந்தது. ஆங்கிலரைப் போலவே பொனீஷியரும் எங்கெங்கே போனார்களோ அங்கங்கே நாடுகளை ஏற்படுத்தி வியாபாரத்துக்கும் வழி செய்துகொண்டார்கள். கார்த்தேஜ் ரோமர்களால் அழிக்கப்பட்டதும், பொனீஷியர்களுடைய பலம் குறைந்தது. அவர்கள் அழிய வே, கப்பல் செய்யும் கலையும் கப்பலோட்டும் வித்தையும் மறைந்தன.

நாம் முன்னமே இரண்டு வகையான கப்பல்களைப் பார்த்தோம். பல நூற்றாண்டுகளாக இந்த இரண்டுவகையான கப்பல்களிற்றான் சீர்திருத்தங்கள் ஏற்பட்டன.

தண்டிவனித்தேதாடுர் கப்பல் சண்டைக் கப்பலாகவே உப
யோகப்பட்டு வந்தது; பாய்மரக்கப்பல் வியாபாரக் கப்ப
லாகவே இருந்து வந்தது. நெடுங்காலமான பின்னர்,
இத்தாலியக் குடியரசு பரிந்த பிறகு, ஐரோப்பாவிற்
சில ராஜ்யங்கள் தலையெடுத்த காலத்தில், ஆங்
கில நாடு, ஸ்பெயின் நாகரம், உலாந்து நாகரம் ஆகிய இந்
நாடுகளின் பல துறைகளுக்குள் ஏற்பட்ட சச்சரவுகளால்
கடற்கலைக்குப் புதிய பலம் வந்தது.

கடற்கலைவளர்ச்சி ஏற்படுவதற்கு முக்கிய காரணம்
ஒன்று உண்டு. அது இந்தியாவிற்கு வரும் தரைமார்க்கம்
அடைபட்ட நேயமாகும். கடல் இந்தியாவில் தங்கமும் பட்டும்
அரியவைரங்களும் நிரம்பியிருப்பதாகக் கிடைத்ததால், ஐரோப்பிய
நாட்டினரிடம் பல இதைகள் கைபடிந்து தங்கள் செல்வத்
தைப் பெருக்க விரும்பினர். இதனால் பல துறைகளுக்குத்
தங்கள் நாட்டில் அதிகமான பணமுதலீடு கிடைக்காமை
யால், அரசர்கள் அக்கறை எடுத்தில் ஐரோப்பிய நாடுகளில்
கூலைமைபெற்றிருந்த வியாபாரிகளின் செல்வாக்கை
மேம்படுத்துவதாகினர். இந்த அரசர்களில் முக்கியமான
வர் ஹென்றி என்னும் போர்த்துகல் மன்னர். இவருக்குப்
பௌதிக அராய்ச்சியில் புதிய இடங்களைக் கண்டுபிடிப்ப
தில் ஊக்கம் நிறைந்திருந்ததால், இவர் தம்மிடம் வந்த
ஜெனோவா துறைமுகத்தார் உதவியுடன், அபரிக்காவைச் சுற்றி
வருவதாக அனுப்பினர். அர்மாலுமிகள் மதீரா, அசோர்ஸ்
முதலிய சில இடங்களைக் கண்டுபிடித்தார்கள்.

புதிய இடங்களைக் கண்டு பிடிக்கக் கடல் யாத்திரை
செய்த மாலுமிகளில் பெரும்பாலோர், முன்னமே தெரிந்த
இடங்களுக்குச் சிறிது தூரம் மேல் செல்ல முயன்றார்கள்.
தெரியாத இடங்களைச் சிறிது சிறிதாக அவர்கள் கண்டு
பிடிக்கப் பார்த்தார்கள். மேற்குப் பக்கமாகப் போனால்
இந்தியாவுக்குக் கடல் மார்க்கமாகச் செல்ல வழி கண்டு

பிடிக்கலாம் என்ற நம்பிக்கை மாத்திரம் எல்லா மாலுமி களுக்கும் இருந்தது. ஆனால், ஒருவரும் முன்பின் வழி தெரியாத பெருங் கடலிற் சென்று வழி கண்டுபிடிக்கத் துணியவில்லை. கோலம்பஸ் மாத்திரம் பூரண நம்பிக்கை யோடும் அச்சமற்ற தைரியத்தோடும் மூன்று கப்பல்க ளுடன் மேற்குப் பக்கமாகப் புறப்பட்டார். அவர் கொண்டு போன கப்பல்களில் மிகப் பெரியது இக்காலத்து ஆற்றுப் படகைப் பார்க்கிலும் பெரியதாய் இருந்திராது. இப்படிப் பட்ட கப்பலிற் சென்றதான் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார்.

அமெரிக்காவைக் கண்டுபிடித்ததிலிருந்து கப்பற்கலை அதிசீவிரமாக முன்னேறியது. இதைக் கண்டுபிடித்த முப்பது ஆண்டுகளுக்குள் வாஸ்கோடகாமா என்னும் நம்பிக்கை முனையின் பக்கமாய்ச் சுற்றிவந்து இந்தியாவிற்குக் கடல் மார்க்கத்தைக் கண்டுபிடித்தார். மெஜெலன் என்பவர் விடா முயற்சியுடன் பல கஷ்டங்களுக்கு இடையில், உலகைச் சுற்றிவந்தார். இங்கிலாந்தை அண்ட எலிசபெத் இராணியாரின் ஆதரவின்கீழ் டிரேக் (Drake), ஹாக்கின்ஸ் (Hawkins), பிரபிஷர் (Frobisher) ஆகிய இவர்கள், ஸ்பெயின் நாட்டுக்கு மாலுமிகளைப் போலவும் போர்ச்சுகல் நாட்டுக்கு மாலுமிகளைப் போலவும், பயமின்றிக் கடற் பிர யாணம் செய்தார்கள். இந்தக் காலமெல்லாம் கப்பல் செய் வதில் பொதுவாகச் சீர்திருத்தங்கள் துரிதமாகிக்கொண்டே வந்தன. பெருங்காற்றையும் கொந்தளிக்கும் கடலையும் எதிர்க்க மாலுமிகளுக்கு அடங்காத உற்சாகம் இருந்தது; ஆகையால் அவர்கள் காற்றின் கொடுமையையும் அலைக்கும் கடலின் கோபத்தையும் வெல்ல வழி கண்டுபிடிக்கப் பாடு பட்டார்கள். கடற்பிரயாணத்தில் மாலுமிகள் பட்ட கஷ் டங்கள், அடைந்த வெற்றிகள் ஆகிய இவைகளைப்பற்றி நெடுங்காலமாக இருந்துவந்த கர்ணபரம்பரையான கதை

கள் இந்தப் பதினைந்தாம் நூற்றாண்டில் எழுந்தன. இக் கதைகள் இன்றும் மாலுமிகளுக்கு உற்சாகம் ஊட்டக்கூடிய சாதனமாயுள்ளன.



Reproduced by permission of the Director of the Science Museum, South Kensington, London

எலிசபெத் ராணியார் காலத்துக் கப்பல்

பதினைந்தாம் நூற்றாண்டுக்குப் பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கும் இடையில், ஐரோப்பியர்கள் புதிய புதிய இடங்களைக் கண்டுபிடிப்பதற்குக் கடல் யாத்திரைசெய்து, அநேக இடங்களைச் சிறிது சிறிதாகக் கண்டுபிடித்து அந்நாடுகளிற் குடியேறினர்கள். இப்படிக் கண்டுபிடித்த இடங்களில் முக்கியமானது ஆஸ்டிரேலியா. குக் (Cook) என்னும் ஆங்கிலநாட்டு மாலுமிதான் இதைக் கண்டுபிடித்தார். ஆஸ்டிரேலியாவைக் கண்டுபிடித்ததை நாம் முக்கியமான சம்பவமாகவே கினைக்கவேண்டும்.

பத்தொன்பதாவது நூற்றாண்டு கப்பற்றொழிற்கலைக்

Post Graduate Library



By kind permission of the Cunard Steamship Co., Ltd

கற்காலப் பிரயாணிக் கப்பல் : அக்விற்டானியா

குச் சிறந்த காலமாக விளங்கியது. இக்காலத்திற்முன் ஆச்சரியமான வைகளும் ஒரு நூறாண்டிக்குமுன் நாம் மனத்தாலும் நினைக்கமுடியாதவைகளுமான பலவகைக் கப்பல்கள் தோன்றின. பிரேமென் (The Bremen), அக்விடேனியா (The Aquitania), மெஜெஸ்டிக் (The Majestic) என்பவை மேன்மை கப்பல்களை உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இவைகள் நாற்பதினாயிரம் முதல் ஐம்பதினாயிரம் டன் வரை பாரத்தைத் தூக்கிச் செல்கின்றன;



Photo Elder, Dempster & Co.

நவீன மோட்டார்ப் படகு: 'அக்ரா'

நாலைந்து நாட்களுக்குள் ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவிற்குப் போகின்றன. ஒருவன் அனுபவிக்க வேண்டிய எல்லாவிதமான சௌகரியங்களையும் இக்கப்பல்களிற் பிரயாணஞ் செய்துகொண்டே அனுபவிக்கலாம்; பார்க்கக் கூடிய மேலடிக்கைகளையும் பார்த்துக் களிக்கலாம்.

நவீன புகைக் கப்பல்கள்

இக்கப்பல்களைப் போன்றவை பல உண்டு. உலகத்தில் கப்பற்முழிற்சாலைகளில் இக்காலத்தில் செய்யப்படும் பல

வகையான கப்பல்களைப்பற்றி இங்கு விரித்துக் கூறுதல் முடியாது. போர் செய்யும் காலத்திலும் மற்றக் காலத்திலும் எந்தெந்தக் காரியத்துக்கு வேண்டுமோ அந்தந்தக் காரியத்துக்கு உபயோகமான கப்பல்கள் உண்டு. ஸர் ஹென்றி ஸீகிரேவ் (Sir Henry Seagrave) என்பவர் மணி ஒன்றுக்கு நூறு மைல் வேகமாகச் செலுத்திய மோட்டார்ப் படகு பற்றல் ஆஸ்டிரேலியாவின் விளை பொருள்களை லங்காஷையர் தொழிற்சாலைகளுக்கு எடுத்து வரச் செல்லும் சரக்குக் கப்பல் (cargo boat) வரையிலும், விரைந்தோடும் காவற்கப்பல் (cruiser) முதல் பலமான டிரெட்நாட் (Dreadnought) வரையிலும் தொகுத்துக் கூறமுடியாதபடி அநேக வகையான கப்பல்கள் உண்டு.

பிறப்பொருள் கண்டு பிடித்தும் பெருவியாபாரத்துக் கடையாயிருப்பது ஒன்றும் இல்லை; அவை வகையில் செய்யலாம். ஆனால், கப்பல் செய்வதில் ஆதிக்கம் அவனுக்குக் கடை உண்டு: ஒரு தேசத்தில் எவ்வளவு பொருள் வருவாய் உண்டோ அவ்வளவுக்குத் தகுந்தபடி தான் கப்பல்கள் செய்யப்படும். கப்பல்கள் பெரியனவாய் இருப்பினும் சிறியனவாய் இருப்பினும் அவைகளை எராளமான பொருள் செலவிட்டே செய்தல் வேண்டும். பிரயாணிகள் ஏறிச்செல்லும் கப்பல் ஒன்று கட்டுவதற்குப் பல லக்ஷக்கணக்கான பொருள் செலவிடவேண்டுமாம். சாதாரணமாகப் போகும் வேகத்தைவிட ஒரு கப்பல் அதிக வேகமாகப் போகவேண்டுமானால் ஒரு சாதாரணக் கப்பல் செய்யச் செலவாகும் பொருளைவிட அதற்கு இரு மடங்கு பொருள் செலவாகும்.

சௌகரியம் அளிக்கும் பலவிதமான கப்பல்களைப் பார்க்கிலும் வியாபாரப் பொருள்களை எற்றிச் செல்லும் சரக்குக் கப்பல் ஒரு பிரமாண்டமான பெட்டியைப்

போலிருக்கிறது ; இதில் உள்ள ஒவ்வொரு அங்குல இட
மும் பணமே. ஆனால், இப்படிப்பட்டபோன்ற கப்பலில்
பலமாகச் செய்வதுதான் பெருங்கஷ்டம். இதில், கூரை
யில் மரம்போடுவதுபோல் கப்பலின் பக்கங்களில் இந்திய
மரங்களைப் போட்டுப் பலப்படுத்தியுள்ளனர். இரண்டு அங்குல,
சாமான்களை உள்ளே போகிறபோது நசுங்கி விடாமல்
குஷன்போலிருக்கும். இம்மாதிரி அங்கங்களில் மரம்
போட்டுக் கப்பலை பலப்படுத்தாவிட்டால் கடலின் பெருத்த
தாக்குதலால் பக்கங்கள் உடைந்து நீர்போய்விடும்.
பல நூற்றாண்டுகளாகப் பிறநாட்டு அரசாங்கத்தார் நீர்
யாளர் இப்போதும் இரண்டாந்தரக் கப்பல்களில் சிப்பந்தி
களாகச் செய்யப்படுகின்றனர். இங்கிலாந்தில் ஒவ்வொரு
வகையான சரக்குக்கும் ஒவ்வொரு மாதிரியான கப்பல்
உண்டு. உதாரணமாக, ராணுவர், ரயிட்மை. பயணி
இவைகளைக் கொண்டு போகிறார். ஒரு நாலைந்து மாதங்
களாவது ஆகும். இவ்வகைக் கப்பலில் பிராமண்டாளர்
இருக்கிறார்கள். இவர்களைவிட ஒரு பிரிவினர்தான்
இருக்கிறார். இவர்களைவிட உயர்ந்தவர் பிரிட்டிஷ்
இக்கப்பல்களில் போகும் அபாயகரமான நோய்களில்
இக்கப்பல்களில் உள்ள பொருளாகளைத் தாக்குவதில்லை.
இவைகளில் குளிர்ச்சி அளிக்கும் பந்திரம் ஒன்று உண்டு.
அது செயற்கைக் குளிர்ச்சியை உண்டாக்குகிறது.
இந்த யந்திரம் கெட்டுச் சிறிது நேரம் கெட்டாலும் பெரிய
போலவே ஆபத்தைக்கான பலன் மருத்துவர்கள்
அறிந்துபோகும். சரக்கு அறைகளிலும் குளிர்ச்சி இருக்கச்
செய்யவேண்டியதாகி வெளி உஷ்ணமாகும் இவற்றைத்
தாக்காதவாறு பார்த்துக்கொள்ளவும் பல வகையான யந்தி
ரங்களும் இவற்றில் உண்டு.

நீர்மூழ்கிக் கப்பல்

சண்டைக் கப்பல்களில் எல்லாவற்றிலும் மிகவும் விநோதமானது நீர்மூழ்கிக் கப்பல் (Sub-marine) ஆகும். 1873-ல் ஜூல்ஸ் வேர்ன் (Jules Verne) என்னும் பிரான்ஸ் நாட்டு விஞ்ஞான நவீன எழுத்தாளர் 'கடலின் நீர்ப் பிரதிநிதி' என்னும் கதைப் புத்தகம் ஒன்று எழுதினார். இக்கதையில் அவர் நீருக்குள்ளே செல்லும் கப்பலைப் பற்றி வருணித்தார். அந்நூலில் அவர் அக்கப்பல் செயல் நுணுக்கங்கள் எல்லாவற்றையும் விவரமாகக் கூறியிருந்தபடியினால், ஒருவரும், அவை வெறுங்கற்பனைகளாக இருந்து அதைப் பொருட்படுத்தவில்லை. அது பயங்கரமான கனவு போல் தோன்றியது. ஆனால், அபிவிருத்தியின் உள்ளமுடியாத சாதனங்கள் சுவாதீனம் பெறுவதற்கு முன்பு சில தினங்களில் பிரெஞ்சுக்காரரான **பூஷ்னேல்** என்பவர் நீர்மூழ்கிப்படகை ஒன்று நிர்மாணித்தார். அதன் பின்பக்கத்தில் வெடிமருந்து வைக்கப்பட்டிருந்தது. அது ஆங்கில நடைய சண்டைக் கப்பலைத் தன்ற இடத்துக்குக் கொண்டு சென்று அங்கு வெடிமருந்தை வைத்துவிட்டுத் திரும்பியது. ஆனால், அதன் முயற்சி வீணாயிற்று. ஆயினும், பூஷ்னேலின் கருத்து பலனளிக்கப்பட்டது. கதையாயிருந்தது கைகூடும் காரியமாக மாறிற்று. அமெரிக்க நாட்டில் நடந்த உள்நாட்டுப் போர்களில் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கொண்டு செய்த பரிசோதனைகள் வெற்றியளித்தன. இப்போது நீர்மூழ்கிக் கப்பல் உலகத்தில் உள்ள ஒவ்வொரு நாகரீகத்தின் கடற்படைக்கும் முக்கிய அங்கமான உறுப்பாகிவிட்டது.

நீர்மூழ்கிக் கப்பல் பெரும்பாலும் தட்டை வடிவமான முகப்பிலைச் சுருட்டை ஒத்திருக்கும். இது தண்ணீரில் பாதி அளவு மூழ்கியிருக்கும்போது இதன் தட்டைபான பாகத்தில் முன் கப்பல் உத்தியோகஸ்தர்களும் கப்பல் வேலையாட்

களுக்கு இருப்பதுண்டு. இத்தகட்டையான பாகத்துக்குப்பக்கத்தில் சிறு ஜன்னல்போன்றது ஒன்று காணப்படும். இக் கோபுரத்தின் வழியாகவே யாவரும் கப்பலுள் துழைகின்றனர். இதன் பக்கத்தில் 'புனல்' போன்றது ஒன்று உண்டு. இது ஆங்கிலத்தில் 'பெரிஸ்கோப்' எனப்படும். இதனால் நீர்மூழ்கிக் கப்பலுக்குக் கண்போன்ற முக்கிய உறுப்பாகும். நாம் இதை நீர்மூழ்கிக் கப்பலின் கண் என்று கூறலாம். 'பெரிஸ்கோப்,' சுற்றியுள்ள பொருள்களின் உருவங்களைப் பிரதிபலிக்கும் காட்டிலாரை சுற்றிலும் கண்ணாடிகளும், கண்ணாடி லென்சுகளும் (lens) அமைக்கப்பட்டுள்ள ஜன்னலாகும். நீர்மூழ்கிக் கப்பல் தண்ணீரில் பாதைந்திருக்கும்போது 'பெரிஸ்கோப்' என்னும் இக்குழாயின் மூன்று கண்ணாடிகளும் சிறிது நிலைதாக்கி நின்று எடுக்கப்படும் பிரதிபலன்று மைல் தூரம் சுற்றிலும் செல்லக்கூடிய கப்பல் முதலான பொருள்களின் உருவங்களைக் காட்டிவிடும்.

கப்பற்றலைவனுடைய அறையின் சுவரில் ஒரு வெள்ளைக் காகிதம் இருக்கும். பெரிஸ்கோபில் காணும் உருவம் பலமுறை பிரதிபலித்து இந்த வெள்ளைக் காகிதத்தில் விழும். இப்படி விழும் உருவங்கள் ஒளிப்படத்தீபத்தில் (Magic Lantern) திரையிற் போய்விழும் உருவங்களை ஒத்திருக்கும். நீர்மூழ்கிக் கப்பலில் 'பெரிஸ்கோப' என்னும் கருவி இல்லாமற்போனால் அது ஒன்றுக்கும் பயன்படாது.

நீர்மூழ்கிக் கப்பலை இயக்குதற்கு அதில் எஞ்சின்கள் உண்டு. இந்த எஞ்சின்களுக்கு நிலக்கரியை உபயோகித்தால் புகை வெளியே வரும். யாராவது புகையைக் கண்டு கப்பல் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கலாம். ஆகையால் இப்படி ஒன்றும் நிகழாதிருக்குமாறு இந்த எஞ்சின்களில் நிலக்கரி உபயோகிக்கப்படாமல் சுத்தம் செய்யப்பட்ட பெட்ரோலியமாகிய காஸொலீன் (gasoline) உப

மாகிக்கப்படுகிறது. நீர்மூழ்கிக்கப்பல் தண்ணீரில் மூழ்கியதும் உள்ளிருக்கும் பிராணவாயு அசுத்தமாகாதிருக்குமாறு எஞ்சின்கள் நிறுத்தப்படும். கப்பலில் முன்னமே தொகுத்துவைத்த மின்சாரத்தின் உதவியால் எஞ்சின்கள் வேலைசெய்து கப்பலை நீர்க்குள் இயக்கும். நீர்க்கீழிருக்கும்போது கப்பலினுள் உள்ளார் உட்கொள்ளுவதொருட்டும் பிராணவாயு அந்த அழுத்தமாக அடைக்கப்பட்டுள்ள சிலிண்டரிலிருந்தும், சிறிது சிறிதாக வெளிவருகிறது. அவர்கள் விடும் பிராண வாயுவை உட்கொள்வதற்கு அது எவ்வளவில் உற்பத்தியாகிறதென்பதை அறிவதற்கு மானோமீட்டர் (Mano-meter) என்னும் கருவியும் வைக்கப்பட்டிருக்கிறது.

நீர்மூழ்கிக் கப்பல் முக்கியமாய் வர்த்தகர்களின் கப்பல்களைத் தாக்கி அவற்றை உபயோகப்படுத்தப்படுகிறது. பிறர் இவ்வாறு தாக்கினால் அவர்களிடமிருந்து தப்பிக்கொள்ளும் சக்தி இதற்கு மிகவுமில்லை; ஏனெனில் இதனிடத்தில் சிறிய பீரங்கியே இருக்கிறது. வர்த்தகக்கலாதி பெரும்புரிய வேண்டுமெனில் இதனிடம் பல பெரிய பீரங்கிகள் இருக்கவேண்டுமல்லவா? அவைகள் இதனிடம் இல்லை. அவைகளை இதில் வைத்தாலும், கடல்மேல் நடைபெறும் பலவகைச் சூழ்ச்சிகளை அறிய வேகமாய் ஓடக்கூடிய நிலையில் இது இராது. இது வேகமாய் ஓடிவந்தாலும் சப்தமின்றியும் ஓடவேண்டும். திருட்டுத்தனமாய்ப் பொறுத்திருந்து இது தப்பிப்பிழைக்கும்; இல்லாவிட்டால் கடலுள் ஆழும்; ஏனென்றால் வேறொரு கப்பல் இதன்மேல் சிறிது பட்டாலும் இதனுடைய எஃகு மூடி உடைந்துபோகும். ஆகையாற்றான் இது எப்பொழுதும் கள்ளத்தனமாகவே போகவேண்டும்.

நீர்மூழ்கிக் கப்பலில் இரண்டு ஜதைச் சுக்கான்கள் உண்டு. ஒருஜதை சாதாரணமான முறையில் கப்பலை வலப்புறமாகவும் இடப்புறமாகவும் செலுத்தும். மற்றொரு

ஜைக நீர்மட்டத்துக்குச சரியாக இருந்து கப்பலை நீரில் மூழ்கவும் மேலே எழவும் செய்யும். கப்பல நீரின் ஆழத் நில் ஓடுவது அதன் பலத்தைப் பொருத்திருக்கிறது; அது தன் பலத்துக்குத் தக்கபடி ஆழத்தில் ஓடும். எவ்வளவு ஆழத்தில் கப்பல் ஓடுகிறது என்ற காட்டுதற்கு நீரின் அழுத்தஞ் சக்தி யளக்குங் கருவி ஒன்றைப் அதில் அமைக் கப்பட்டிருக்கிறது. அக்கருவி கப்பல் இவ்வளவு ஆழத்தில் ஓடுகிறது என்ற காட்டும். நீர்மூழ்கிக் கப்பலுக் குள்ளிருந்து நிறுத்தவைத்தல் முடியாது. அது ஒரேயடி யாக மேல் நோக்கி ஓடிக்கொண்டேயிருக்கவேண்டும். மற்றக் கப்பல்களைப் போல் அதை நீர்மட்டத்துக்கு மேலே தான் நிறுத்த முடியாது; இல்லாவிட்டால் அது கடலுக்கு அடியிற் போய் நிற்கவேண்டியதாகும்.

பகைவர் கப்பலைத் தாக்கப் போகும்பொழுது நீர்மூழ்கிக் கப் பலில் வைக்கப்பட்டிருக்கும் கொடிய ஆயுதத்துக்கு டார்ப் பீடோ என்பது பெயர். டார்ப்பீடோ என்பதும் ஒரு சிறிய நீர்மூழ்கிக் கப்பலே. இதில் ஆட்கள் இலலை. இது தானாகவே ஓடும். இதில் கூர்மையான ஊசி உண்டு. இந்த ஊசியின் முனை இருப்பு மூடியால் மூடப்பட்டிருக்கும். இது பகைவர் கப்பலைத் தாக்கப் போகும்பொழுது இதை மூடி யுள்ள மூடி தானாகவே கழன்றுவிடும். கப்பலைத் தாக்கு வதற்குள் ஊசியும் வெளிவந்துவிடும். கப்பலின் கடின மான பாகம் இதில் பட்டதும் இந்த ஊசி டார்ப்பீடோவில் உள்ள வெடியாருந்தை வெடிக்கச்செய்து மிகவும் பலமான சண்டைக் கப்பலையும் தூள் தூளாக உடைத்தெறியச் செய்கின்றது. காரியம் வெற்றியுறுவதும் தோல்வியடைவ தும் நீர்மூழ்கிக் கப்பலின் பக்கத் துவாரத்திலிருந்து பார்த்து விடும் குறியையே சார்ந்துள்ளது.

கப்பல் முன்னேற்றத்தால் கண்ட பலன்

நீராவிக்கு இயக்குஞ் சக்தி உண்டு என்று கண்டு பிடித்திருந்தும் மனிதன் போக்குவரத்துச் சாதனங்களிற் பெரிய மாறுதல்களைப் புகுத்திவிட்டதை நீங்களே அறிந்து கொண்டிருப்பீர்கள். இக்காலத்தில் மனிதனுக்குத் தூரத் தடைப்படுத்திக் கொண்டு இல்லை. பூமியில் உள்ள இடங்கள் எல்லாம் இணைக்கப்பட்டுவிட்டன. எதுவும் புதுமையாகவும் இல்லை; தெரியாததாகவும் இல்லை. இந்தியாவின் கடைகளில் மேலைநாட்டு மாதங்களின் பழங்கள் மாதங்களிலிருந்து அனுப்பப்படும் புதியவைகளாகத் தொண்டுபடுத்தி விற்கப் படுகின்றன. அதே போலவே நித்தமாட்டிற் கிடைக்கும் விலை பொருள்களும் மேலைநாட்டுக் கடைகளில் விற்பனைக்குச் சித்தமாய் இருக்கின்றன. உலகமே இப்போது ஒரு பெரிய கடைவீதியாக இருக்கிறது. மக்கள் யாதொரு கஷ்டமும் இல்லாமல் மனத் திருப்தியோடு பொருள்களை வாங்கவும் விற்கவும் செய்கிறார்கள்.

அத்தியாயம் IV

ஆகாய விமானம்

பறக்க முயற்சி

நாம் பண்டை இதிகாசங்களாகிய இராமாயண பாரதங்களில் அரசர்கள் விமானங்களில் ஏறி ஆகாயமார்க்க மாகச் சென்றதாகப் படிக்கிறோம். அயோத்தி மன்னனாகிய இராமபிரான் இராவணனை இலங்கையில் வென்ற பின்பு, நாயகி சீதாபிராட்டியோடும் தம்பி இலக்குமணனோடும் நண்பன் ஹனுமானோடும் அயோத்திக்கு விமானத்திற் பறந்து சென்றதாக இராமாயணம் கூறுகிறது.

இக்கதையை உண்மை என்றுவது பொய் என்றுவது

சொல்வது மிகவும் கடினம். இந்தப்பக்கம் ஆகாயத்திற் பறந்து செல்லும் விந்தையை அறிந்திருந்தபோதிலும் அது சரித்திரத்தில் எழுதப்படுவதற்குமுன் மறந்து போயிருந்திருக்கலாம். ஆனால், அக்கலை மக்கள் பறவை யினத்தினாற் செய்யப்பட்டிருப்பதாக ஆசைப்பட்டார்கள் என்பதையும், வானவெளியாகவும் நாகரிகமாயும் செல்வது இன்பமாயிருக்குமென்று அவர்கள் உணர்ந்தார் கள் என்பதையும் காட்டுகிறது. பண்டைக்காலத்திலிருந்தே சிலர் ஆகாயத்திற் பறக்கவும், ஆகாயத்திற் பறப்பதனால் வரக் கூடிய உணர்ச்சியை அனுபவிக்கவும் ஆசைப்படவும் முயன்றும் வந்தார்கள். இத்தாலியராகிய லியோனார்டோ டி வின்சி (Leonardo de Vinci) என்பவர் பறக்கும் இயந்திரம் செய்யக்கூடிய வழிகளை ஆராய்ந்துகொண்டிருந்தார். ஆனால், சாதனம் உபயோகமாக இங்கிலாந்தைப் பிடித்ததற்கு முன்னரோ அங்கிலோ சாக்ஸனியரின் ஒருவர் ஸ்பெயின் தேசத் திற் பறக்க முயன்றதாக ஒரு காலவரையான கதை வழங்கி வருகிறது. உண்மையில் 1785-ம் ஆண்டிற்முன் ஆகாயத்திற் பறந்தசெல்லுதற்கிட்டமான முயற்சி நடந்தது.

புகைக் கூண்டு

பிரான்ஸ தேசத்திலுள்ள மாண்ட்கோல்வியோர் (Montgolfier) என்னும் காகிதவியாபாரி ஒருவர் இருந்தார். அவரு டைய பிள்ளைகள் இருவரும் புகைக்கூண்டு முன்று செய்து, அதில் ஆடு, கோழி, வாத்து ஆகிய மூன்றையும் கூடை ஒன்றில் வைத்துக்கட்டி அதைக் கீழே பறந்துபோகும்படி விட்டனர். இக்கூண்டு இவைகளைத் தூக்கிக்கொண்டு, மணி தன் பறக்க முயற்சி செய்வதற்கு முன்னரோ ஆகாயத்தில் தெரியாத இடங்களில் எல்லாம் 1500 அடி உயரம் அலங் காரமாய்ப் பறந்து அந்த உயரத்திற் சிறிது நேரம் தங்கி யிருந்து பின்பு மெதுவாகக் கீழே இறங்கியது.

அதே ஆண்டில் பறப்பதற்கு மற்றொரு முயற்சி நடந்தது. அப்போது ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தவர்களாகிய எம். ரோஸியர் (M. Rozier) என்பவரும் மேஜர் ஆர்லாண்டி (Major Arlande) என்பவரும் புகைக் கூண்டில் ஏறிச் சென்றனர். ஆயிரக்கணக்கான ஜனங்கள் இத்துணிகரமான செயலின் முடிவு என்ன ஆகும் என்று ஆவலாய் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆகாய கப்பல்களை முகமலர்ச்சியோடு தங்கள் தொழிலாகவே எடுத்து ஓட்டிக்கொண்டே சென்றார்கள். இவர்கள் அரைமணி நேரம்



புகைக் கூண்டு

ஆகாயத்தில் இருந்தார்கள். இப்புகைக் கூண்டு தரை மட்டத்துக்குமேல் 3000 அடி உயரம் சென்றது.

1783-ம் ஆண்டிற்றான் பறப்பதற்கு வியக்கத்தக்க முயற்சிகள் நடந்தன. மூன்றாம் முயற்சி நடந்த இம்முறையில் பிரான்சு தேசத்தவராகிய சார்ல்ஸ் என்பவர் கூண்டில் ஜலவாயுவை நிரப்பி அதில் ஏறிச்சென்றார். புகைக் கூண்டு கண்டுபிடிக்கப்பட்டதும், இதன் உதவியால் சிலர் இங்கிலீஷ் கால்வாயையும் கடந்தனர். இதற்குப் பின்பு, பிரான்

சில படிகளைக் கூண்டிலுள்ள பறவைகளைப் பற்றிய ஆராய்ச்சிகள் அதிகமாக வளர்ந்தன. அவற்றை பிரான்சு விஞ்ஞான கலைஞர்கள் ஆகாயத்திலும் பறந்து பார்த்தார்கள்.

ஆகாய விமானம்

[illegible] ஆகாயத்திலும் பறவைகளைப் போல் [illegible] விசையை விருத்தி செய்ய [illegible] அதிர்ஷ்டமான [illegible] பறவைகளைப் போல் [illegible] அவர்களுடைய [illegible] அவர்களுடைய [illegible] அவர்களுடைய

என்று காட்ட அவர் மாதிரி யந்திரங்களையும் செய்து காட்டினார். இப்படி அவர் பரிசோதனைகளால் நிரூபணம் செய்து காட்டியும் ஒருவரும் அவருடைய கொள்கையையும் மனிதன் பறக்கக்கூடும் என்பதையும் நம்பவேயில்லை.

ரைட் சகோதரர்கள்

அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சார்ந்த ஓஹியோ நாட்டில் உள்ள டெயிடன் (Dayton) என்னும் பட்டணத்தில் ஓர்வில் ரைட், வில்பர் ரைட் என்ற இரு சகோதரர்கள்

Photo: Rischgitz

வில்பர் ரைட்

அவிச்சக்கரம் செப்பனிடும் சிறு தொழிற்சாலை ஒன்று வைத்திருந்தார்கள். இவ்விருவர் மாத்திரம் பேராசிரியர் லாங்க்லியின் கொள்கையை நம்பினர். இந்தச் சகோதரர்கள் விஞ்ஞான கலைஞர்கள் அல்லர்; கல்லூரியிலோ சர்வகலாசாலையிலோ படித்தவர்களும் அல்லர்; ஆனால், எந்தச் சாமான்களையும் தாங்களே செய்துகொள்ளுந் திறமையை

யும், பொருள்களைக் கூர்ந்து நோக்குந் சக்தியையும், அவை சரமாகத் தீர்மானிக்குங் ஆத்திரம் இலலாமையையும், கண்ட உண்மைகளைக் கடைசிவரைக்குங் பரிசோதிக்கும் ஆற்றலையுங் பெற்றிருந்தபடைன். அதாவது,பறப்பதைப் பற்றிய சாஸ்திரோக்தமான கொள்கைகளை அறியும் ஆற்றல் அவனுக்கு இல்லாமற் போயிருந்தால், அவனுடைய ஐதீராபாதிய விஞ்ஞான சாஸ்திரிகளும் அதிபரிக்க அறிவு நூலாராய்ச்சியாளர்களும் அவனைப்பற்றி கொளியிட்டிருந்த பரிசோதனைகளைப் பற்றிய விவரங்களை அறிந்து ஆவலோடு படித்துவந்தார்கள்; விந்தவிடவே, நாடு, அசைவதையும் பறவைகள் பறந்து செல்வதையும் ஆராய்ந்துகொண்டு இருந்தானன்.

விஞ்ஞான சீலஞர்களுடைய கொள்கைகளும் தாங்கள் கண்ட விஷயங்களும் ஒத்துவராமையால் லைட் சகோதரர்கள் பல வருஷங்கள் வரைக்கும் சரியான முடிவுக்கு வராமற் கலங்கி நின்றார்கள். கடைசியில் 1900-ம் ஆண்டின் ஆரம்பத்தில் அவர்கள் தங்கள் கருத்தின்படி விமானம் ஒன்று செய்து பறந்துபார்க்க உறுதி கொண்டார்கள். ஆகையால் இருவரும் வட கரோலினாவில் உள்ள கிட்டி ஹாக் என்னும் இடத்தில் காற்று நிலையாகவும் பலமாகவும் அடிப்பதைத் தெரிந்து கொண்டு 1900-ம் ஆண்டு அக்டோபர் மாதம் அங்குச் சென்று மணல் பரியிற் கூடாரம் அடித்துத் தங்கியிருந்து காற்றின் தன்மைகளை ஆராயலானார்கள்.

இப்படி மூன்று ஆண்டுகள் பொறுமையாக உழைத்துக் காற்றின் தன்மைகளை உணர்ந்த பின்பு 1903-ம் ஆண்டின் இறுதியில் அந்த வீரசிகாமணிகள் தங்களுக்காக மணிக்கு முப்பதுமைல் பறக்கக்கூடிய விமானம் ஒன்று செய்துகொண்டார்கள். அவர்கள் இந்த விமானத்தில் பறவைகளின் சிறகுகள் போன்ற சிறகுகளையும் திசை மாற்றுவதற்குப் பறவைவால்போன்ற சுக்கான்களையும்

அமைத்துவைத்தார்கள். தற்கால விமானங்களுக்கு இருப்பதை ஏறக்குறைய ஒத்திருக்கும் இடம் ஒன்று இதில் இரண்டு சிறகுகளுக்குப் நடுவில் வகுக்கப்பட்டிருந்தது.

'உழப்பின் வாரா உறுதிகள் உளவோ?' இல்லை, இல்லை! கடைசியில் 1903-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ந் தேதி ரைட் சகோதரரில் ஒருவர் முதல்முதலாக இரு சிறை விமானத்தில் ஏறி வட கரோலினாவின் கடற்கரையிற் குளிர்ந்த காற்றிற் பறந்து சென்றார். உலக சரித்திரத்திலே முதல் முதல் தானாக ஆகாயத்தில் எழுந்த இவ்விமானம் யாதொரு விபத்தும் இன்றி நான்கு முறை ஆகாயத்திற்



[Photo: Rischgitz
By courtesy of Science Museum, South Kensington
ரைட் சகோதரர்கள் செய்த ஏரோப்ளேன்

பறந்தது. நான்காவது முறையில் இந்த விமானம் நாற்பத் தொன்பது விநாடி நேரம் ஆகாயத்தில் 850 அடி தூரம் இடைவிடாது பறந்து சென்றதாம். இப்போது ரைட் சகோதரர்களுடைய முயற்சி வெற்றிபெற்றது. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்பது பொய்யாகுமோ? சகோதரர்கள் தங்கள் வெற்றியைக் கண்டு மகிழ்ந்தார்களேனும் அவர்கள் அதைப்பற்றி விளம்பரப்படுத்திக் கொள்ளவில்லை. வில்பர் கூறியபடி ஆகாய விமானத்தில்

எறிச்செல்லும் காலம் கடைசியில் வந்துவிட்டது! வந்து விட்டது! முடியாத காரியமும் முடிந்து விட்டது!

சைட் சகோதரர்களுக்கு உண்டான வெற்றியினாலும் 1914-18-ல் நடந்த ஐரோப்பிய மகா யுத்தத்தாலும் ஆகாய விமானக் கலையில் திடீர் முன்னேற்றம் ஏற்பட்டது. சைட் சகோதரர்களின் பிரயத்தனமும் ஆலோசனையும் இருந்ததால் அவர்கள் தங்கள் விமானத்தைப் பறக்கச் சாராசரி பத்தி ரிகைகளில் விளம்பரஞ் செய்து கொண்டார்கள். இதனால் அவர்களுக்கு நிறைய ஆர்டர்கள் வந்தன. இதற்கு முன்னால் ஆர்டர்கள் வரவில்லை. இந்தப் போர் நிறுத்தத்தின் ஐரோப்பாவில் பற்ற நாடுகளில் இருந்து யாரும் விரும்பவில்லை, அவர்கள் தங்கள் கொள்ளை நோயைக் கொண்டு அவர்கள் செய்த தைப் போன்ற விளையாட்டுகளை செய்தார்கள். இதற்காக சைட் சகோதரர்களுக்குப் பெரிய ஆர்டர் ஒன்று மட்டும் கிடைத்தது. மிகப் பெரிய 1912-ல் இருந்தார். ஆனால், அவர் இப்பதற்கு முன்னால் பல நாடுகளும் அவரை அடைந்து விட்டன. இவ்வாறு சகோதரர்களும் உலகத்தில் தங்களுடைய அரியாசனத்தை நிலைநாட்டிவிட்டார்கள். ஐரோப்பாவில் அரசாங்கமும் உள்ள முக்கியமான நாடுகளில் இருந்தும் சர்வகலாசாலைகளும் கலைக்கழகங்களும் அவர்களை வரவழைத்துக் கௌரவப்படுத்தின.

1914-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 4-ந் தேதி ஆரம்பித்த ஐரோப்பிய பெரும்போரில் ஆகாய விமானம் பயங்கர மான போர்க் கருவிகளில் ஒன்றாக உபயோகப்படுத்தப்பட் டது. இரு பக்கத்தினரும் இதை மக்களை அழிக்கும் இரு வான தொழிலுக்குப் பயன்படுத்தினார்கள்.

ஏரோபிளேன்

ஆகாய விமானத்தில் இருவகை உண்டு. ஒருவகையை நாம் ஏரோபிளேன் என்கிறோம். ஏரோபிளேன் என்பது

காற்றைக் காட்டிலும் கனமான விமானம். தரையிலிருந்து மேலே எழுவர், ஆகாயத்தில் தங்கவும், கொஞ்சதூரம் சாரதியின் இஷ்டம்போல் கீழே இறங்கவும் இதற்குச் சக்தி உண்டு. ஓராள் விமானம் முதல் சில டன் எடையுள்ள பார்சல்களையும் கடிதங்களையும் ஆள் ஆட்களையும் ஏற்றிக் கொண்டு போகும் பிரயாண விமானம் வரையில் உள்ள எல்லா விமானங்களுக்கும் பறவைகளுக்கு இருப்பது போன்ற அமைப்பே உண்டு. விரைவாகப் போவதற்கும் அதிக உயரம் பறப்பதற்கும் காற்றை வெற்றி கொள்வதற்கும் இதைவிட நல்லது இல்லை. இப்போது விமானிகள் பலவித ஆச்சரியமான வித்தைகளைச் செய்கிறார்கள். மணி ஒன்றுக்கு முந்நூறு மைல் பறக்கிறார்கள்; சில கட்டடங்களின் மேல் சில கஜ தூரத்தில் பறக்கிறார்கள்; கரணம் போடுகிறார்கள். இவ்வளவு நிபுணமையும் இப்போது ஏற்பட்டு விட்டது.

ஜெப்பலின்

ஆகாயக் கப்பல் மற்றொருவகை ஆகும். இது **ஜெப்பலின்** எனப்படும். இது மிகவும் ஆச்சரியமானது. இது எறக்குறைய நீராவிப் படகு போல் இருக்கும். இது புகைக் கூண்டிலிருந்து வந்த அரிவிருத்தி எனலாம். ஆனால், புகைக் கூண்டைப்போல் இது காற்றடிக்கும் பக்கமாகப் போக வேண்டியதில்லை. அதிக லகுமை உள்ள எஞ்சின் இதில் இருப்பதால் இது ஆகாயத்தில் நாம் விரும்பும் திசைகளிலெல்லாம் போகும்; ஆனால், எதிராளிமேலும்போல் கீழே வந்திறங்க முடியாது. இதில் உள்ள காற்றுவெளி வராத அறைகளில் காற்றை அடைத்தும் இது அலங்காரமாக ஆகாயத்தில் பறக்கும். உயரத்தை நம்புத்தில் இதைக் கட்டிவைக்கவேண்டும். இந்த ஜெப்பலினில் பிரயாணிகள் ஏறிச் செல்லவேண்டுமானால் அவர்கள் மின்சார ஏற்றத்

தின் (electric lift) மூலமாய்க் கப்பத்தின் முனைக்குச் சென்று அதிலிருந்து ஜெப்பலினுள் நுழையவேண்டும்.

சமீபகாலம் வரைக்கும் இந்த ஆகாயக் கப்பல் பரிசோதனை நிலையிலே இருந்தது. முதல் முதல் பெரிய அளவில் ஆகாயக் கப்பலைச்செய்தவர் ஜெர்மன் யந்திர சாஸ்திர விற்பன்னராகிய ஜெப்பலின் பிரபு ஆவர். ஆகையால் அவருடைய பெயரால் ஆகாயக் கப்பல் ஜெப்பலின் என்ற



(R A. F. Official: Crown copyright reserved.

ஜெப்பலின்

பெயரால் வழங்கப்படுகிறது. சென்ற ஐரோப்பிய பெரும் போரில் ஜெர்மன் தேசத்தார் ஜெப்பலினைப் பிரான்சையும் இங்கிலாந்தையும் தாக்கப் பயன்படுத்தினர். ஆனால், இக்காலத்தில் இது பிரயாணிகளை எற்றிச செல்ல உதவுகிறது. ஜெர்மன் தேசத்துப் பெரிய ஜெப்பலின்கள் ஒவ்வொரு முறையும் ஐம்பது பிரயாணிகளையும் சாமான்களையும் எற்றிக்கொண்டு அமெரிக்காவிற்குப் பலதரம் பிரயாணஞ் செய்துள்ளன.

ஆகாய கமன முன்னேற்றம்

உலகத்தில் ஒரு நாகரீகத்தார் மற்றொரு நாகரீகத்தாரைக் காட்டிலும் மேம்பட்டிருப்பதை அவர்களுடைய ஆகாய கமன முன்னேற்றத்தை வைத்து நிச்சயிக்கலாம். ஆகாய கமன முன்னேற்றம் எவ்வளவு விரைவாக நடைபெறுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அந்த நாகரீகம் மேம்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். உதாரணத்திற்காக, ஆகாய விமானத்தின் உதவியால் மனிதர் செய்ய முடியாதவைகள் மிகவும் குறைவு என்று சொல்லலாம். முன்பு நாட்டில் விமானம் மற்றொரு நாட்டை அழிக்க முடியாதிருந்தது. ஆனால் இப்பொழுது அந்த நாட்டு விமானம் வந்து நாட்டை அழிக்க முடியாதிருக்கிறது. ஆகையால் இரண்டு நாகரீகத்தாரும் சமமாகி விட்டனர்.

போர்ட்டினர் இந்த்தகையை கண்டுபிடித்ததால் ஆகாய கமனத்தில் ஒரு பெரிய முன்னேற்றம் ஏற்பட்டது. அதற்கு முன்பு ஒரு ஆகாய விமானத்தில் ஒரு தடவை முழு நாள் ஆகாயவிமானம் பறக்குவதற்கு நிச்சயிக்கப்பட்டிருந்தது. அதாவது ஒரு நாள் காலை 10 மணிக்கு ஆகாய விமானம் புறப்பட்டால் மறுநாள் காலை 10 மணிக்கு அது திரும்பி வந்து சேர வேண்டியிருந்தது. இவ்வளவு நீண்ட தூரம் ஆகாய விமானத்தில் பறக்கும் பொழுது சரியாகத் தூங்க முடியாதிருப்பதால் பிரயாணத்தில் செலவாகும் காலத்தில் மூன்றில் இரண்டு பங்கு தூங்காமலே இருக்க வேண்டியிருந்தது. மிகச் சமீப காலத்தில் இங்கிலாந்தைச் சார்ந்த ஏமி ஜான்சன் (Amy Johnson) என்னும் அம்மையார் இங்கிலாந்திலிருந்து ஆஸ்டிரேலியாவிற்கு 16 நாளில் தூரத்தை பறந்து சென்றதால், நாம் அதிகமான தூரத்தையும் நிச்சயிக்கமுடியாத மிகக் குறுகிய காலத்தில் கடந்துவிடலாம் என்று அறிகிறோம்.

இனி வருங்காலத்தில் ஆகாயக் கப்பல்களும் ஆகாய விமானங்களும் பெரிய நிலையை அடைவதாகும். பறவைகள் அடர்ந்து போவதைப்போல் பக்கங்களும் அடர்ந்து விமானம் கிற் போவார்கள். ஆற்றில் இன்பத்துக்காகப் படகை

ஒட்டி வானூர்திகள் ஆகாயத்தில் விரைவாகச் செல்லும் வேடிக்கை யாகச் சில குறிப்புகளைப் பார்க்கலாம். இரு புள்ளிகளை ஒன்றோடு ஒன்று இணைக்கும் கோடுகளைக் கொண்டிருக்கலாம். இப் போன்ற வரைபடங்களை நாம் நாளேடுகளில் அடிக்கடி பார்க்கிறோம். ஆகாய விரைவு வண்டிகள் அடிக்கடி ஓடும் நகரங்களைக் கோடுகளால் இணைத்துக் காட்டியிருப்பார்கள். அதே போல் நாடுகளை இணைக்கும் ஆகாய விரைவு வண்டிகளின் பாதைகளையும் வரைபடங்களில் காட்டுகிறார்கள்.

ஆனால், இவை போன்ற வரைபடங்களை நாம் ஒரு முறைதான் பார்க்க வேண்டியிருக்கும். மறுமுறை அவற்றைப் பார்க்கும்போது அவை நமக்கு ஒரு புதுமையாகத் தோன்றாது. அவற்றைப் பார்ப்பதில் நமக்கு ஆர்வமும் இருக்காது.

அத்தியாயம் V

அதிசய சக்தி

பண்டைக்காலமும் மின்சாரமும்

நீராவி யந்திரம் மனிதனுடைய வாழ்க்கையில் ஒரு புரட்சியை உண்டாக்கியது என்று சொல்லலாம். ஆனால், மின்சாரம் மனிதனுடைய வாழ்க்கையில் ஏற்படுத்தியிருக்கும் மாறுதல்கள் அதைவிடப் பன்மடங்கு அதிகமானவை என்று சொல்லலாம். இந்த மின்சார சக்தியைப் பற்றி நாம் ஒன்றும் தெரிந்து கொள்ளாமலே நம் வாழ்நாளில் பாதி காலம் கழிந்து விட்டது. ஆனால் இப்போது மின்சாரத்தைப் பற்றி நமக்கு ஓரளவு பூரணமான அறிவு ஏற்பட்டிருக்கிறது. மனிதன் மின்சாரத்தை எவ்வளவு தூரம் ஆளுகைக்குள் கொண்டு வந்திருக்கிறான் என்பதை அறிந்து கொள்ள வேண்டுமானால் முதலில் மின்சாரம் என்ன என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். மின்சாரத்தைப் பற்றி ஒன்றும் இல்லை என்று அறிந்திருப்பார். மின்சார மண்டலத்தில் உள்ள தாமிரக் கம்பியை எடுத்துக்கொண்டு அதைக் கையில் பிடித்துக்கொண்டாலும் அவ்வளவு எளிதாக நாம் சாகமாட்டோம். இதை நினைத்தால் மனிதனுக்கு ஒரே சமயத்தில் இரண்டு எண்ணங்கள் தோன்றுகின்றன. மனிதன் மின்சாரத்தைப் (switch) போட

வேண்டியதே தவிர வேறெதுவும் செய்யவேண்டிய தில்லை. பிடியைப் பொருட்படுத்தாமல் மின்சாரம் ஓடிவந்து விளக்கை எரியச் செய்கிறது; பிடியை நீக்கினால் தன்னிடம் அது தன் கண்ணுக்குத் தெரியாமல் மறைகிறது.

இலக்ட்ரிசிட்டி என்னும் சொல் கிரேக்கச் சொல்லுக்குச் சமமான லத்தீன் சொல்லாகும். இதன் பொருள் அம்பர் என்பதாகும். அம்பர் என்னும் ஒரு வகை மரப்பிசினைத் தேய்த்தால் அதில் இலேசான பொருள்களை ஈர்க்கும் சக்தி உண்டாகிறது. கிரேக்கர்கள் இவ்விஷயத்தை நன்கு அறிந்திருந்தார்கள். பல நூற்றாண்டுகளாக மின்சாரத்தைப் பற்றி இவ்விஷயம்தான் தெரிந்திருந்தது. அதற்கு மேல் ஒருவரும் ஆராயவில்லை. இருபதாம் நூற்றாண்டு தொடங்கிவிட்டதால் மேற்குலகில் மின்சாரத்தைப் பற்றி ஏராளமான விஷயங்கள் தெரிய வந்திருந்தன. அக்காலத்தில் அறிந்திருந்தனர்.

பெஞ்சமின் பிராங்கிளின் மின்சாரத்தைப் பற்றியும் காந்தத்தைப் பற்றியும் இவ்வளவுதான் தெரிந்திருந்தது. விஞ்ஞான மேலைநாட்டார் மின்சாரத்தை இன்னும் அதிகமாக ஆராய்ந்தார்கள். இப்போது நாம் அனுபவித்து வரும் அறிவு அதிகமாக விருத்தியடைந்துள்ளது. ஆனால், பதினேழாம் நூற்றாண்டிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பம் வரைக்கும் அறிந்திருப்பவன்படைக்கூடிய விஞ்ஞான மின்சாரத்தைப்பற்றி ஒன்றும் சொல்லிவிடக்கூடாது. மின்சாரமும் அதன் மாய இயற்கையும் இன்னும் விஞ்ஞான மேலைநாட்டார்களுக்கு அறியாத விஷயங்களாகவே உள்ளன.

மின்சாரத் துறையில் உழைத்தவர்கள்

பெஞ்சமின் பிராங்கிளின்

பெஞ்சமின் பிராங்கிளின் அவர்கள் ஆராய்ச்சிகள் செய்து பின்பு மேலைநாட்டில் காணப்படும் மின்னலும் மின்சாரத்தை

ழுந்தும்பு கவ்வு கூடினார். கலிலஞாகன் விருந்தாலர் உணைக்கு பின்னாரமுடர் கவர்கருமுர் ஒன்ற என்றும், ஒன்னை மருவென்றாக மருவுமுவர் என்றும் கண்டுபிடித்து காயகர்.

மைக்கல் பாரடே

இரசிய உண்மைகளைக் கண்டுபிடித்தகால பின்சாரம் மனிதனுக்கு அதிக உபயோகமாகவும் இயக்கு சக்தியாக வும்படுவிட்டது. இது சாரமடைய பின்சாரத்தைப் பயன்படுத்தி வைனமோ, ஒளியை பின்னும் பின்சார ஜனனியும் இவ்வுண்மைகளைக் கண்டுபிடிப்பு செய்யமாகி மைக்கல் பாரடே (Michael Faraday) என்பவரைப் பற்றிக் கூறுகிறோம். இவர் ஏழை குடும்பத்தில் பிறந்தார். இவர் சிறு வயதில் புத்தகங்கள் கட்டும் தொழில் (book-binding) செய்து வந்தார். புத்தகங்களை விற்பனை செய்பவனிடம் வேலைக்கு அமர்ந்தார். அப்போது இவர் சில பரிசோதனைகளைச் செய்து வந்தார். இவரது ஆர்வத்தைக் கண்ட ராயல் அரசாங்க விஞ்ஞான சாலையின் அதிபர் டேவி அவர்கள் இவரை அழைத்து வேலை கொடுத்தார். அவ்வாறு அங்கு வேலை செய்து வந்தார். இவரது ஆராய்ச்சியில் மனம் ஈடுபட்டதைக் கண்ட அதிகாரிகள் இவருக்கு அக்கலாசாலையின் பரிசோதனைச் சாலையில் உதவியாசிரியர் வேலையைக் கொடுத்தார்கள். சுரங்க விளக்கைக் கண்டுபிடித்த ஸர் ஹம்ப்பிரி டேவி (Sir Humphry Davy) என்னும் புகழ்பெற்ற விஞ்ஞான கலைஞரோடு அங்கே இவர் வேலை செய்துவந்தார். அப்பொழுது இவர் ரசாயன ஆராய்ச்சியில் சிறந்து புகழ்பெற்றிருந்தார். ஹம்ப்பிரி வேலையிலிருந்து நீங்கியதும் இவர் அந்தக் கலாசாலையின் டைரெக்டராக நியமனம் பெற்றார். இவ்வேலைக்கு வருவதற்கு முன் இவர் மின்சாரத்தைப்பற்றிய ஆராய்ச்சி ஒன்றும்

செய்யவில்லை ; இவ்வேலைக்கு வந்தபின்பே இவ்வாராய்ச்சி யில் இறங்கினார். 1831-ம் ஆண்டில் இவர் அநேக பரீக்ஷா தணைகள் செய்து காந்தத்தையும் மின்சாரத்தையும் பற்றிய



மைக்கல் பாரடே

பல உண்மைகளைக் கண்டுபிடித்தார். இவ்வுண்மைகளை அடிப்படையாகக் கொண்டுதான் மின்சார விசிறி, மின்சா ரத் தண்ணீர்ப் 'பம்புகள்' முதலியவைகளும், வீடுகளிலும்

தொழிற்சாலைகளிலும் வேறு எவ்விடங்களிலும் உபயோகப்படுத்தும் மற்ற யந்திரங்களுமுள் செய்யப்பட்டிருக்கின்றன.

பாரதியின் விஞ்ஞான ஆராய்ச்சித் திறமை காடெங்கும் பரவிய ஆங்கில வாழ்விலும் பிறநாட்டிலும் உள்ள தொழிற்சாலை முதலாளிகள் யாரும் ஆராய்ச்சித்திறனையே விலைமதித்து தங்களுக்கு நல்ல பணம் கொடுத்து வேலைக்கு வைத்துக்கொள்ளுகிறார்கள்; அதற்காக யாவரும் பொருள் அனுப்பி அவரை வரவழைக்கிறார்கள். பாரதி இவ்வாறு வேலைக்குச் சேர்ந்து அதிக சம்பளம் பெற்றுக்கொண்டு வாழ்வதை விஞ்ஞான சக்தி ஆராய்ச்சித்துறையில் ஈடுபடாமல் தொழில் செய்வதாகும்; பொருள் முயற்சியில் ஈடுபட்டு தன் கருவிகளை விலைக்கு விற்பதாகும். இவ்வாறு தான் ஒரு விஞ்ஞான சக்தியை பயன்படுத்திக்கொள்ளுவதில் முதலாளிகளுக்கு நன்மை ஏற்படுகிறது. இவ்வாறு பொருள் பெற்றுக்கொண்டு ஆராய்ச்சி செய்வதில் விஞ்ஞானிக்கு ஒரு சுதந்திரமும் இல்லை; அவர் நினைத்தபடி ஆராய்ச்சி செய்ய முடியாது. தான் விஞ்ஞான சக்தியை பணத்துக்கு விற்றுவிட்டதால் முதலாளியின் ஊழியராக கருதப்படுகிறார். ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு முன்னரே அவர் தன் சுதந்திரத்தை இழந்துவிடுகிறார்.

பாரதியின் காலத்திலிருந்து இன்னும் அதிகமாக ஆராய்ச்சி விரிந்துகொண்டே சென்றது. அநேக செயலகளும் பொருள்களும் மின்சாரத்தின் உதவியாலே கடைபெறுகின்றன என்று சொல்லவேண்டியதில்லை. பேச்சுத் தந்தி, மின்சாரத் தந்தி, அசைபடங்கள், ஆகாயத்தந்தி, தூர சிரவணி (Wireless Telephone), மின்சாரக் கதிர்கள் (X-Rays), மின்சார ரெயில்வண்டி, இன்னும் மின்சார யந்திரங்கள் ஆகிய இவைகளை இதற்குச் சில உதாரணங்களாகக் கூறலாம். இப்படியானில்லை வாழ்க்கையின் எந்தத் துறையிலும் இந்தியாவின் அதிகமாய் எந்தப் பட்டணத்திலும் மின்சாரத்தால் நடவாத காரியங்கள் கிடையா. பின்வரும் அத்தி

யாயத்தில் ஆச்சரியமான மின்சார மந்திரங்களைப் பற்றிக் கூறியிருப்பார். இந்திய மின்சாரர் என்ன என்பதைப் பற்றி யும், மற்றவைகளைவிட அதிக மின்சார மந்திரங்களைக் கண்டுபிடித்தவரைப் பற்றியும் தெரிவித்திருப்பார்.

மின்சாரம்

மின்சாரம் எல்லாரும் தினமுமனுபவிப்பதால் அறியப்பட்டி ருக்கிறது. மின்சாரம் நிலையாகவோ அல்லது இயங்கியோ இருக்கலாம். நிலையாயிருப்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு மின்னல். இயங்கியதற்கு ஓர் எடுத்துக்காட்டு தந்திக் கம்பிகளில் ஓடுகின்ற மின்சாரம். அதுபோல் மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது. மின்சாரம் விளக்கு எரியச் செய்கின்றது, வண்டி, தொழிற் சாலைகளின் மோட்டார்களை சுழலச் செய்கின்றது, தொலைபேசியில் பேசுவதற்கு உதவி புரிகிறது. மின்சாரம் நம் பெயருடன் அன்று. முன்னோர் செய்ததைப் பின்பற்றியும் மனம் போனபடி பிறருக்குகளிலும் உண்மை சுருக்கி ஆராய்ந்து பல நூல்களை உடைத்து அணுக்களாகப் பிரித்தனர். அந்த அணுக்கள் ஒரு வகையாக எளிதாகப் பிரித்துவிட்டனர். மின் சாரத் துணுக்குக்களால் ஆகியுள்ளன. இந்த அணுக்களில் உள்ள மின்சாரத்தை வெளிப்படுத்தினால் மின் சாரம் உண் டாகிறது. சுருக்கம், எல்லாவிடமும் உள்ளதாகுங்களில் மின் சாரம் எளிதாக வெளிப்படுத்தப்படுகிறது; இதனாலேயே ஓரிடத்திலிருந்து மற்றொரிடத்துக்கு மின் சாரத்தைக் கொண்டுபோகச் செப்புக்கம்பிகளை உபயோகிக்கிறார். பிங்கான் போன்ற பொருள்களினாலாது மின்சாரத்தைக் கஷ்டப்பட்டு உண்டாக்கவேண்டும். ஆகையால், மின் சாரம் தரையில் இறங்காதபடி தடுக்கும் கருவியாகப் பிங்கான் உபயோகப்படுகிறது. மீங்கள் தந்திக் கம்பங்களின்மேல் பார்க்கின்ற கிண்ணம் பிங்கானால் செய்யப்பட்டதே.

எடிசன்

[illegible] வகைக் [illegible]. டாம்சன் (Thomson), ரான்ட்ஜென் Rontgen, ரூதாபோர்ட் (Rutherford) ஆகிய [illegible] (matter), சக்தி (energy), பிரபஞ்சம் (universe) [illegible] கூறுள அற்புதமுடையன் என்பதாகிவிட்டனர். உலகமானது உண்மைக் [illegible] அவர்களுடைய [illegible] எடிசன் என்பவரை [illegible] ஆகும். இந்த நூற்றாண்டில் [illegible] பிறந்து [illegible] எடிசன் [illegible] ஆகும். [illegible] அவர் [illegible] அவர் [illegible] அவர்

கவ்வி நிற்கும். மாறுபாடான நிறமுடையது. இவ்வரிய மலரைக் காண்பவர்கள் அவரை வெற்றி மாலை வெற்றிவாழ்வார். வரர் ரான் கவனிக்க வேண்டிய ஒன்று, பிறவிப் பெருமூடர்களான அவர் உண்மை ஞானத்தை (genius) என்பது அவரது மூளையாகிறது. ஒன்றை பார்த்து அதைக் கொண்டிருக்கும் ஆனால், கவனிப்பதற்கு பிறரோடு தொடர்பைத்தேடிக் கொண்டிருப்பதாகும். அவர் பல நாட்களாகத் தூங்காமலே பெரிய தொய்வாக. எந்தப் பிரயோஜனமும் வயதிலும் அவருடைய நினைவிலும் மனக்கவர் அவரிடத்திலிருந்து குறையவில்லை. அவருடைய வாழ்க்கை மிகவும் ஆச்சரிய மானது. அவருடைய வரலாறு பாக்கும்பொழுது ஆறுதல்களை விருந்திற்கு போய்ப்பார்த்தோர் எல்லாரிலும் ஜூயர்ல்லை.

வடிசன் அவர்களுக்கு ஐக்கிய மாகாணங்களில் ஒரு பகுதியான மிச்சிகன் மாநிலத்தில் மைலன் என்னும் சிறு பட்டணத்தில் 1847-ல் அன்பு பெற்றோர்கள் 11-ம் பிள்ளைகளில் அவருடைய நான்காவதாக ராமுவேல் எடிசன் அவர்; தாயார் மான்செஸ்டரில் பிறந்தவர். எடிசன் சின்னஞ்சிறு பருவத்திலேயே எதையும் ஆழ்ந்து நோக்குவார். சிந்தனையாளராய் விளங்கினார். இளைஞரான வடிசன் மனதிலும் அறிய ஆவல் கொண்டிருந்த காலை அவர் ஆசிரியரைக் கேள்விமேல் கேள்வி கேட்டதால், அந்த ஆசிரியர் வடிசனை மாணவன் என்றே நினைத்துவிட்டார். ஆகையால், சில மாதங்கள் ஆசிரியராக இருந்த மான்சி அப்பையா வடிசனை இரண்டரை மாதங்களுக்குப் பின்பு பள்ளிக்கூடத்திலிருந்து நிறுத்தி, வீட்டிலேயே அவருக்குக் கல்வி கற்பித்து வந்தார். எடிசனும் வெகு சிக்கிரத்தில் கல்வியில் முன்னேறிக் தாய்மாமனுடைய வீட்டில் ஓர் அறையில் சிறு பரிசோதனைக்களம் ஒன்றும் ஸ்தாபித்து விட்டார்.

வாடி சென்னிரவன்டி கையெழுத்தில்லை என்பதை அதிர்ச்சியுடன் உறுதிசெய்துகொண்டாள். அன்று மதியம் ஒரு அவசர வழக்கை தொடர்பாகவான மரியாதைக்குரிய நீதிபதி அவர்களை நேரில் சந்திக்க வேண்டி அவர் வீட்டுக்கு சென்றிருந்தார். அவர் அவளை வரவேற்று அமரச்சொல்லி விட்டு, அவள் வந்த காரியத்தை கேட்டறிந்தார். அவள் கையில் வைத்திருந்த ஒரு ஆவணத்தை அவரிடம் நீட்டினாள். அது 1869-ல் அச்சடிக்கப்பட்ட சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினர்களின் பட்டியல் அடங்கிய புத்தகம். அதில் அவர் பெயர் இருக்கிறதா என்று பார்த்துச் சொல்லும்படி கேட்டுக்கொண்டாள். அவர் அந்தப் புத்தகத்தை வாங்கி பக்கங்களைப் புரட்டி பார்த்துவிட்டு, அதில் அவர் பெயர் இருப்பதாகச் சொன்னார். அவள் அவரிடம் தான் கொண்டுவந்திருந்த கையெழுத்து பிரதியை நீட்டினாள். அதில் இருந்த கையெழுத்தும் அச்சடிக்கப்பட்ட புத்தகத்தில் இருந்த கையெழுத்தும் ஒன்றா என்று பார்த்துச் சொல்லும்படி கேட்டுக்கொண்டாள். அவர் இரண்டையும் மாறி மாறி பார்த்துவிட்டு, இரண்டும் ஒன்றல்ல என்று

ஸ்டார் கிருஷ்ணா, நெல்லை சுல்தான் பாரதி, நல்லை ஜெயகாந்தி, ஜெட் டைகர் நாகராஜ், ஜெயராஜ் ஆகியோர் பங்கேற்றனர். சிறப்பு விருந்தினராக கலைமாமணி ஒவ்வை நடராஜன் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார். அவர் பேசுகையில் "இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்! எனவே, எதிர்காலத் தலைவர்களாகிய நீங்கள் நன்றாகப் படியுங்கள்! நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள்!" என்று அறிவுரை கூறினார்.

இந்த விழாவில் பங்கேற்ற நாடகக் கலைஞர்களுக்கு சிறப்பு விருந்தினர்களுக்கு வழங்கப்பட்டதைப் போன்ற பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டன. பெண் நாடகக் கலைஞர்களுக்கு சேலை, ஆண் நாடகக் கலைஞர்களுக்கு வேட்டி, சட்டை, துண்டு ஆகியவை பரிசாக வழங்கப்பட்டன. இதைத் தவிர, ஒவ்வொரு நாடகக் குழுவினருக்கும் தனித்தனியாக ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டன. அதில் முதல் பரிசாக ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு ரூபாயும், இரண்டாம் பரிசாக ரூபாய் ஆயிரமும், மூன்றாம் பரிசாக ரூபாய் ஐந்நூறும் வழங்கப்பட்டன. நாடகக் கலைஞர்களுக்கு சிறந்த முறையில் ஒப்பனை செய்த ஒப்பனைக் கலைஞர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. அதில் முதல் பரிசாக ரூபாய் ஆயிரமும், இரண்டாம் பரிசாக ரூபாய் ஐந்நூறும் வழங்கப்பட்டன. சிறந்த நாடகக் கலைஞர்களுக்கு வழங்கப்பட்ட பரிசுகளைப் போன்றே சிறந்த ஒப்பனைக் கலைஞர்களுக்கும் வழங்கப்பட்டன.

சில வருடங்களுக்கு முன்பு பிரபல சுஷ்மா பாபட்டுக் ஒவ்வை செய்தனர்; இதிலிருந்து முன்பு அவர்களுக்கு சுஷ்மா பாபட்டை தெரியும். அவர் நாடகத்தைப் பார்த்த நாடகக்காரர்களும் ஒன்று வரும் பரிசுக்கு தெரிவித்தனர். அதனால் நாடகக் குழுவினர் மட்டுமல்லாமல் அதில் பார்த்த நாடகங்களைப் பார்த்து பாராட்டினர்; சிறந்த நாடகக் குழுவினர் மற்றும் சிறந்த நடிகர்களுக்கு ஒவ்வை செய்து வந்தார்;

இரட்டைத் தந்தி முறை (Duplex Telegraphy)

அச்சுத் தந்தி முறையில் ஒரு கம்பியில் ஒரு நேரத்தில் ஒரு செய்தி மட்டுமே அனுப்ப முடியும். இரட்டைத் தந்தி முறையில் ஒரே கம்பியில் ஒரே நேரத்தில் இரண்டு செய்திகளை அனுப்ப முடியும். ஒரு நபர் தனது தந்தி நிலையத்தில் அனுப்பும் செய்தி அவரது நண்பரின் தந்தி நிலையத்தில் பதிவாகிறது. அதே நேரத்தில் நண்பரும் தனது தந்தி நிலையத்தில் செய்தியை அனுப்பி அவரது தந்தி நிலையத்தில் பதிவாகிறது. இவ்வாறு இரண்டு நபர்களும் ஒரே நேரத்தில் செய்திகளை அனுப்பி பெற்றுக் கொள்ள முடியும். இதற்கு இரட்டைத் தந்தி முறை என்று பெயர்.

இரட்டைத் தந்தி முறையில் செய்திகளை அனுப்பி பெறுவதற்கு இரண்டு கம்பிகள் தேவை. ஒரு கம்பியில் ஒரு நேரத்தில் ஒரு செய்தி மட்டுமே அனுப்ப முடியும். இரண்டு கம்பிகளில் ஒரே நேரத்தில் இரண்டு செய்திகளை அனுப்ப முடியும். இரண்டு கம்பிகளில் ஒரே நேரத்தில் இரண்டு செய்திகளை அனுப்பி பெறுவ

தயார் நடித்தது. நான், 'என் இருதயத் துடிப்பை அவர் கேட்டுவிடுவாரே!' எனப் பயந்தேன்; பின்பு ஒருவாறு தேறி, 'இது சரியான தரு' என்றேன்."

இதன் பின்பு எடிசனுக்கு வெற்றிக்குமேல் வெற்றி உண்டாயிற்று. அவர் புதிது புதிதாகக் கண்டுபிடித்துக் கொண்டிட்ட பொருளை. அக்காலத்துக்கு அவசியமானவை இவை இவை என்று பல புதுப்புது எண்ணைக்கள் அவருடைய மனத்தில் உதித்தன. அவர் இருமடிப் தந்திக்குப் பின்பு நான்மடிப் தந்தி (Quadruplex) கண்டுபிடித்தார். கிராமபோன், மின்சாரக் குரியந்திரம், மின்சார விளக்கு, பேசுபடியாய், பேசும் புகைபடங்கள் ஆகிய இவைகளெல்லாம் வெகு விரைவில் ஒன்றின்பின் ஒன்றாக படிப்படியில் கண்டு பிடிக்கப்பட்டன. அவை மூலம் ஒரு பாவமும் செய்யாது பின்னும் ஓய்வுகொண்டதில்லை போலும்!

மின்சாரமும் தற்காலமும்

வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் மின்சாரத்தால் நாளடைவில் நமக்குப் பெறக்கூடும் என்பதை எடிசன் கண்டு பிடித்ததிலிருந்து நாம் இதை அறிந்து வருகின்றோம். ஐரோப்பிய நாடுகளில் இப்போது ஜனங்கள் மாடியின் மேலே போகவும் கீழே இறங்கவும் மின்சார எந்திரங்களையாவது (electric lifts), மின்சாரப் படிகளையாவது (stairs moved by electricity) உபயோகிக்கின்றார்கள். உணவு மின்சார அடுப்பிற் சமைக்கப்படுகின்றது. உணவுப் பொருள்கள் மின்சாரத்தால் சூடாகவோ குளிர்ச்சியாகவோ வைக்கப்படுகின்றன. மின்சார மணியை அழுத்துவதால் யாரோ கலவாசலில் வந்திருக்கிறார்கள் என்று நாம் அறிந்துகொள்ளலாம்; பத்துவாசற்படிகளுக்கு அப்புறம் இருப்பினும் அங்கிருந்தே மின்சார விசையை அழுத்தி வந்தவர்களுக்குக் கலவாசற் கதவைத் திறந்து

விடலாம்; வந்தவர்கள் போனபின்பு அங்கதனை மூடவும் செய்யலாம். இப்படிப்பட்ட காரியங்களில் பின்சாரத்தால் நடைபெறும். இந்த மின்சாரம் ஒருபொழுதும் சுஷ்டம் என்ற முறையிடாமலும் ஓய்வு கொள்ளாமலும் இரவு பகலாய் இடைவிடாது தொண்டுபுரியும் உண்மை வேலியன். இதுதான் மனிதனுக்கு மேலிடை செய்வதற்காகப் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருள்ள சூறைகூறுத மகா மேலிலக்காரி.

அத்தியாயம் VI

சௌகரியத்துக்கு மேல் சௌகரியம்

பண்டைக்காலமும் யந்திர சாதனங்களும்

தேக சஷ்டத்தையும் கால பஷ்டத்தையும் குறைத்து மனிதன் தனக்குச் சௌகரியத்தைத் தேடிக்கொள்ளச் செய்த முயற்சிகளைப் பற்றிக் கூறுவதே மானிட சரித்திரத்தின் சரித்திரமாகும். மனிதன் மகிழ்ச்சியுடன் உயிர் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களைக் கஷ்டப்படாமல் சம்பாதிப்பதில் தன் காலத்தைச் செலவழிக்கவேண்டியிருப்பதால் அவனுக்கு ஓய்வு எப்பொழுதும் இல்லை. உணவு தேடவும் அதை உண்ணவும் பின்பு உடுக்கவும் நேரம் இருக்கிறதே அல்லாமல் அவனுக்கு, வேறு சௌகரியத்துக் காலம் இல்லை. ஆனால் குகைகளில் சுவர்களில் வரைந்து பெற்றுள்ள சித்திரங்களைப் பார்க்கும்பொழுது, மனிதன், குகைகளில் வாழ்ந்த காலத்திலேயே அழகைக் காண்பதிலும் ஓய்ந்திருப்பதிலும் தேவதிக்கை கண்டு மகிழ்தலிலும் விருப்பங்கொண்டிருந்தான் என்பது புலனாகும்.

ஆனால், மன அபிவிருத்தி செய்ய நேரம் உள்ளவர்களுக்கே இவ்விஷயங்கள் கூடியனவாய் இருக்குமே யொழிய மற்றவர்களுக்குக் கூடியன அல்ல. ஆகையால், காலத்தையும் கஷ்டத்தையும் குறைக்க யந்திரம் ஒன்றும்

மிகப் புராதன மக்கள் கண்டுபிடிக்காதிருந்தாகவே என்ற கண்டு ஆச்சரியப்பட வேண்டுவதில்லை. ஆதிமனிதன் ஆற்றைக் கடக்க நீந்திச்செல்வதற்குப் பதிலாக ஆந்த ஆற்றில் தற்செயலாய் விழுந்திருந்த மரத்துண்டின்மேல் அசையாது நடந்துகிலிருந்து அவன் முதன்முதல் பாலம் கட்டக் கண்டுகொண்டான் என்ற கூறுதல்வேண்டும். பெரிய மரத்துண்டைச் சிறிய மரத்துண்டால் தூக்கி உருட்டப் படிகையிலிருந்து அவன் யந்திர ராஸ்திரத் துக்கு அஸ்திவாரம் போட்டதாகக் கூறுதல் பொருந்தும். வளரைக் கொண்டும், நாரைக் கொண்டும் கயிறு திரிக்கக் கற்றதிலிருந்து அவன் சுயீன எஞ்சினியரிங் விஷயத்தி லவன் ஆவான். கையாகரா நீர்வீழ்ச்சி பிரமாண்டமான சக்கரங்களை கழற்றி ஏறத்தாழ மைல் தூரம் எல்லா வேலைக்கும் வேண்டிய அளவு மின்சார சக்தியை உண்டாக்குகின்றது. இது சரித காலத்து முன்னிருந்த நீர் ராட்டினத்திலிருந்தும் திரிகையிலிருந்தும் ஆரி விருத்தியாயிற்று என்றால் பிசகையாகாது.

அச்சிடும் பழைய முறை

மானிட நுண்ணறிவும் புதுப்பொருள் புனையும் ஆற்றலும் நம்முடைய காலத்தில் ஆச்சரியமுறும்படியான உன்னத நிலையை அடைந்துள்ளன. மனிதனுடைய மூளையைப் போல் வேலை செய்ய பெரியனவும் சிறியனவுமான யந்திரங்கள் பல உண்டு. அவைகள் ஒரு பிழையும் செய்வதில்லை; இயற்கையாகச் செய்வதுபோல பிழையில்லாமலும் ஒன்றுக்கு ஒன்று மோதாமலும் இல்லாமலும் சரியாக வேலை செய்கின்றன. அரச அடுக்கும் 'லினோடைப்' யந்திரத்தை இதற்கு நாம் உதாரணமாகக் கூறலாம். அச்சு அடிக்கும் பழைய வழக்கமே வேறாகிறி இருக்கும். ஈயத்தை உருக்கி, பலவகையான எழுத்துக்களாக முன்னமே அச்சுக்கூடத்தி

னர் வார்த்து வைத்திருப்பார்கள். அச்சுக்கோப்போன் தன் முன்னே கையெழுத்துப் பிரதியை வைத்துக்கொண்டும், தன்னுடைய இடக்கையில் அச்சு அடுக்குவதற்குள்ள மரப் பலகையையோ பித்தளைப்பலகையையோ பிடித்துக்கொண் டும் கையெழுத்துப் பிரதியைப்பார்த்துப்பார்த்து அச்சறை யில் உள்ள எழுத்துக்களை ஒவ்வொன்றாக எடுத்து அடுக்க வேண்டும். ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு சிறு குழியில் இருக்கும். இங்கிலீஷ் பெரிய எழுத்து அச்சு அறையின் மேலும், சிறிய எழுத்துக் கீழுமாக வைக்கப்பட்டிருக்கும். அச்சுக்கோப்போன் எழுத்துக்களை ஒன்றன்பின் ஒன்றாய் எடுத்துக் கைப்பலகையில் வைத்து அடுக்கவேண்டும்; நாலைந்து வரிகள் அடுக்கிய பின் அந்த வரிகளை ஜாக்கிரதை யாக எடுத்து மற்றொரு குறுகிய நீளப்பலகையில் வைக்க வேண்டும்; ஒவ்வொரு பக்கம் ஆகும் வரைக்கும் இப் படியே செய்யவேண்டும்; ஒவ்வொரு பக்கத்துக்கும் உள்ள எழுத்துக்களை நூலாற் கட்டவேண்டும்; இல்லாவிட்டால் அவ்வெழுத்துக்கள் கொட்டிண்டுபோகும். இம்முறையில் ஒரு பாரம் (forme) செய்து முடித்தபின் அதைக்கொண்டு அச்சடித்தல்வேண்டும். ராயலில் ஒரு பாரத்துக்கு எட்டுப் பக்கமும் டெமியில் பதினாறு பக்கமும் உண்டு. சிறிய வாய்ப்பாடு புஸ்தக அளவில் ஒரு பாரத்துக்கு முப்பத்திரண்டு பக்கம் ஆகும். அடுக்கியதை அச்சடித்த பின்பு ஒவ்வொரு வரியையும் எடுத்து எழுத்துக்களாகப் பிரித்து மறு முறை பயன்படுவதற்காக அந்தந்த எழுத்தை அந்தந்தக் குழியிற் போட்டுவைக்க வேண்டும். எழுத்துக்கள் எல்லாம் கலந்து கிடக்குமானால் அக்கலப்புக்கு ஆங்கிலத்தில் 'பை' (Pie) என்று பெயர் சொல்லப்படும். அச்சடித்த பின்பு அந்தந்த எழுத்துக்களைப் பொறுக்கி அந்தந்தக் குழியில் போடுவ தற்கு அதிக நேரம் செல்லும்; அதிகமாகக் கஷ்டப்பட வும் வேண்டும்.

லினோடைப் யந்திரம்

'லினோடைப்' யந்திரம் இந்தக் கால நஷ்டத்தையும் பெருங் கஷ்டத்தையும் நிவாரணம் செய்துவிடுகின்றது. அச்சுக்கோப்பதும் அச்சுப்பிரிப்பதும் யந்திரத்தாலே செய்யப்படுகின்றன. அச்சுத்தொழில்முறையில் இந்த யந்திரம் மிகவும் அசாதாரியமானது. மனிதன் விரைவுத்தொழிலை யந்திரம் செய்வதைப் போலவே இதுவும் வேலை செய்கின்றது. டைப்ரைட்டிங் யந்திரத்துக்கு இருப்பதுபோலவே இதற்குரிய எழுத்துச் சாவிகள் உண்டு. டைப் அடிப்பது போலவும், தொலைபேசியம் வாசிப்பது போலவும் இந்த யந்திரத்தின் ஒவ்வொரு சாவியையும் அசைத்துப்போன் அழுத்தவேண்டும். எவ்வளவு வேகமாகக் கை ஓடுமோ அவ்வளவு வேகமாக யந்திரம் எழுத்துக்களைக் கோர்த்து வார்த்தைகளாக்கி அச்சொற்களை வரிகளாகச் செய்கின்றது.

இந்த 'லினோடைப்' யந்திரம் **ஆட்மார் மேர்கந்தலர் (Ottmar Mergenthaler)** என்பவரால் முதன்முதல் செய்யப்பட்டது. பின் பலரால் சீர்திருத்தப்பட்டுள்ளது. இதில் உள்ள ஒவ்வொரு பாகத்திலும் வேலை நடக்கின்றது. இந்த யந்திரத்தின் மேல்பாகத்தின் ஒரு பக்கத்தில் புரூ அறை போன்ற பெட்டி ஒன்று இருக்கின்றது. இதுதான் எழுத்து அறை. ஒவ்வொரு எழுத்துக்கும் ஒவ்வொரு குழியிட்டுக்கும் இதில் அறைகள் உண்டு. இந்த அறைகள் கீழே ஓடும் நாடாவின்மேல் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளன. இந்த அறைகளில் பித்தளை 'மோல்டு' எழுத்துக்கள் உண்டு. எழுத்துச்சாவி யந்திரத்தின் கீழ்ப்பாகத்தில் இருக்கிறது. யந்திரம் இயக்குகின்றவன் இந்த எழுத்துச் சாவியை அழுத்தினதும் வேண்டிய எழுத்துக்கள் மேலே எழுந்து ஒன்றன்பின் ஒன்றாக ஒரு நீண்ட குழியின் வழியாக அறைகளை அணைத்தாற்போல் ஓடும் நாடாவின்மேல் விழுகின்றன. இப்படி விழுந்த இந்தப் பித்தளை 'மோல்டு'

எழுத்துக்கள் நாடாவின் மேலேயே நகர்ந்துவந்து யந்திரத்தின் இடைபாகத்தில் உள்ள ஒரு சக்கரத்தின் துவா



By permission of Linotype & Machinery Ltd.
'லினோடைப்' என்னும அசைக்க கோக்கும் யந்திரம்

ரத்தினருகில் நிற்கின்றன. இச்சக்கரத் நர்குப் பின்னால் மின்சாரத்தால் ஈயம் உருக்கி வைக்கப்பட்டிருக்கின்றது. இச்சக்கரத்தின் அருகில் இவ்வெழுதுக்கள் எப்படி வெளியாக

கின்றது; சக்கரத்தின் பின்னிருக்கும் உருகிய ஈயம் சக்கரத்தின் ஆரத்தின் வழியாக இந்தப் பித்தளை எழுத்துக்களில் விழ, வரியின் வார்ப்படம் கிடைக்கின்றது; ஈயம் தேவைக்கதிகமாய் வார்ப்பட வரி ஆரத்தின் வழியாக நழைக்க, இலம்புகள் நீக்கப்பட்டு சுத்தமாக வெளிவந்து விடுகின்றது.

இதன் பின்பு யந்திரத்தில் நடைபெறும் வேலை ஆச்சரியமானது. எழுத்து வார்ப்படமாக வார்க்கப்பட்டதும், யந்திரத்தின் மேலிருந்து ஒரு பித்தளை சட்டம் ஒடிவந்து சக்கரத்தின் பக்கத்திலுள்ள மேமாலடி எழுத்துக்களைத் தூக்கிசென்று மேலே விடுகின்றது. அவ்வாறு விடப்பட்டதும், ஒவ்வொரு எழுத்தும் தன் தன் இடத்திற் பிழையின்றிப் பாய் விழுந்து, மற்றொரு முறைவேண்டியிருந்தால் வருவதற்குச் சித்தமாய் நிற்கின்றது. இது என்ன ஆச்சரியம்! அறிவுள்ள மனுஷனைப் போலவே இந்த யந்திரம் வேலை செய்கின்றது.

வார்ப்படமாக வார்க்கப்பட்ட வரி பக்கமாக அடைக்கப்பட்டுள்ள இடத்துக்குப் போய் விழுகின்றது. ஒரு பக்கத்துக்கு வேண்டிய அளவு வரிகள் வந்து சேர்ந்ததும் ஒருவன் அவைகளை ஒன்று சேர்த்து ஒரு பக்கமாகுமாறு இணைத்துவைப்பான். எட்டுப் பக்கமோ பதினாறு பக்கமோ ஆனதும் அவைகள் ஓர் இரும்புச் சட்டத்தில் வைத்து முடிக்கப்பட்டு அச்சுவாகனத்தில் ஏற்றப்படும். அச்சடித்தானதும் ஈய வரிகள் மறுமுறை பயன்படுவதற்கு யந்திரத்திற் போட்டு உருக்கப்படும்.

ரேயில்வே நிறுத்துக்கருவிகள்

கைத்தொழிலில் உபயோகப்படும் கணக்கற்ற ஆச்சரியமான தூதன யந்திரங்களில் இதை ஒன்றெனக் கூறலாம். அச்சுத்தொழில் விரைவாக நடைபெற எவ்வாறு உபாயம்

கண்டுபிடிக்கப்பட்டபோதும் அவ்வாறே புகைவண்டித்தொடர்களை விழாவாறு அபாயத்திலிருந்து பாதுகாக்கப் பல வழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. புகை வண்டித் தொடரை அபாயத்திலிருந்து காக்க ஒவ்வொரு வண்டியிலும் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் அநேக உபாயங்கள் வைக்கப்பட்டுள்ளன. இவ்வுபாயங்கள் பார்ப்பதற்கு எளிதானவைகளாகக் காணப்படினும் தவறாமல் வண்டிகளை ஆபத்துக் காலத்தில் பாதுகாக்கின்றன. வேகமாகச் செல்லும் வண்டித் தொடர்களையும் பாரம் ஏற்றிய சரக்கு பெட்டிகளையும் ஆபத்துக் காலத்தில் திடீரென்று நிறுத்துவது கடினம். ஆனால், இக்காலத்தில் வண்டிகள் மிகவும் மெல்ல வேகமாக ஓடினும் தூக்கமுடியாத பாரங்களைத் தூக்கிச் செலவினும் வண்டிகளை நிறுத்தும் கருவிகளால் நிறுத்திவிடக்கூடும்.

நிறுத்துக்கருவியை உபயோகித்து வண்டியை ஆபத்துக் காலத்தில் நிறுத்தும் முறை வழக்கம் எருவதற்குமுன் ஒவ்வொரு புகைவண்டித் தொடரிலும் ஆபத்துச் சமயத்தில் வண்டியை நிறுத்த ஓர் ஆள் இருந்து வண்டிகளை நிறுத்துவது வழக்கம். இவனை வண்டி நிறுத்தும் ஆள் (**brakesman**) என்பர். இவன் நிறுத்துக்கடை போடுவதற்கு உள்ள சக்கரம் அமைக்கப்பட்ட பெட்டியில் இருப்பதுண்டு. உதவி வேண்டியிருக்கும்போது நிறுத்துக் கருவியைப் போட்டு வண்டியை நிறுத்தவேண்டியது அவனுடைய கடமையாகும். ஆனால், ஒரு வண்டியிற் போடும் அத்தடை எல்லாப் பெட்டிகளையும் நிறுத்திவிடாது. இவ்வண்டிகளைத் திடீரென்று நிறுத்தக் கூடாமையால் புகைவண்டிகள் மலைச்சரிவுகளில் விழுவதும், மணற்புயலில் அகப்பட்டுச் சாய்வதும், கண்டவாளத் தருகில் மேயும் ஆடு மாடுகளின்மேல் ஏறுவதுமாயிருந்தன. ஆனால் இப்போது இவ்விதமாக நடைபெறக் காரணம்

இல்லை. இக்காலத்தில் வண்டிகளில் உபயோகப்படுத்தும் நிறுத்துத்தடைகள் வண்டிகளைக் கூடியமட்டும் திடீரென்று ஆபத்தான சமயத்தில் நிறுத்திவிடும்.

இந்நிறுத்துத் தடைகளில் இருவகை உண்டு. அவை மணிக்கு முப்பது மைல் வேகத்தில் ஓடும் சரக்கு ஏற்றிச் செல்லும் புகைவண்டித் தொடரையும் சிறிது நேரத்திற்குள் நிறுத்திவிடும்; மணிக்கு அறுபது மைல் வீதம் ஓடும் பிரயாணிகள் வண்டித்தொடரையும் தொட்டபாத்திரத்தில் நகர்ந்து செல்லல் செய்யும்; இந்த இருவகை நிறுத்துத் தடைகளும் காற்றின் உதவியால் வேலை செய்கின்றன; ஒன்று காற்றிலாதபடி செய்து நிறுத்துகின்றது; மற்றொன்று அழுத்தஞ் சக்தியால் நிறுத்துகின்றது. ஒவ்வொரு வண்டியிலும் சங்கிலி அல்லது கையிடி வைத்திருப்பதை நீங்கள் பார்த்திருக்கலாம்; அதன் பக்கத்தில் 'ஆபத்துக்காலத்தில் இதை இழுத்தால் வண்டி நிறுகும்' என்று எழுதியிருப்பதையும் கண்டிருக்கலாம். நீங்கள் இந்தச் சங்கிலியையோ கைப்பிடியையோ இழுத்ததும் உண்மையில் அது உங்கள் வண்டியில் உள்ள நிறுத்துத் தடையை அழுத்திச் சக்கரத்தை நிறுத்துவதோடு மற்ற வண்டிகளின் சக்கரங்களையும் உடனே நிறுத்திவிடுகின்றது. இது எப்படி வேலை செய்கின்றது? ஒவ்வொரு வண்டியின் அடியிலும் சக்கரத்துக்கு அருகில் ஒவ்வொரு காற்றில்லாச் சிறு பீப்பாய் வைக்கப்பட்டிருக்கின்றது. இதில் காற்று உட்செல்லாதவாறு தடுப்பதற்கு ஓர் அடைப்பு உண்டு. ஒருவன் சங்கிலியை இழுத்ததும், அது வண்டியின் அடியில் உள்ள காற்றில்லாச் சிறு பீப்பாயின் அடைப்பைத் திறந்துவிடுவதால் காற்று உள்ளே விரைந்து செல்லுகின்றது. அதனால் நிறுத்துத் தடைகள் சக்கரங்களுக்கு எதிரில் விழுந்து விடுகின்றன. எஞ்சினோட்டி எஞ்சினில் உள்ள நிராவியின் உதவியைக்

கொண்டு அச்சிறு பீப்பாயில் உள்ள காற்றை வெளி யேறும்படி செய்ததும், முன்னே சக்கரங்களைத் தடுக்க விழுந்த நிறுத்துத் தடைகள் திரும்பவும் மேலே எழுகின் றன. சிறு தகரப் பீப்பாயில் நுழைந்த காற்றுச் சிறிது சிறிதாய் வெளியேற வெளியேற, கீழே விழுந்த நிறுத்துத் தடைகள் எழுந்து முன் இருந்த இடத்திற்குப போகின்றன. வந்த வண்டியில அபாயச் சங்கலி இழுக்கப் பட்டது என்ற அறிய வேண்டியது அவசியமன்றே? இதற்குர் குறிப்பு இல்லாமலில்லை. அபாயசசங்கிலி இழுக்கப்பட்டதும், அந்தச சங்கிலி இருந்த வண்டியில ஓர் அடையாளம் சிறிது முன்வந்து நிற்க, எஞ்சினேட்டி இழுத்த வண்டி இது என அறிகிறன்.

மற்றொருவிதமான நிறுத்துத்தடைகளும் இம்முறையி லேயே வேலை செய்கின்றன. வண்டியின் அடியில் இருக் கும் காற்று இல்லாச சிறு தகரப் பீப்பாயிற் காற்றை நுழையச செய்து நிறுத்துத் தடைகளைத் தள்ளிச சக்கரங் களை நிறுத்துவதற்குப் பதிலாகக் காற்றால் அழுத்திச் சக்க ரங்கள் நிறுத்தப்படுகின்றன. இருவகை நிறுத்துக் கருவி களும் தாமாகவே திடீரென்று வேலை செய்கின்றன. ஏவ ரைப் போட்டதும் புகைவண்டித் தொடரில் உள்ள எல்லா வண்டிகளும் நின்று விடுகின்றன; எனென்றால் ஒவ் வொரு வண்டியின் நிறுத்துக் கருவிகளும் கித்தானைச் செய் யப்பட்ட குருத்திகளால் இணைக்கப்பட்டிருக்கின்றன. நீங் கள் ஒவ்வொரு வண்டியையும் இணைப்பதற்காகத் தொங் கும் குருத்திகளை வண்டித்தொடர்களிற் காணலாம்.

ஜார்ஜ் வேஸ்டிங்ஹவுஸ்

இந்த வகையான நிறுத்துக்கருவிகளால் புகைவண்டி கள் இப்போது வேகமாயும் பயமின்றியும் ஓடுகின்றன. நாம் இக்கருவிகளைக் கண்டுபிடித்துப் பெரும்பயன்.-அளிக்க

ஜார்ஜ் வெஸ்டிங்ஹவுஸ் (George Westinghouse) என்பவருக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார். இவர் சிறுவராய் இருந்தபோதே பிறர்க்குதவுகிற பிறத்தொழிலில் இப்படிப்பட்ட சிந்தனைகளைச் செய்தார். விளையாட்டிலேயே பிரியம் அதிகமிருந்ததால் இவர் பள்ளிக்கூடத்தையே வெறுத்துத் திரிந்துகொண்டிருந்தார். சில தினங்களில் தம் தகப்பனாருடைய தொழிற்சாலையிலும் கருமாரப் பட்டறையிலும் ஆயுதங்களை வைத்துக்கொண்டு ஏதாவது செய்துகொண்டிருப்பார். சிலசமயங்களில் பள்ளிக்கூடம் போகாமலே இரண்டு மைல் தொலைவுள்ள தம் தந்தையாருக்கு ரயில்வே பிரிட்ஜுவிலே இரவு வேளைகளில் ஜாக்கிரதையாக வைத்தல் ஒன்றை செய்வதற்கு விண்ணப்பம் தம் தகப்பனாரை கேட்டுக்கொண்டார்.

ஒரு நாள் தந்தையார் வெளியூருக்குப் போகவேண்டியிருந்து போது ஜார்ஜைக் கூப்பிட்டு, 'நான் ஒரு வாரம் வெளியே போகின்றேன். இந்த அடுக்கடுக்கிருக்கும் குழாய்களை ஒரே அளவாகத் துண்டு துண்டாக அறுத்து வை. நான் இலையுதிர் காலத்தில் இது உனக்கு வேலையாகும்' என்று சொல்லிப் போய்விட்டார். 'விளையாட இருநூற்றுக்கா! அது வீணையிற்கேற!' என்று ஜார்ஜுக்கு வருத்தம் தோன்றியது; ஆனால், மனத்தளர்ச்சி எறுபட வில்லை. தந்தையார் வெளியே சென்ற சில மணி நேரத்துக்குள் ஜார்ஜ் வேண்டிய ஆயுதங்களை எல்லாம் ஒரு வரிசையாக அடைத்துக் குழாய்களை அவற்றின் அடியில் வைத்து எஞ்சினை ஓடச்செய்து அறுத்துவிட்டார்; சில நாள் வேலையைச் சில மணி நேரத்தில் முடித்து முக மலர்ச்சியோடு விளையாடச் சென்றார். விளையும் பயிர் முளையிலே தெரியாது போகுமா?

சில வருடங்களுக்குப்பின் இதைப்போன்ற சந்தர்ப்பம் வாய்த்தபோதுதான் கீர்த்திபெற்ற 'வெஸ்டிங்ஹவுஸ்'

நிறுத்துக்கருவிகளை ஜார்ஜ் கண்டுபிடித்தார். அப்போது அவருக்கு வயது இருபதுகூட முடியவில்லை. அவர் ஒரு நாள் புகைவண்டியிற் பிரயாணஞ்செய்து கொண்டிருந்தார். அவர் பிரயாணஞ் செய்துகொண்டிருந்த வண்டி திடீரென்று நின்றுவிட்டது. ஆகையால் அவர் வண்டியைவிட்டு இறங்கிச் சென்று கேட்டபோது, 'சாமான் வண்டிகளை இழுக்கும் இரண்டு எஞ்சின்கள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டதால் வழியில்லாமற்போக இவ்வண்டி நின்றுவிட்டது' என்று சிலர் கூறினர்.

ஜார்ஜ் :—ஐயா! இருப்புப்பாதை நேராய் இருக்கின்றதே? பெருந்தூரத்தில் வண்டி வருவது தெரியுமே! அப்படியிருக்க இந்த எஞ்சின்கள் என் மோதிக்கொண்டன?

எஞ்சின்டைட்டி :— இரு எஞ்சின்களிலும் வேலைசெய்யும் நாங்கள் ஒருவரை ஒருவர் பார்த்தோம்; எஞ்சின்களை நிறுத்த முயற்சி செய்தோம். ஆயினும் அவைகளை நிறுத்த முடியவில்லை.

ஜார்ஜ் :—என் நிறுத்த முடியவில்லை? நிறுத்துக் கருவிகள் வேலை செய்யவில்லையா!

எஞ்சின்டைட்டி :—நிறுத்த நேரம் இல்லை. வண்டிகளை ஒரு நிமிஷத்தில் நிறுத்த முடியாது.

ஆனால், ஜார்ஜ், 'இப்படிப்பட்ட சமயத்திலும் வண்டியை நிறுத்தக்கூடாதா?' என்று நினைத்து, அதற்காக ஆராய்ச்சி செய்து மேலே சொன்ன நிறுத்துக்கருவிகளைக் கண்டுபிடித்தார்.

பின்பு அவர் ரெயில்வே வேலையிலும் மின்சார்த் தொழிலிலும் பல பல புதுப் புதுக் கருவிகளைக் கண்டுபிடித்துப் பெரும் புகழ் பெற்றார். இருப்புப்பாதையில் இணைப்புமுறை அமைந்த எச்சரிக்கைக் கருவிகளைக் (inter - locking system of points) கண்டுபிடித்தவரும் இவர்தாம். இந்த இருப்புப்பாதையில் வண்டி வருகின்றது

என்று ஸ்டேஷன் உத்தியோகஸ்தர் இதனை தெரிந்து கொள்ளலாம். வண்டி வந்ததும் 'பாயின்ட்' என்னும் பூட்டுகள் சாவியினாலே திறக்கப்படும். ஜார்ஜ் வெஸ்டிங் ஹவுஸ் இதற்குச் சாவிப்பெட்டி அமைத்துள்ளார். இதனால் ஒரே பாதையில் எதிர் வண்டி வருதல் தடுக்கப்படுகின்றது. இந்தச் சிறிய உபாயத்தால் எத்தனை பிராணஹானி அதிகமாகக் குறைந்துவிட்டது. இன்னும் அவர் அறிக்கை அறையில் (cabin) இருந்துகொண்டே ஒரு ஸ்டேஷனுக்கும் மற்றொரு ஸ்டேஷனுக்கும் வண்டி வருவதையும் போவதையும் அறிந்து அவைகளை நியமனம் செய்யும் பலவழிகளையும் கண்டுபிடித்தார்.

பலவகை யந்திரங்கள்

சென்ற நூற்றாண்டில் புதுப்பொருள்களைக் கண்டுபிடித்ததன் விவரம், காலநஷ்டத்தையும் தேக கஷ்டத்தையும் குறைக்க மனுஷன் செய்த முயற்சியின் சரிதமாகவே இருக்கின்றது. சில புனைவுப் பொருள்கள் (inventions) நமக்குச் சாதாரணமாய் இருப்பதால், நாம் அவற்றைப்பற்றி ஒரு நிமிஷமும் நினைப்பதில்லை. தையல் யந்திரமும் டைப் அடிக்கும் யந்திரமும் நடக்கு இக்காலத்தில் சாதாரணமானவைகளாகத் தோன்றுகின்றன. சித்திரத் தையல்வேலை செய்வதற்கும் பலவித மிதியடிகள் தைப்பதற்கும் பொத்தான்களுக்குத் துளை போடுவதற்கும் இன்னும் இதர தையல்வேலைகள் புரிவதற்கும் ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வொரு விதமான யந்திரம் உண்டு. டைப் அடிக்கும் யந்திரத்தில் உள்ள முறையே பலவகையான கணக்குச்செய்யும் யந்திரங்களுக்கும் கையாளப்பட்டிருக்கின்றது. பத்து லக்ஷம் வரைக்கும் கூட்டவும் கழிக்கவும் பெருக்கவும், விற்ற தொகைப்பட்டியைக் கணக்கு வைக்கவும் யந்திரங்கள் உண்டு. எந்த நவீன வியாபாரக் கம்பனி

யிலும் இந்த யந்திரங்களில் ஏதாவது ஒன்று இல்லாமல் இராது. அவைகள் மனிதனுடைய வேலையை மேற் கொண்டு, வியாபாரத் துறையில் இருக்கும் தொழிலாளி களின் முயற்சியைச் சிறிது குறைத்துவிட்டன.

இயக்குஞ் சக்திகள்

மனிதன் தான் கண்டுபிடித்தவைகளை இயக்குவதற்கு முக்கியமாக ஐந்து விதமான சக்திகளை இதுவரைக்கும் கண்டுபிடித்துள்ளான். முதலில் **காற்றும் நீரும்** ஆகிய இரண்டு பூதங்களும் இயக்குஞ் சக்திகளாகப் பயன்பட்டன. காற்று பாயைத் தள்ளிக் கப்பலை இயக்கும் யந்திரத்தையும் நடத்தும். ஆனால் அது தான் விரும்பிய இடத்திற்குன் வீசும். அதன் இயக்கம் நம்மிடத்தில் இல்லை. நம் இஷ்டப் படி அதைச் செலுத்துவதும் கஷ்டம். நம்மால் அதை அடக்கியாளுதல் முடியாது. தற்காலத்தில் தொழிலில் உள்ள கஷ்டத்தைக் குறைக்கக் காற்றை நம்பி வேலைசெய் தல் கூடாத காரியம்; ஏனென்றால் அதன் சக்தி நிலையான தன்று.

ஆனால், தண்ணீரோ இயக்குஞ் சக்தியாய் அதிகமாகப் பயன்பட்டு வருகிறது. இந்தியாவில் இதைச் செல்வ விருத் திக்காக இன்னும் ஒருவழியாகக் கைக்கொள்ளவில்லை. மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள நீர்வீழ்ச்சி, பம்பா யிலும் அதைச் சுற்றி அநேக மைல் தூரத்தில் இருக்கும் இடங்களிலும் மின்சார வசதியையும் மின்சாரத்தால் ஏற் படும் மற்றெல்லாவித சௌகரியங்களையும் அளிக்கின்றது. குலு என்னும் பள்ளத்தாக்கில் உள்ள பூல் என்னும் நதி யின் நீரை அடக்கியாளும் பொருட்டுப் பஞ்சாப் மாகாண அரசாங்கம் ஆறுகோடி ரூபாய் செலவு செய்திருக்கின்றது. மாண்டி நீரால் மின்சாரம் உண்டாகும் முறை (**Mandi Hydro-electric Scheme**) சமீபத்திற் செய்துமுடிந்தது;

அது பஞ்சாப்புக்கு வெளியே உள்ள பல ஜில்லாக்களில் இருக்கும் நவீன சுகங்களை அடையாத வீடுகளுக்கு மின்சார விளக்கையும், மின்சாரத்தால் ஏற்படக்கூடிய பலவித சௌகரியங்களையும் அளிக்கும். இந்த மலைகளில் வாழும் மக்களது வாழ்க்கை என்னும் வண்டி இப்போது மெதுவாக ஓடுகின்றது. மின்சாரம் அவர்கள் வாழ்க்கைச் சகடத்துக்கு வேகத்தைக் கொடுக்கும். இன்னும் அது கஷ்ட நஷ்டத்தையும் கால விரயத்தையும் போக்கும்.

இயக்குஞ் சக்தியை உண்டாக்கும் மற்றொன்று நிலக்கரியாகும். இதனால் நீராவி உண்டாக்கப்படுகின்றது. ஆயினும் அந்நிலக்கரி அளவாகத்தான் கிடைக்கும். ஒவ்வொரு தேசத்தாரும் நிலக்கரிச சுரங்கத்தைப்பற்றி மிக்க அக்கறையாக இருப்பதுமல்லாமல், நிலக்கரியைச் சிக்கனமாயும் உபயோகிக்கின்றார்கள். உலகத்திற் கிடைக்கும் நிலக்கரி குறையவும், இயக்குஞ் சக்தியின் பொருட்டு மனிதன் பெட்ரோலியத்தைக் கண்டுபிடித்தான். இப்போது பெட்ரோலியமே மோட்டார் வண்டிபோன்ற யந்திரங்களை இயக்குகின்றது.

ஆயினும், இயக்குஞ் சக்தியை உண்டாக்க அழுத்திய காற்றையும் (compressed air) மின்சாரத்தையும் பயன்படுத்துவதைப்பற்றி இன்னும் அதிகமாக ஆராய்ச்சி ஏற்படவில்லை. இவ்விரண்டில் முக்கியமானது மின்சாரமாகும். மின்சாரத்தைப்பற்றி ஆராய்ந்தவர்கள் ஒவ்வொரு பொருளிலும் இருக்கும் ஒவ்வொரு பரமாணுவும் (atom) இயக்குஞ்சக்தியுடையது என்று எண்ணுகிறார்கள். ஒவ்வொரு பரமாணுவிலும் பலபல மின்சார நுண்ணணுக்கள் (electrons) இருக்கின்றன. ஒவ்வொரு மின்சார நுண்ணணுவும் ஓரளவு மின்சார சக்தியுடையதாயிருக்கின்றது. சில பௌதிக சாஸ்திரிகள் (Physicists) பொருள் என்பதே இல்லை என்றும், சக்திதான் உண்டு என்றும் நம்புகின்றார்கள். எப்படியாயினும், பொருளைச் சக்தியாக மாற்ற இன்னும் நாம்

அறிந்துகொள்ளவில்லை. எக்ஸ்-ரே (X-Ray), காமா-ரே (Gama-Ray) முதலிய மின்சாரப் புதுமைகளைக் கண்டு பிடித்ததனால், இனிமேல் வற்றுத இயக்குஞ் சக்தியை மனிதன் பெறக்கூடும் என்னும் நம்பிக்கை வலியுறுகின்றது. அப்போது அவன் மின்சாரம் உண்டாக்கக் கரியையும் நீரையும் தேடமாட்டான்; நினைத்தமாத்திரத்தில் எல்லாப் பொருள்களையும் மின்சாரமாக்கிவிடுவான். அதனால் அவன் கால நஷ்டத்தையும் கூரச் செலவையும் சிக்கனமாக்குவ தோடு, உலக சிருஷ்டியின் இரகசியத்தையும் ஒருவாறு உணர்ந்து வெளிப்படுத்துவான்.

அத்தியாயம் VII

பார்க்கமுடியாத பகைவர்

பண்டை மருத்துவம்

உலகத்தில் முன்னே மந்திரக்கார மருத்துவச்சியி னிடத்தில் ஜனங்களுக்கு நம்பிக்கை இருந்தது. இப் போதோ ஒவ்வொரு நோய்க்கும் தனித்தனித் சிறமை பெற்ற மருத்துவர்கள் இருக்கின்றார்கள். இந்த விஷயத் தில் உலகத்திற் பெரிய மாறுதல் உண்டாயிருக்கின்றது என்றே சொல்லவேண்டும். ஆனால், இப்போழுதுங்கூட இந்தியாவில் உள்ள அநேக கிராமங்களில் வாழும் ஜனங் கள் தெய்வங்கள் அல்லது தேவதைகளின் கோபத் தாற்றான் நோய்கள் உண்டாவதாக நினைக்கிறார்கள். இந்தியப் பெண்மணிகள் தங்கள் நோயுற்ற குழந்தைகளைத் தங்கள் ஊரில் உள்ள கோயிலுக்கு எடுத்துக்கொண்டு போய்ச் சுற்றி வருதலை நாம் அடிக்கடி பார்க்கலாம். அவர்கள் இப்படிச் செய்வதாலேயே குழந்தையின் நோய் தீர்ந்துவிடும் என்று நம்பியிருக்கின்றார்கள். ஒரு குழந்

தைக்கு நெடுநாளாக ஜுரம் கண்டிருந்தால், அக்குழந்தை யின் தந்தை பக்கிரிக்கு ஏதாவது பொருள் கொடுத்துக் குளிர்ச்சம் ஒன்று வாங்கிக்கொண்டுவந்து குழந்தையின் இடுப்பிலோ கழுத்திலோ அதைக் கட்டிவிடுகின்றன். இதனால் தன் குழந்தைக்கு நெடுநாளாக இருக்கும் ஜுர நோய் போய்விடும் என்று அவன் எண்ணுகின்றன். கிராம ஜனங்கள் நோய் வந்தால் கிராமத்தில் உள்ள நாட்டு வைத்தியனிடத்தில் மருந்து வாங்கப் போகின்றார்கள். நாட்டு வைத்தியனுக்குப் (quack) பெருட்பாலும் உடற் கூறு (anatomy) அறிந்து நோயை ஆராய்ந்து கொடுக்கும் அறிவும் ஆற்றலும் கிடையா. அவன் வெறும் மூலிகை களைக் கொடுப்பான்; இல்லாவிட்டால் வழக்கமாகக் கொடுத்துவந்த மருந்தைக் கொடுப்பான். நம் நாட்டுப் பண்டை வைத்திய முறைகளோ கைவிடப்பட்டன. ஆயி னும் மேனாட்டு மருத்துவ முறைகள் பெரிய பட்டணங் களில் தவிர மற்ற இடங்களில் இன்னுஞ் சரியாக அனு சரிக்கப்படுவதில்லை. பொதுவாக அறியாமையினால் ஜனங்கள் அதிகமாக இறக்கின்றார்கள்; சொல்லமுடியாத் துன்பங்களை அனுபவிக்கின்றார்கள். அடிக்கடி ஏதாவது ஒரு நோய் வருவதால் அவர்கள் பலஹீனமடைகின்றார்கள்.

இனிமேல் நாம் துன்பப்படக் காரணம் இல்லை. விஞ் ஞான அறிவு இல்லாமையால் அன்று; கல்வி இல்லாமையா லேயே ஜனங்கள் துன்பம் அனுபவிக்கின்றார்கள். நானூறு ஆண்டுகளுக்கு முன்னே மக்களுக்குக் கொள்ளை நோய் (plague) என்ன என்பது தெரியாதிருந்தது. அந்நோய் திடீரெனத்தோன்றி நூற்றுக்கணக்கான மக்களைக் கொள்ளை கொண்டு, சென்றதால் அது கடவுளின் கோபத்தால் வந்தது என்று ஜனங்கள் கூறிவந்தார்கள். கொள்ளை நோய் வந்த ஊரைவிட்டு ஓடிவிடுவதே அந்த நோய்க்குப் பரிகார மாய் இருந்தது. முகமதிய மருத்துவர் புதுவகையான

மருத்துவ முறையைக் கொண்டிருந்தும், ஐரோப்பாவில் பல நூற்றாண்டுகளாக ஜனங்கள், 'நோயானது நம்



ஆப்பிரிக்க மருத்துவர்கள்
இடது பக்கம்-கவின மருத்துவர்
வலது பக்கம்-மந்திரக்கார மருத்துவச்சி

முடைய பாவத்துக்காக நாம் அனுபவிக்க வந்த இயற்கையான தண்டனை' என்று எண்ணினார்கள். நோய் கடவு

னின் தண்டனையால் வந்தது என்ற நம்பிக்கை போய், 'இன்ன காரணத்தால் நோய் உண்டாயிற்று' என்ற விவேகம் ஜனங்களிடத்திற் பரவியபின்பே மருத்துவர்கள் வீடுகளையும் தெருக்களையும் சுகாதார முறைப்படி அமைத்து நோயை நீக்க முன் வந்தார்கள். ஆனால், அவர்களுக்கு நோய் வருவதன் காரணம் தெரியாதிருந்தது; இன்ன இன்ன நோய்க்கு இன்ன இன்ன குறிகள் உண்டு என்பது மாத்திரம் தெரியும். நோயை அதற்கு உரிய குறிகளால் உணர்ந்து அதைத் தீர்க்க இவர்கள் முயன்றார்களே அன்றி, ஒரு நோய் வருவதற்குமுன் அதைத் தடுக்கும் வழியைக் கண்டார்களில்லை. பிளேக் வராதபடி தடுக்கக்கூடிய வழி அவர்களுக்குத் தெரிந்ததில்லை. அவர்கள் அன்புடையவர்களாயும் தைரியசாலிகளாகவும் இருந்து, மக்களுடைய துன்பங்களைப் போக்கத் தங்களுடைய உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணஞ்செய்து உழைத்தார்கள்; ஆனால், பாவம்! நோய் வருவதற்குமுன் அதைத் தடுக்கும் வழியை அறியாதிருந்தார்கள்.

பலவித மருத்துவத் துறையில் உழைத்தவர்கள்

லூயி பாஸ்டர்

பாஸ்டர் (Pasteur) என்னும் பிரான்சு தேசத்து ரசாயன சாஸ்திரியார் பாக்டீரியா எனப்படும் தாவர அணுக்களைப்பற்றிக் கண்டுபிடித்த பின்பே மருத்துவர்கள் நோயுண்டாவதற்கு உரிய காரணங்களை ஆராயலானார்கள். இப்பாஸ்டருக்குமுன் இருந்த சில மருத்துவர்கள், 'மனிதர்களுடைய தேகத்தில் விஷக்கிருமிகள் அல்லது அவைகளைப் போன்றவைகள் இருந்து அவர்களுக்கு நோயை உண்டாக்குகின்றன' என்று சந்தேகங்கொண்டார்கள். ஆனால், அவர்கள் அக்கிருமிகள் தேகத்தில் எப்படி நுழைந்தன என்றும், பின்பு அவைகள் எவ்வாறு உடலை விட்டு நீங்கின

என்றும் விளக்க முடியாமலிருந்ததனால், அக்காலத்தில் இருந்த மற்ற மருத்துவர்கள், 'சொல்லமுடியாத விதமாகவும் தெரியாத விதமாகவும் ஆவிகளும் பேய்களும் நோயை உண்டாக்குகின்றன என்று நம்பும் ஆப்பிரிக்காவின் மந்திரக்காரிகளாகிய மருத்துவச்சிகளைப்பார்க்கிலும் இவர்கள் மேலானவர்கள் அல்லர்' என்று அவர்களை ஏளனஞ் செய்



பலவித நோய் உயிரணுக்கள்
(பெரிதாகக் காட்டப்பட்டுள்ளன)

தார்கள். ஆனால், பாஸ்டர் கண்டுபிடித்த உண்மைகள், நோய் உண்டாவதற்குக் காரணம் பாக்டீரியாவே என்று விளக்கின. பாஸ்டருடைய கொள்கைகளைப் பின்பற்றியவர்களும், 'அநேக கொடிய நோய்கள் பாக்டீரியாவினால் அல்லது நுண்ணிய பூச்சிகளால் உண்டாகின்றன' என்ற கொள்கையைச் சந்தேகம் அற நிலைநாட்டினார்கள்.

லூயி பாஸ்டர் மருத்துவர் அல்லர் என்பதைக்கேட்க நமக்கு ஆச்சரியம் உண்டாகும். இவர் பீர் என்னும் பானத்தில் எபபடிப் புளிப்புத்தன்மை உண்டாகின்றது என்பதை ஆராய்ச்சி செய்துகொண்டுவந்த ரசாயன சாஸ்திரியார் ஆவர். இவர் பிரான்சில் உள்ள ஒரு சிறிய பட்டணத்தில் 1822-ம் ஆண்டிற் பிறந்தவர். இவருடைய தந்தையார் தோல் பதனிடுவோர். தந்தையார் தம் குமாரராகிய பாஸ்டர் பாரிலிலுள்ள பெரிய கல்லூரிகள் ஒன்றிற் பேராசிரியராக விளங்கவேண்டும் என்று எண்ணினர். அத்தந்தையாரது எண்ணம் வீணாகப்போகவில்லை. தமிழ்மறை இயற்றிய திருவள்ளுவனார்,

> 'எணணிய எணணியாங்(கு) எய்துப எண்ணியார்
> திண்ணிய ராகப் பெரின்'

என்று திருவாய் மலர்ந்தருளியது பொய்யாகுமோ? அந்தத் தோல் பதனிடுவோரின் எண்ணம்போல் பாஸ்டர் அக்காலத்தில் கல்லூரிப் பேராசிரியர்களில் தலைசிறந்து விளங்கினர். பாஸ்டர் எழுபத்து மூன்று வயதுவரை இருந்தார். அக் கிழப்பருவத்திலும் இளைஞர்க்கு உள்ள உற்சாகமே அவரிடம் காணப்பட்டது. 'என்கடன் என்றும் பணிசெய்து கிடப்பதே' என்பது அவர் கைக்கொண்ட சீரியகொள்கையாகும். 'பாஸ்டர் கழகம்' (Pasteur Institute) என்ற ஒரு கழகத்தைத் தம் பெயரால் அவர் பிரான்சில் நிறுவினர். இக்கழகத்திற்றான் முதல் முதல் நாய்க்கடிக்குச் சிகிச்சை செய்யப்பட்டது. இப்போது உலகில் உள்ள எல்லா நாகரிகமுள்ள நாடுகளிலும் பாஸ்டர் கழகங்கள் தோன்றி நாய்க்கடியால் உண்டாகும் கொடிய பயங்கரமான நோயிலிருந்து நூற்றுக் கணக்கான மக்களைக் காப்பாற்றி வருகின்றன.

நாய்க்கடியிலும் விஷபேதியிலும் மைகுரோப்ஸ் என்னும் உயிரணுக்கள் இருத்தலைப் பாஸ்டரால் நாம் அறிந்ததோடு, இவ்வணுக்களாலே ஒரு நோய் ஒருவரிடமிருந்து

மற்றொருவருக்குத் தொற்றிக்கொள்கின்றது என்ற உண்மையையும் உணர்ந்துகொண்டோம்; இவர் முதலில் முயல்களிலும் சிறு பன்றிகளிலும் இவ்வுயிரணுக்களை ஏற்றிப் பரிசோதனை செய்து, 'எல்லா உயிரினங்களிலும் இவ்வுயிரணுக்கள் இருந்தே நோயை உண்டாக்குகின்றன' என்ற உண்மையை விளக்கிக் காட்டினார். சிலரே பாஸ்டர் கூறியதை நம்பினாலும், சிலரே அவர் கண்டுபிடித்த உண்மைகளின் முழுக் கருத்தை உணர்ந்தாலும், இக்கொள்கை மருத்துவரை எல்லாம் இதைப்பற்றி ஆராயுமாறு தூண்டிவிட்டது. உண்மையில் இதுதான் நோயை ஒழிக்கக் கைக்கொண்ட முயற்சிகளில் முதன்மையானது என்னலாம்.

லிஸ்டர்

நோய் என்னும் பகையை வெல்ல இரண்டாவதாக முயற்சி செய்தவர் ஆங்கில நாட்டு மருத்துவராகிய **லிஸ்டர்** என்பவர் ஆவர். இவர் பாஸ்டரைவிட ஐந்து வயது இளையவர். இவர் லண்டன் வைத்தியசாலையில் ரணவைத்தியராக வேலை பார்த்தபோது, ரணசிகிச்சை பெற்றவர்களுள் அநேகர் மாண்டுபோனதைக் கண்டு நடுங்கினார். அறுக்க வேண்டிய பாகம் அக்காலக் கொள்கைப்படி சுத்தமாக அறுக்கப்பட்டாலும், அறுபட்ட புண் அழுகிசீழ்கொண்டதால் ரணசிகிச்சை செய்துகொண்டவர்களில் பலர் உயிர் துறந்தனர். தாங்கள் எவ்வளவு ஜாக்கிரதையாயிருந்தாலும் சுத்தமாகப் பார்த்தாலும் தாங்கள் அறுத்த பாகம் அழுகிப்போவதைத் தடுக்க முடியாமலிருந்ததைக் கண்டு அக்கால மருத்துவர்கள் செயலற்றுத் திகைத்தார்கள்.

இளைஞராகிய லிஸ்டர் மருத்துவராக வேலைசெய்ய ஆரம்பித்ததிலிருந்தே ரணசிகிச்சை பெறுவோரில் அநேகர் கஷ்டப்படுவதையும் இறப்பதையும் தடுக்க வழி உண்டு என்று நம்பினார். பீரில் பாக்டீரியா இருப்பதால் புளிப்பு

உண்டாகின்றது என்று பாஸ்டர் கண்டுபிடிக்கும் வரைக்கும் இவர் ரணசிகிச்சையில் அதிகமாகச் சாதிருத்தம் ஒன்றும் செய்யவில்லை. இவர் அதிகச் சுத்தமாகச் சிகிச்சை செய்தலே வற்புறுத்தினார். பாஸ்டர் கண்டுபிடித்த உண்மை இவருக்கு வழிகாட்டியது. அழுகிப்போகச் செய்யும் பாக்டீரியாவை அறுத்த பாகத்தில் வளரவிடக்கூடாது என்று இவர் உணர்ந்தார்; அதலால் அறுத்த பாகத்திற் காற்றுப் படாதபடி முதலிற் செய்தார்; புண்ணை அறுக்கும் கத்தி முதல் சட்டம் பஞ்சு வரையில் உள்ள பொருள்களில் எதுவும் உயிருக்கு ஆபத்தை விளைக்க மூலகாரணமாயிருத்தலை நன்குணர்ந்து, அத்தீமையை ஒழிப்பதற்கு ரணசிகிச்சையில் விஷவுயிரணுச்சுத்தி அற்றுப்போகும் முறையைக் (sterilisation) கையாளும்படி செய்தார். இக்காலத்தில் ரணசிகிச்சையில் உபயோகிக்கும் கருவிகள், பொருள்கள் யாவற்றிலும் விஷவுயிரணுக்கள் நீக்கப்படுவதைக் காணலாம். இதற்கு அடிகோலியவர் லிஸ்டரே ஆவர். புண்ணில் விஷவுயிரணுக்கள் புகாதவாறு பாதுகாத்துக்கொண்டால் அப்புண்ணை நாம் ஆற்றிவிடலாம். இதுதான் புண்ணை ஆற்றுவதற்கு வழியாகும். லிஸ்டர் இச்சிறு உண்மையைக் கண்டுபிடித்ததாலன்றோ ஈராயிரக்கணக்கான உயிர்கள் யமன்வாயிற் புகாதபடி காப்பாற்றப்படுகின்றன. பெருஞ்சமையராகிய லிஸ்டர் பெரும்பாடுபட்டுக் கண்டுபிடித்திராவிட்டால் இப்போது ரணவைத்தியர்கள் ஆச்சரியப்படும்படி நோய்களைத் தீர்ப்பது முயற்கொம்பாகும் என்று சொல்லவேண்டுவதில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில் இருந்தவர்கள், 'லிஸ்டர் கண்டுபிடித்த முறை இந்த ஒரு நூற்றாண்டில் நடந்த எல்லாப் போர்களிலும் இறந்த உயிர்களைப் பார்க்கிலும் அதிகமான உயிர்களைக் காப்பாற்றியது' என்று சொன்னார்களென்றால், அம்முறையினால் ஏற்பட்ட நன்மைகளைப் பற்றிப் புகலவும் வேண்டுமோ?

நோயின் காரணம் கண்டுபிடிக்க முயற்சி

நோய் உண்டாவதற்குக் காரணம் விஷவுயிரணுக்களே என்ற உண்மைதெரிந்த பின்னும், மருத்துவர்கள் அவ்வணுக்களின் வழக்க பழக்கங்களையும், அவற்றில் நன்மை யையும், அவற்றை மனித உடலுட்செலுத்தும் பொருளை யும் அறியமுடியாமல் திகைத்தார்கள். நோகத்துள் மலேச் சுர விஷவுயிரணுக்கள், நுண்ணோக்கைத் தெரிந்துகொள்ளா திருந்தமையால், மருத்துவர்கள் மலேச்சுரம் (malaria) உண்டாவதற்குக் காரணத்தைக் கண்டுபிடிக்காதிருந்தார் கள். ஆதலால், முன்னே லண்டனில் இருந்த "ராஸ் உஷ்ணப் பிரதேசத்து நோய்கள் ஆராய்ச்சிக் கழக" த்துத் தலைவராய் விளங்கியவரும் இப்போது காலஞ்சென்றவரும் ஆகிய ஸர் ரோனல்ட் ராஸ் என்பவர் மலேசுரத்தின் காரணத்தை ஆராய முன்வந்தார். அவர் தம் நாய்நாட்டை விட்டு இந்தியாவுக்கு வந்து பொறுமையோடு பல ஆண்டு கள் இடைவிடாது உழைத்து ஆராய்ச்சி செய்து, அனோபெலிஸ் (Anopheles) என்னும் பெண்கொசுகால மலேச சுரம் உண்டாவதாகக் கண்டுபிடித்தார். இப் பெண்கொசுகு மலேசசுரங்கண்ட நோயாளியைக் கடித்து, அவனிடமிருந்து மலேச்சுரக்கிருமிகள் (malarial germs) உள்ள இரத் தத்தை உறிஞ்சுகின்றது. உறிஞ்சியதும் இக்கிருமிகள் இதன் இரத்தத்தில் நூற்றுக்கணக்காகப் பெருகின்றன. இக்கொசுகு மறுமுறை வேறொருவனைக் கடிக்கும்போது அவனுடைய இரத்தத்தில் தன்னிடம் இருந்த மலேசசுரக் கிருமிகளை உட்செலுத்திவிடுகின்றது. உடனே அவனுக் கும் மலேச்சுரம் உண்டாகின்றது. இதுதான் மலேச்சுரம் வருவதற்குக் காரணம்.

ஸர் ரோனல்ட் ராஸைப் போலவே ஜெர்மனி நாட்டு மருத்துவராகிய டாக்டர் கோக் (Dr. Koch) என்பவரும் ஆராய்ச்சி செய்தார். இவர் தம்முடைய பரிசோதனைச்

சாலையில் ஐம்பது ஆண்டுகள் உழைத்து, பாஸ்டர் ஆரம்பித்த வேலையை முடித்தார்; க்ஷயரோகத்தை (consumption) உண்டாக்கும் விஷக்கிருமியையும் க்ஷயத்தை நீக்கும் வழியையும் கண்டு பிடித்தார்; விஷபேதியைப் (cholera) பற்றி ஆராய்ச்சி செய்ய எகிப்து தேசம் சென்றார்; இந்தியாவிற்கு வந்து பிளேக் என்னும் பெருவாரி நோய் உண்டாவதன் காரணத்தையும் ஆராய்ந்தார். இவருடைய ஜப்பானிய மாணவர்தாம் மிகக்கொடிய நோயாகிய பியுபானிக் பிளேக் என்னும் நோயை உண்டாக்கும் விஷக்கிருமியைக் கண்டுபிடித்தவர். டாக்டர் கோச் மக்களுக்குத் துன்பம் அளித்துவரும் இந்தக் கொடிய பகைவர்களைக் கண்டுபிடிக்கும் வரையில் தாமது கஷ்டத்தைபபற்றிக் கவலை கொள்ளவில்லை. இவர் தம்முடைய உயிருக்கு ஆபத்து உண்டாகும் என்பதையும் நினைக்காமல் கிழக்கு ஆப்பிரிக்காவிற்குச் சென்று ஈக்கடியால் உண்டாகும் தூக்க நோயை ஆராய்ந்து அதைப்பற்றிப் பல உண்மைகளைக் கண்டு பிடித்தார். என்னே இவரது பெருந்தகைமை! என்ன இவ்ரது அருமுயற்சி!

> 'நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல்'

என்றார் வள்ளுவனார். ஆகையால் நோய் உண்டானதற்குக் காரணம் முதலில் தெரியவேண்டும். ஒரு நோயுண்டாவதற்குக் காரணம் விளங்குமானால், வைத்தியர்கள் அந்நோய் வராதபடி தடுக்க வழிகண்டு பிடிக்கக்கூடும். ஆகையால் எந்தக் கிருமியால் எந்த நோய் உண்டாகின்றது என்று அறியவேண்டியது அவசியமாயிற்று. எனவே விஷவுயிரணுக்களின் சாஸ்திரம் என்ற ஒரு தனிப்பட்ட சாஸ்திரமே தோன்றலாயிற்று. இது நோய் உண்டாக்கும் பாக்டீரியாவைப்பற்றியும் மற்ற விஷவுயிரணுக்களைப்பற்றி

யும் கூறுகின்றது. இந்த சாஸ்திரத்தில்வல்லோர், விஷ வுயிரணுக்களின் பழக்கங்களையும் கொசுகு, ஈ முதலிய விஷப்பூச்சிகளின் பழக்கங்களையும் அறிந்து அவற்றிற்கு நாம் இரையாகாதவாறு பாதுகாக்கின்றனர்; அவர்கள் அம் மைப் பால் போன்ற பலவித விஷப்பால்களைச (vaccines) செய்து அவைகளைக் குழலூசியின் மூலமாய் நம்முடைய தேகத்தில் செலுத்தி விஷ நோயைத் தடுக்கும் சக்தியை நமக்கு அளிக்கிறார்கள். விஷப்பால் என்பது யாது? அது செயற்கை முறையிற் செய்யப்படும் கிருமிகள் நிறைந்த நீர்ப்பொருள். இவ்விஷப்பால் சிறிய அளவு குழலூசி யின் மூலமாய் இரத்தத்திற் செலுத்துவதை விஷப்பால் ஊசி குத்துதல் (inoculation) என்பர். இக்கிருமிகள் நம்முடைய இரத்தத்திற் கலந்ததும், இரத்தத்தில் உள்ள உயிரணுக்கள் இக்கிருமிகளோடு போர்புரிந்து, குறைந்த அளவாயுள்ள இக்கிருமிகளைக் கொல்கின்றன. நம்முடைய இரத்தத்தில் இருக்கும் உயிரணுக்கள் இவ்வாறு விஷக் கிருமிகளோடு போரிடப் பழகிவிடுவதால், அக்கிருமிக ளால் உண்டாகும் விஷநோய்கள் நமக்கு உண்டானாலும் நமக்கு அந்நோய்களோடு போராடும் வன்மை ஏற்படுகின் றது. ஊசி குத்திக்கொள்வதால் விஷநோய்களுக்கு மக்கள் அதிகமாக இரையாகவேண்டுவதில்லை. இதனற்றன் மருத் துவர்கள் விஷநோய்கள் பெருவாரியாகப் பரவும்போது நமக்கு அந்நோய்கள் வராதவாறு ஊசிகுத்துகின்றார்கள். ஊசிகுத்திக்கொள்வதால் முதலில் உடம்புக்குச் சிறிது அசௌகரியம் ஏற்படும்; ஆனால், பின்பு அது பெரு நன்மைசெய்யும்; விஷநோய் வந்தாலும் அதைப் போக்கடிக்கும். ஆகையால், ஓர் ஊரில் விஷபேதியோ பிளேக்கோ பெருவாரியாகக் கண்டால் அவ்வூரிலுள் ளோர் அந்நோய்களுக்கு இரையாகாதபடி ஊசி குத்திக் கொள்ளவேண்டும்.

மக்களை விஷநோய்களிலிருந்து காக்கும்பொருட்டு ஊசிகுத்தும் முறையைக்கண்டுபிடித்தவர்கள் தங்களை ஆபத்துக்குள்ளாக்கியே இதைக் கண்டுபிடித்திருக்க வேண்டும் என்பது நிச்சயம்; ஏனென்றால் இவ்வளவு அளவு விஷப் பால் உடலுள் செலுத்தவேண்டும் என்று அறிவதற்கும், ஊசிகுத்துதல் அவசியமா என்று தெரிந்துகொள்வதற்கும் எத்தனையோ பரிசோதனைகள் நடந்திருக்கவேண்டும். இப் பரிசோதனைகளுக்கு உட்பட்டோரும் சில சமயங்களில் இறப்பதுண்டு இறந்தனர். ஆயினும், பல வீரமனிதர், 'விஷநோய் களிலிருந்து மக்களைக் காக்கத் தொண்டுபுரியவேண்டும்' என்று கருதி இவ்விதப் பரிசோதனைகளுக்கு உட்பட்டு விண்ணுலகம் சென்றுள்ளார்கள். திருவள்ளுவனார்,

> 'அன்பிலார் எல்லாம் தமக்குரியர்: அன்புடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு'

என்று திருவாய்மலர்ந்தருளியவாறு, மக்களை நோயி லிருந்து காக்கவேண்டும் என்ற பெரன்பினால் சில அமெரிக்க வீரர்கள் தங்கள் உயிரையும் அர்ப்பணஞ்செய்ய முன் வந்ததை நாம் கேட்டு ஆச்சரியப்படாமலிராம். நெடு நாளாக பஞ்சள் ஜுரம் உண்டாவதற்குக் காரணம் தெரி யாமலிருந்தது. இதுவும் மலேசசுரத்தைப்போலக் கொசு கிளால் உண்டாவது என்று சிலர் ஐயங்கொண்டனர். ஆனால், ஒருவருடன் எந்தவிதமான கொசுகு இந்த நோயை உண் டாக்குகின்றது என்றும், அது எப்படி வளருகிறது என் றும் அறியார். 1912-ம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாட் டரசாங்கம், டாக்டர் ரீட் (Dr. Reed) என்பவரின் தலை மையின்கீழ் மஞ்சள் ஜுரநோய் உண்டாகும் காரணத்தைக் கண்டுபிடிக்க மருத்துவ விசாரணைக்குழு (Commission) ஒன்றை ஏற்படுத்தியது. இக்குழுவினர் இந்நோய் உண் டாவதற்கு உள்ள காரணங்களைக் கண்டுபிடிக்கப் பல பரி

சோதனைகள் நடத்தவேண்டியவர்களாயிருந்தனர். அப் பரிசோதனைக்கு உட்படுவோருடைய உயிருக்கு ஆபத்து ஏற்படினும் ஏற்படலாம். ஆகையால் அவர்கள் சில போர்வீரர்களை, 'இப்பரிசோதனைக்கு உட்பட முன் வர முடியுமா!' என்று கேட்டார்கள். ஐக்கிய நாட்டின் சேனையைச் சேர்ந்த பல போர்வீரர்கள் இத்தகைய தியாகஞ் செய்ய முன்வந்தார்கள். ஒரு சிலர் இக்காரியத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் மருத்துவ விசாரணைக் குழுவினரோடு புறப்படும்படியான ஏற்பாடும் முடிந்துவிட் டது. அரசாங்கத்தில் சேனைத்தலைவர் அவர்களை உற்சாகப் படுத்தும்பொருட்டு அவர்களைப் பார்த்து, 'அன்பர்களே, உங்களில் யாராவது இப்பரிசோதனையினால் இறக்க நேரிட் டால் அப்படி இறந்தவர்களுடைய குடும்பத்தாருக்கு அர சாங்கத்தார் உபகாரச சம்பளம் கொடுப்பர்' என்று கூறினர். இதைக்கேட்டதும் தியாகம் செய்ய முன் வந்த தொண்டர்களை ஒவ்வொருவரும் களிஷ்டோடு செல்ல உடனே பதிந்து விட்டனர். அவர்கள், 'நாங்கள் மக்கள் நன்மைக்காக எங்கள் உயிரைவிட வந்தோமேயன்றிப் பண ஆசையால் வரவில்லை' என்று கூறினார்கள். தங்கள் குடும் பத்துக்கு உபகாரச சம்பளம் கொடுப்பதைக் கூலியாட் களுக்கு வெகுமானம் அளிப்பதற்குச் சமானமாக அவர்கள் கருதினர்கள். அவர்கள் இதை அவமதிப்பாகவும் எண்ணி னர்கள். அவ்வீரமணிகளின் தியாக சிந்தையை என் னென்று புகழ்வது!

நோயின் துன்பத்தைக் குறைக்க வழிகள்

இப்படிப்பட்ட உயிர்த்தியாகங்களாலே மருத்துவர் கள் இக்காலத்தில் நோய்களை அடக்கி அவற்றால் உண்டா கும் துன்பங்களைக் குறைக்கின்றார்கள்; நோயினால் வரும் கஷ்டங்களை எந்தெந்த வழியிற் குறைக்கலாமோ அந்தந்த

வழிகளை எல்லாம் கண்டுபிடித்துள்ளார்கள் ; ரண சிகிச்சை செய்யும்போது நோயாளிக்கு ஆபத்து ஏற்படாதிருப்பதற்கும் வேதனை தெரியாதிருப்பதற்கும் அந்நோயாளி சிறிதுநேரம் உணர்ச்சியற்றிருக்கும்படி செய்யக்கூடிய குளோரொபாரம் (chloroform) என்னும் மயக்க மருந்தைக் கண்டுபிடித்திருக்கின்றார்கள் ; பெரிய வேதனையாற் கதறும் நோயாளியை ஒரு மருந்து ஊசி குத்தி நன்றாகத் தூங்குட்படி செய்கின்றார்கள். அவர்கள் மனுஷனுடைய உடலில் உள்ள ஓர் எலும்பைத் துண்டித்துவிட்டு அத் துண்டித்த சிறிய எலும்பில் மற்றோர் எலும்பை ஒட்ட வைக்கக்கூடும் ; மனிதனுக்குப் புதிய ஆயுள் அளிக்கக் கூடும் ; உண்மையில் அவர்கள் மனிதனுக்கு உயிர் உண்டாக்குவதைத் தவிர வேறை வேண்டுமானாலும் செய்யக் கூடும். இத்திறமைகளெல்லாம் மருத்துவர்களுக்கு எப்படிக் கிடைத்தன ? இவ்வழிகளைத்தும் எவ்வாறு உண்டாயின ? இவைகள் எல்லாம் பல தியாகமூர்த்திகள் பொறுமையாக உண்மையை ஆராய்ச்சி செய்ததன் பயனால் ஏற்பட்டன என்று சொல்லவும் வேண்டுமோ ?

அத்தியாயம் VIII

பஞ்சம் இல்லாப் பிரபஞ்சம்

வறுமையும் அரசாங்கமும்

நோய்ப்பகையை அழிக்கப் பாடுபட்டதைவிட இக்காலத்தில் வறுமை நோயை வெல்லப் படும்பாடு மிக அதிகம் என்றே சொல்லவேண்டும். இந்நாளில் எல்லா நாட்டினரும் தங்கள் தங்கள் நாட்டில் வாழும் மாந்தர் அனைவருக்கும் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத உணவுப் பொருள்களையாவது அளிக்கக்கூடிய சமுதாய முறையை

வருக்க இடைவிடாது முயன்று வருகின்றனர். இம்முறை நாடெங்கும் ஏற்படுமானால் இன்னும் ஒரு நூற்றாண்டுக்குள் ஏழைகளே இருக்கமாட்டார்கள் என்று நிச்சயமாய்க் கூறலாம். 'வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்' என்று கார்பர் அயோத்திக்குச சொன்ன நிலை உலகமெங்கும் உண்மையாகிவிடும். தொன்றுதொட்டு வந்த தப்பெண்ணங்களும் பண்டை மூடக் கொள்கைகளும் ஒழிய நெடுநாளாகும் என்பதிற் சந்தேகம் இல்லை. ஆனால் இப்போது நாகரிகம் பொருந்திய எல்லா அரசாங்கங்களும் தத்தம் நாட்டில வாழும் ஒவ்வொருவருக்கும் சுகங்களை அனுபவிக்க உரிமை உண்டு என்று கருதாமல் இல்லை; உணராமலில்லை. இங்கிலாந்தில் கி. பி. 18-ம் நூற்றாண்டில் நூற்றுக்கு எண்பதுபேர வறுமையில ஆழ்ந்து கிடந்தனர். அவர்களுக்கு இரண்டு வேளை உணவு கிடைப்பதும் அரிதாயிருந்தது; ஒருவேளை உணவு கிடைப்பதும் நிச்சயமில்லாதிருந்தது. பாவம், அவர்கள் உடுக்கவும் வழியற்றிருந்தார்கள். ஆனால், இப்போதோ இங்கிலாந்தில் வறுமை குறைந்திருக்கின்றது. ஆங்கில அரசாங்கத்தினர் தங்கள் நாட்டில் உள்ள ஏழைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டனர். இந்தியாவிலும் வறுமை குறையாமலில்லை. நம் நாட்டில் முன்பு அடிக்கடி வந்துகொண்டிருந்த பஞ்சம் இப்போது தலைகாட்டுவதில்லை. ஏன்? இந்தியாவில் இக்காலத்தில பஞ்சம் வரக் காரணமே இல்லை. காலமழை பெய்யாமற் போனாலும் காலவாய் ஜலம் வயலுக்கும் பாய்கின்றது. நாட்டில் விளைவு இல்லாமற்போயினும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு உணவுப் பொருள்களைக் கொண்டுபோகப் போக்குவரத்துச் சாதனங்கள் உண்டு. அரசாங்கத்தார் பஞ்சகாலத்தில் நாட்டு மக்களுக்கு உதவி புரியத் தனியாகப் பஞ்சகால சேமநிதி வைத்துள்ளார்

கள். ஆகையால், நம் நாட்டினர் பஞ்சத்தைப்பற்றிப் பயப் படவேண்டியதில்லை.

(1) 'நீடுந் தீப்பசி யாற்குடர் கொளுந்திய நிலத்தார்
ஆடுந் தின்கலா அடகுதின் றனர்; நிலன் அகழ்ந்து
வாடும் பல்வகைக் கந்தமும் தின்றனர்; மக்கள்
காடும் குன்றமும் நிரப்பினர் தின்பன கருதி.

(2) சிறுவர் கையன தாயர்தாம் பறித்தனர் தின்றூர்;
முறுகு தீப்பசி பொறுக்கலார் மக்கள்ஊன் முதலா
உறுப சுந்தசை யாவையும் தின்றனர், உலகத்(து)
'அறைப ழஞ்சொலைப புதுக்கினா, மானமாண்(பு)
அற்றூர்'

என்ற பஞ்சகால நிலை இனி இந்தியாவில் ஏற்படாது என் பது திண்ணம். இனிமேல் மனிதர்கள் பஞ்சத்தின் கொடு மையால் தங்கள் குழந்தைகளை விற்கவும் செய்யார்கள்; பசியினின்று காக்க வழியின் பக்கங்களிற் குழந்தைகளைப் போட்டுவிட்டு, 'யாராவது எடுத்துச செல்வாரா?' என்று பார்த்துக்கொண்டிருக்கவும் செய்யாகள். பஞ்சம் வந் தாலும் இப்படிப்பட்ட துன்பங்கள் ஒரு நாளும் வாரா. இக்கால அரசாங்கம் பஞ்சத்திலிருந்து மக்களைக் காக்கும் கடமையை நன்கு உணர்ந்திருக்கின்றது.

வறுமையை நீக்க முயற்சி

எல்லா நாட்டினரும் தங்கள் தேசத்தில் உள்ள வறுமைப்பிணியை ஒழிக்க ஏராளமான விளைபொருள்களை உண்டாக்க முயன்று வருகின்றனர்; நிலங்களை எவ்வழியில் அதிகமாக விளையச செய்யலாம் என்று நிலங்களைப்பற்றிச் சாஸ்திரீயமுறையில் ஆராய்ந்து கற்று வருகின்றனர். ஏராள மான விளைவு உண்டாகும்பொருட்டு நிலங்களுக்கு ரசாயன முறையிலே செய்த எரு போடப்படுகின்றது. இங்கிலாந் தில் கி. பி. 16-ம் நூற்றாண்டில் ஒரு வருஷத்துக்கு ஏக்கர்

ஒன்றில் ஆறு புஷெல்* கோதுமை கிடைத்தது. இப்போது சாஸ்திரீய முறையில் நிலங்களை உழுது பண்படுத்துவதால் எக்கர் ஒன்றில் முப்பது புஷெல் கோதுமை கிடைக்கின்றது. இந்தியாவில் சாஸ்திரோக்தமாக விவசாயம் செய்வதைப்பற்றித் தப்பான எண்ணம் இருந்து வருகின்றது. சிறந்த சாஸ்திர சம்பந்தமான முறையில் விவசாயம் செய்யும் நாடுகளில் தேசவருமானம் லக்ஷக் கணக்காகப் பெருகியிருப்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

விளைபொருள் அபிவிருத்தி

கானடாவிலும் அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் இந்த விஞ்ஞானத் துறையில் மக்கள் அதிகமாக வேலை செய்துவருகின்றார்கள். ரசாயனசாஸ்திரம், பௌதிக சாஸ்திரம், தாவர சாஸ்திரம், விலங்குநூல் (zoology), நுண்ணுயிர் நூல் (bacteriology) ஆகிய இந் நூல்களின் அறிவெல்லாம் செடிகளின் இயற்கைத் தன்மையை அறிந்து கொள்வதற்கும், விளைவை அதிகப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. இந்த அறிவினால் மாம்பழத்தில் உள்ள இனிய தன்மையை அதிகப்படுத்தி அதில் உள்ள புளிப்புக் குணத்தை அறவே அகற்றிவிடலாம் என்றால் யாவரும் ஆச்சரியப்படக்கூடும். இப்போது இது சாதாரண காரியம். சாஸ்திரீய முறையில் நிலத்தைப் பயிரிட்டால், விதையில்லாததும் சாறு அதிகம் உள்ளதுமான ஆரஞ்சுப் பழத்தை விளைவிக்கலாம் என்பதில் ஐயமில்லை.

பர்பாங்க்

அமெரிக்க நாட்டில் ஒரு செடியை மற்றொன்றாக மாற்றுவதிலும், ஓரினத்தை வேறோர் இனமாகச் செய்வதி

*ஒரு புஷெல் கோதுமை=60 பவுண்டு அல்லது சுமார் 20 படி.

லும் வெற்றி பெற்றவர் திரு. லூத்தர் பர்பாங்க் (Mr. Luther Burbank) என்பவர் ஆவர். அவர் செடிகள் வைத்து வள மாகப் பயிரிடுவதிற் கைதேர்ந்தவர். சில ஆண்டுகளுக்குள், பல பல புதுப்புது வசையான காய் கறிச் செடிகளையும் பழச்செடிகளையும் அவர் உண்டாக்கியது அவருடைய புகழை என்றும் நிலை நாட்டும். அவர் 1849-ம் ஆண்டிற் பிறந்தவர்; இளமையிலிருந்தே தமது தந்தையாரது தோட்டத்திற் செடிகளை வைத்து வளமாகப் பயிரிடுவதில் ஈடுபட்டு வந்தவர். நாம் எப்படி நம்முடைய நண்பர்களின் சௌகரியங்களை அன்போடு கவனித்து வருகிறோமோ, அப்படியே அவர் தம் தோட்டத்தில் இருந்த செடிகளின் சௌகரியங்களைக் கூர்ந்து நோக்கி அவைகளை மிகவும் அக்கறையாய்ப் பாதுகாத்துவந்தார். இப்படிச் செடிகளைப் போஷித்து வந்ததால் நல்ல ப்லன் எற்பட்டது. அவர் ஒருநாள் தாம் வளர்த்த உருளைக்கிழங்குச் செடியில் புது வகையான விதைகளைக் கண்டு அவற்றை எடுத்துப் பயிரிட் டார். அவ்விதைகளிலிருந்து இருபத்துமூன்று வகையான வளமுள்ள உருளைக்கிழங்குச் செடிகள் உண்டாயின. அந்த இருபத்துமூன்று வகைகளில் ஒன்று அளவுக்கு மேற்பட்ட வளமுடையதா யிருந்தது. இதிலிருந்து ஒரு பெரிய உருளைக்கிழங்குக் கொத்துக் கிடைத்தது; இக்கொத்தில் இருந்த கிழங்குகள் சாதாரணமாய் இருப்பதைவிட மிகப் பெரியனவாயும் மெதுவினவாயும் நல்ல வகையினவாயும் இருந்தன. பர்பாங்க் இவைகளை மற்றவர்கள் பயிரிட விதைகளாக விற்றார். அநேகர் இவற்றை வாங்கிப் பயிரிட் டனர். இவற்றால் உண்டான கிழங்கு மற்றெல்லாக் கிழங்கு களையும் விட வளமானதாய் இருந்ததால், பயிரிட்ட தோட் டக்காரன் ஒருவன் இந்த வசையான உருளைக்கிழங்குக்குப் பர்பாங்க் உருளைக்கிழங்கு என்று பெயரிட்டான். உருளைக் கிழங்கில் பர்பாங்க் செய்த சீர்திருத்தத்தால் அமெரிக்க

ஐக்கிய நாடுகளினுடைய வருமானம் லகூக் கணக்காகப் பெருகியது. நாட்டின் செல்வ விருத்திக்குக் காரணமாயிருந்த புதுவகையான உருளைக்கிழங்கை உண்டாக்கிய பர்பாங்க் 1926-ம் ஆண்டில் மண்ணுலக வாழ்வைவிட்டு மறைந்தார்.

கால்நடைகளிலும் அபிவிருத்தி உண்டாயிற்று. கால் நடைகளை வளர்ப்போர், நன்கு தெரிந்த இயற்கை விதிகளை அனுசரித்துக் கால்நடைகளில் வேண்டாத இனத்தை நீக்கி நல்ல இனங்களை இக்காலத்தில் விருத்தி செய்துள்ளனர்.

வேலையில்லாக் கஷ்டமும் அதை நீக்க மேஞட்டார் செய்யும் முறையும்

இப்போது பலர் போதுமான உணவு உண்டு நல்ல சுகாதார முறையில் இன்பமாக வாழ்ந்து வந்தாலும், இன்னும் ஒவ்வொரு நாட்டிலும் வேலை இல்லாமல் திண்டாடுவோர் இல்லாமலில்லை. நாளுக்கு நாள் வேலையில்லாது கஷ்டப்படுவோர் புற்றீசல்போல் பெருகிக்கொண்டே வருகின்றார்கள். இவ்வேலையில்லாத் திண்டாட்டம் என்னும் பகையோடு விடாப் பெரும்போர் நடந்துவருகிறது. எல்லாத் தேயத்தினரும் தங்கள் தங்கள் நாட்டுமக்களுக்கு வேலை கொடுக்கப் புதுப்புது வழிகளைத் தேடுகின்றார்கள். சில அரசாங்கங்கள் வேலை கிடையாத ஒவ்வொருவருக்கும் இருக்க வீடும் உண்ண வாரம் வாரம் ஒரு சிறிய அளவு உபகாரச் சம்பளமும் அளிக்கின்றன. வேலை தேடிக்கொடுக்கும் வரைக்கும் இந்த உபகாரச் சம்பளம் வேலையில்லாத ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுகின்றது. ஒவ்வொரு பெரியபட்டணத்திலும் வேலையில்லாது திண்டாடுவோரின் தொகையைக் கணக்கெடுக்கவும், ஆள் வேண்டும் இடங்களைக் குறித்துவைக்கவும் தனிப்பட்ட உத்தியோகஸ்தர்கள் உண்டு; இவர்கள் காலியுள்ள வேலைகளைக் குறிப்பிட்டு

வைத்திருப்பார்கள். வேலை தெரிந்திருப்பவரும் வேலைக்காரர் வேண்டுமென்போரும் இவ்வுத்தியோகஸ்தர்களுக்கு எழுதி உதவி பெற்றுக்கொள்ளலாம். மேஸ்திரிகள் ஒவ்வொன்றிலும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க இப்படிப்பட்ட முறை வகுக்கப்பட்டிருக்கின்றது.

வேலைக்காரர்கள் பாதுகாப்பு

முதலாளிகளால் வேலைக்காரர்கள் நன்முகப் பாதுகாக்கப்படுவதற்காகப் பல சட்டங்கள் உள. சிறந்த சுகாதார முறையிற் கட்டப்பட்டுள்ள வீடுகள் வேலைக்காரர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. வேலை செய்யும் தொழிற்சாலைகள் காற்றுள்ள இடங்களாகக் கட்டப்பட்டுள்ளன. வேலைக்குத் தகுந்தபடி வேலைசெய்யும் நேரம் வகுக்கப்பட்டிருக்கின்றது. எவ்வளவுக்கு எவ்வளவு வேலை கஷ்டமாயிருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு வேலைசெய்யும் நேரமும் குறைகின்றது. நேரம் குறைந்திருந்தாலும் கஷ்டமான வேலைசெய்வோருக்கு முழுச்சம்பளம் கிடைக்கும். நிலக்கரிச் சுரங்கம் போன்ற அபாயகரமான இடங்களில் வேலைசெய்பவர்களுக்கு விசேஷமான சௌகரியங்கள் உண்டு. அபாயகரமான வேலைசெய்யும் தொழிலாளர்களில் யாராவது காயம்பட்டு முடமானாலும், யாதாவதொரு விபத்தால் யாருக்காவது மரணம் ஏற்பட்டாலும் முடமானவர்களுடைய போஷணைக்கும் இறந்தவர்களுடைய குடும்பப் பாதுகாவலுக்கும் முதலாளிகள் பணவுதவி செய்யவேண்டும். ஆகையால் அபாயகரமான வேலையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு ஆபத்து ஏற்பட்டாலும் சௌகரியம் கிடைக்கின்றது. கிழவராகிவிட்டாலும் முடவராகிவிட்டாலும் அப்போது அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்கின்றது.

அஞ்ஞானத்தை ஒழிக்கமுயற்சி

அறியாமையே வறுமைக்குக் காரணம்; ஆதலால் ஒவ்வொரு தேசத்தாரும் அஞ்ஞானத்தை ஒழிக்கப் பாடுபடுகின்றனர். இதனற்பொன் பதினைந்து வயது அடையும் வரைக்கும் ஆண்களையும் பெண்களையும் பள்ளிக்கூடத்திற் கல்வி கற்குமாறு அரசாங்கம் வற்புறுத்துகின்றது. இக்கல்வி அவர்களை உலக வாழ்க்கைக்கு ஏற்றவர்களாக்குகின்றது. இதனால் அவர்கள் தங்களுடைய கைகளையும் கண்களையும் நன்றாகப் பயன்படுத்திச் சம்பாதித்து, உபயோகமுள்ள குடிகளாக வாழக்கூடிய திறமையைப் பெறுகின்றார்கள். பகையின்றிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஜன சமூகத்தின் அங்கத்தினராக வாழக்கூடிய வழியை இக்கல்வி அவர்களுக்குக் காட்டுகின்றது. சுகாதாரத்தைப் பற்றிய விதிகளைக் குடிகள் கைக்கொள்ளவேண்டிய கடமைகளையும் இந்த இலவசக் கட்டாயக் கல்வியிற் சிறப்பாகப் போதிக்கப்படும் பாடங்கள். எதிர்காலத்தில் குடிகளாக விளங்கும்போது, அடையவேண்டிய உரிமைகளையும், குடிகளாக ஏற்றுக்கொள்ளவேண்டிய பொறுப்புக்களையும் மாணவருக்குப் போதிக்கப்படுகின்றன.

அறியாமை, வறுமை ஆகிய இரு பகைகளோடும் இப்போது இடைவிடாது போர்புரிவதுபோல, இன்னும் அப்போரை விடாமல் ஒவ்வொரு தேசத்தாரும் மீடித்துப் புரிவார்களானால், ஒவ்வொருவரும் இன்பத்திலும் செல்வத்திலும் தாம் அடையவேண்டிய பங்கை அடைந்துவிடக் கூடும் என்று நிச்சயமாய்க் கூறலாம். கம்பர்,

> 'கல்லாது நிற்பார் பிறர் இன்மையின், கல்வி முற்ற
> வல்லாரும் இல்லை; அவைவல்லர் அல்லாரும் இல்லை;
> எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே,
> இல்லாரும் இல்லை, உடையார்களும் இல்லை மாதோ'

என்று அன்று அயோத்திச்சுக் கூறிய திருவாக்கு எதிர் காலத்தில் உலக முழுவதற்கும் ஒக்கும். செல்வமும் இன்பமும் அடைய வழி எற்பட்டிருந்தும், ஒருவன் கஷ்டப்படுவானுனை அப்படிக் நுன்பப்படுவது அவனுடைய அறியாமையினல் ஆகும் என்றே கூறவேண்டும்.

அத்தியாயம் IX

யந்திர காலம்

நீர்மார்க்கத் தந்தி

மார்ஸ் (Morse) என்னும் அமெரிக்கர் தந்தியைக் கண்டுபிடித்து அதைப் பிரசாரஞ்செய்வதற்கு முப்பதினுயிரம் டாலர் செலவு செய்ய அமெரிக்கச் சனட் சபையோரை வாதாடிப் பெருங்கஷ்டப்பட்டு அவர்களிடமிருந்து அனுமதி பெற்றபோது, அவர் ஒரு காலத்தில் தந்திக் கம்பியினுல் பூமி முழுவதும் சுற்றப்படும் என்பதை உணர்ந்திராரர். புதுப்பொருள் கண்டுபிடித்தவர்கள் பலர் எப்படி வறுமையில் ஆழ்ந்துகிடந்தார்களோ அப்படியே மார்ஸும் பூமியின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்குச் செய்தி அனுப்ப இலேசான வழியைக் கண்டுபிடித்ததாக உலகத்தார்க்கு உணர்த்துவதற்கு முன்னே, மிகக்கொடிய தரித்திரத்தில் வீழ்ந்துகிடந்தார். பூமியின் மேலே மின்சாரத்தின் உதவியைக்கொண்டு தந்திக்கம்பிகளிற் செய்தி அனுப்புவதுபோலக் கடலில் மின்சாரம் பாயும் தந்திக்கம்பிகள் மூலமாய் விஷயம் அனுப்பமுடியாது. கடலுக்கு இக்கரையில் உள்ள நாட்டுக்கும், கடலுக்கு அக்கரையிலுள்ள நாட்டுக்கும் இருக்கும் தூரம் மிகவும் அதிகம். கடலில் மூழ்கிக்கிடக்கும் தந்திக்கம்பிகளை வெவ்வேருகப் பிரித்து வைத்தலும் கஷ்டம். கடலில் தந்திக்கம்பிகளை ஒரே

இடத்தில் அசையாது வைப்பதற்கு ஆதாரமும் கிடை யாது. இக்கஷ்டங்களால் நிலமார்க்கத் தந்தி உபயோகத் துக்குவந்து நெடுங்காலமான பின்னரே நீர்மார்க்கத் தந்தி வழக்கத்தில் வந்தது.

கெல்வின் பிரபு

கெல்வின் பிரபு (Lord Kelvin) என்பவர்தாம் கடல் மார்க்கத் தந்தியைக் கண்டு பிடித்தவர். அவர் கிளாஸ்கோ பல்கலைக்கழகத்திற் பேராசிரியராக இருந்த டாம்சன் என்பவருடைய குமாரர் ஆவர். கேம்பிரிட்ஜ் சர்வகலா சாலையில் தமது பதினேழாவது வயதிற் சேர்ந்து படித்துக் கொண்டிருந்தபோதே இவர் பெரிய கணக்கறிஞர் என்று பெரும்புகழ்பெற்றார். இவருக்குக் கணக்கில் இருந்த விருப்பம்போல மற்ற விஷயங்களிலும் விருப்பம் இருந்தது. இவர் பலவித விளையாட்டுக்களிலும் தேகாப்பியா சங்களிலும் சிறந்து விளங்கிலுலும், இலக்கியக் கல்வியை யும் சித்திரக் கலையையும் விரும்பாமலில்லை. இளம்பருவ மாகிய இருபத்து மூன்றுவது வயதிலே இவர் கிளாஸ்கோ சர்வகலாசாலையில் விஞ்ஞான சாஸ்திரப் பேராசிரியராக அமர்ந்து வேலை பார்த்து வந்தார்; அங்கு ஆசிரியராய் இருக்கும்போதுதான் மின்சாரத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யலானார். ஆரம்பத்திலிருந்தே தம்முடைய ஆராய்ச்சி களிற் காணும் உண்மைகள் அனைத்தையும் உலக உபயோ கத்திற்குப் பயன்படுத்துவதில் கண்ணுங்கருத்துமாயிருந்த தால், அவர் தம்முடைய ஆயுள்காள் முழுவதும் மின்சார சக்தி, அச்சக்தியால் உண்டாகும் காரியம், அக்காரியத் தால் ஏற்படும் பயன் என்பன போன்ற மிகச் சிக்கலான விஷயங்களையே ஆராய்ந்துவந்தார். இவருடைய முயற்சி யின் பயனால் இப்போது உலக முழுவதும் தந்திச்செய்தி கள் ஓடுகின்றன.

அயர்லாந்துக்கும் கிரீன்லாந்துக்கும் இடையே உள்ள அட்லாண்டிக் மகாசமுத்திரத்திலே நீண்டதூரம் கடல் தந்திக்கம்பி முதல்முதலாகப் போடப்பட்டது. இதற்கு முன்னமே இங்கிலாந்திற்கும் பிரான்சிற்கும் கடல்தந்தி அனுப்ப முயற்சி நடந்ததுண்டு. அம்முயற்சியும் ஏறக் குறைய நிறைவேறியது உண்டு. தந்தி நீர்க்கீழ்ச் செல்லாது என்று கூறியவர்களுக்கு அறிவுறுத்தவே அது செய்ததாகும். இங்கிலாந்தில் பிரைட் (Bright) என்பவரும், அமெரிக்காவில் பீல்டு (Field) என்பவரும், தங்களுடைய இருநாடுகளையும் கடல் மார்க்கத் தந்தியால் இணைக்கப் பலதரம் முயன்றார்கள். 1857-லிருந்து 1865-வரைக்கும் நூற்றுக்கணக்கான டன் எடையுள்ள கம்பிகள் கடலிற் போடப்பட்டன. நடுக்கடலில் கம்பி பலமுறை அறுபட்டுக் கொண்டேயிருந்து, கடைசியில் 1865-ல் கம்பி அறுபடாதவாறு போடப்பட்டது. அக்கம்பி இரண்டு மாதங்களே பயன்பட்டது. அதற்குப் பின்பு அதன் மூலமாக வந்த செய்தி கேட்கக்கூடிய நிலையில் வராததால், அச் செய்தி பதிவு செய்யப்படவில்லை. கடல் தந்திக் கம்பி கனமாயிருந்ததாலும், தந்தி நெடுந்தூரம் போகவேண்டியிருந்ததாலும், உப்புநீர் பட்டதாலும், செய்தியைக் கொண்டுபோகும் மின்சாரம் பலஹீனமடைந்ததால், செய்தி பதிவுசெய்ய முடியவில்லை என்ற காரணத்தைக் கெல்வின் பிரபு நன்கு உணர்ந்து அக்குறையை நீக்கும் வழியைத்தேடினார்; சரியான கம்பிகளைப் போடச் செய்தார்; பலஹீனமான மின்சாரமும் கொண்டுவரும் மிகவும் நுட்பமான ஓசையையுங் கூடப் பதிவு செய்யக் கூடிய விஷயவாங்கி யந்திரத்தையும் (Receiver) செய்தமைத்தார்.

கெல்வின்பிரபு செய்த முயற்சியின்பலனாக இப்போது உலக முழுதும் தந்திக்கம்பிகள் போடப்பட்டுள்ளன.

மூன்று லக்ஷம் மைல் நீளம் தந்திக்கம்பிகள் இப்போது கடலிற் போடப்பட்டிருப்பதைக் கேட்டு யாவரும் வியக்காமலிருத்தல் முடியாது. இத்தந்திக்கம்பிகள் அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலும், பசிபிக் பெருங்கடலிலும், வடகடலிலும், இங்கிலீஷ் கால்வாயிலும், கருங்கடலிலும், மத்தியதரைக் கடலிலும், இந்து மகா சமுத்திரத்திலும், கிழக்குக்கடலின் எல்லாப் பாகத்திலும் நீர்க்கீழ் ஓடுகின்றன. நாள் ஒன்றுக்கு லக்ஷக் கணக்கான வார்த்தைகள் உலகத்தின் ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்துக்கு அனுப்பப்படுகின்றன. கடல் மார்க்கமாகச் செல்லும் கம்பிகளைச் செய்யவும் போடவும் ஏராளமாகச் செலவாகிறபடியால், கடல் மார்க்கத் தந்திச் செய்திகளுக்கு ஆயிரக்கணக்கான பவுன்கள் கட்டணம் வாங்கவேண்டியதாயிருக்கிறது. செய்தியை எடுத்துச் செல்லும் மின்சாரம் மிக மெல்லிய கம்பியில் ஓடுகின்றது. கம்பி எவ்வளவு மெல்லியதாய் இருக்கிறதோ அவ்வளவும் மின்சாரம் பாய்வதற்குத் தக்கதாயிருக்கின்றது. ஆனால், அந்த மெல்லிய கம்பியை ரப்பராலாவது சணல் நாராலாவது ஈயத்தாலாவது பித்தளையாலாவது எஃகாலாவது ஒரு சுற்றின்மேல் ஒரு சுற்றுகப் போர்த்திப் பாதுகாக்கவேண்டும்; இல்லாவிட்டால் அது நூற் கயிறுபோல் அறுந்துவிடும். அக்கம்பி கரைக்கருகில் கனமானதாயும் போகப்போக நடுக்கடலில் மென்மையானதாயும் இருக்கும். அது கடலின் அடியில் இருப்பதால் எஞ்சினீர்கள் அதைப் பரிசோதிப்பதற்கு வெளியே எடுக்கப பெருங்கஷ்டப்பட வேண்டியதாயிருக்கின்றது; எனென்றால், அதில் கடற் பாசியாவது பவளம் போன்ற வஸ்துவாவது ஒட்டிக்கொண்டு வளர்ந்திருக்கும். சில வேளைகளில் கம்பியை இழுத்தால் அது பவளத்துண்டோடு வெளிவரும்; மற்றுஞ் சில வேளைகளில் பெரிய மீனோடு மேலே வரும். சில வருடங்களுக்கு முன்னே தென் அமெ

ரிக்காவில் வால்பரைசோ (Valparaiso) என்னும் இடத்துக்கு அருகில் தந்திக்கம்பி கெட்டுவிட்டது. வேலைக்காரர்கள் அதை மேலே இழுத்தபோது இறந்த திமிங்கிலம் ஒன்று அக்கம்பியோடு மேலே வந்தது. அதன் உடல் முழுதும் அக்கம்பி சுற்றியிருந்தது. முதல் முதல் கடல் மார்க்கமாகத் தந்திக்கம்பி போட்டவர்கள் இப்படிப்பட்ட கஷ்டங்களையெல்லாம் அனுபவித்தார்கள்.

ஆகாயத் தந்தி

ஆனால், மனிதன் கஷ்டங்கள் வந்தால் அவைகளை நீக்க மாத்திரமேயன்றி, கூடுமானால் அக்கஷ்டங்கள் இனிமேல் வராதவாறு அறவே ஒழிக்கவும் முயல்கின்றன். கடலை நீரின்கீழே கம்பிகளைப் போடும் கஷ்டங்களையும், அக்கம்பிகளைப் போடச்செலவாகும் பெருந்தொகையையும் நீக்கவே சில ஆண்டுகளுக்குமுன் ஆகாயத் தந்தி கண்டுபிடிக்கப் பட்டது. சிறிது காலத்திற்குமுன் செய்தி அனுப்பக் கம்பி வேண்டியதில்லை என்றும், கம்பியின் மூலமாகச் செல்லும் மின்சாரமோ வேறு எதுவோ - கம்பியில்லாமலே அச செய்தியைக் கொண்டுபோகும் என்றும் கண்டறிந்தோம். இப்போது நாள்தோறும் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குக் கம்பியில்லாமலே சமாசாரம் அனுப்பப்படுவதைக் காணலாம்.

கம்பியின் மூலமாகவோ காற்றின் மூலமாகவோ ஓடுவது அல்லது இயங்குவது எது? அது ஒளியைப்போன்றதும் ஆகாயத்தில் ஓடுவதுமாகிய ஓர் அதிநுட்பமான பொருளின் அலை. அதை ஆங்கிலத்தில் ஈதெர் (ether) என்பர். அது காற்றினால் கொண்டுபோகப்படுவதில்லை. காற்று அதன் வேகத்தில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட வேகமாக ஓடாது. அந்த அலை பார்க்கும் இடம் எங்கும் நீக்கம் அற நிறைந்திருக்கின்றது. ஆனால், நாம் அதைப் பார்க்க முடி

யாது. இந்த ஈதெர் என்னப்படும் அதிநுட்பமான பொரு ளின் அலைதான் செய்தியைக் கொண்டுசெல்கின்றது. மின் சார அலைக்கும் ஒளி அலைக்கும் ஒரே ஒரு வித்தியாசம் உண்டு. மின்சார அலை பெரியது; ஒளி அலை சிறியது. மற்றப்படி அவை இரண்டும் ஒரே வகையைச் சேர்ந் தனவே. அவை ஈதெரின் மூலமாய் ஒரேவேகமாக ஓடுவதாலும், ஒரே வேகமாக ஓடுவதாலும், எல்லாவிதத்திலும் ஒரேவிதமான இயற்கை விதிகளை அனுசரித்து நடப்பதாலும், அவை இரண்டும் ஒரே வகையைச் சேர்ந்தவை என்பது உள்ளங்கை நெல்லியங்கனி என விளங்கும்.



ஜகதீச சந்திரபோஸ்

இந்த ஈதெர் அலைகளைப்பற்றி முதல்முதல் கண்டு பிடித்தவர்களில் முதன்மையானவர் நமது நாட்டு விஞ்ஞான நிபுணரான ஜகதீச சந்திரபோஸ் ஆவர். அவர் இதை வியாபாரத்துறையில் பயன்படுத்தக் கவலை கொள்ளாமல்,

தாம் கண்டு பிடித்த உண்மையை மற்றவர்கள் விருத்தி செய்து பயன் படுத்திக்கொள்ள விட்டுவிட்டார். ஜெர்மனிய நாட்டுப் பேராசிரியராகிய **ஹெர்ட்ஸ்** (Hertz) என்னும் விஞ்ஞான கலைஞர் இந்தச சிக்கலான விஷயத்தைப்பற்றிக் தாமாகவே ஒருவா உதவியும் இன்றி ஆராய்ச்சி செய்துவந்தார். ஆனால், ஆகாயத் தந்தியால் முதல் முதல் உலகத்தை வியக்கச செய்தவர இத்தாலிய நாட்டினராகிய **மார்க்கோனி** (Marconi) என்பவரே. இவர் புதுப்பொருள் புனைவதில் நிபுணர். ஆகையால், ஜெர்மனி நாட்டு ஹெர்ட்ஸ் என்பவரால் இயற்றப்பட்டிருந்த பிரான்சு தேசத்துப் பௌதிக சாஸ்திரப் பேராசிரியர் **பிரான்லி** (Branly) என்பவராற் செம்மை செய்யப்பட்டதாகிய யந்திரத்தைக் கொண்டுதான் மார்க்கோனி வேலை செய்து இந்த ஆகாயத் தந்தியைக் கண்டுபிடித்தார். பரிசோதனைக் களத்தில் ஆராய்ச்சி புரியும் விஞ்ஞான கலைஞர், அறிவை விருத்திசெய்யும் நோக்கத்தைக்கொண்டு ஆராய்கின்றனரே அல்லாமல், தாம் காணும் உண்மையை வியாபாரத்திற் பயன்படுத்திச் செல்வத்தை விருத்திசெய்யப் பெரும்பாலும் கருதுவதில்லை.

ஒலிபரப்பும் கருவி

இக்காலத்தில் ஆகாயத் தந்தி **ஒலிபரப்புந் தூரசிரவணி** (Radio Telegraphy) என்னும்படியாக அதிகச் சீர் திருத்தமடைந்துள்ளது. இது கடலிற் சாசகக் கிடக்கும் ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றியிருக்கின்றது. தற்கால நீராவிக்கப்பல் ஒவ்வொன்றிலும் ஒவ்வோர ஆகாயத் தந்திக் கருவி வைக்கப்பட்டிருக்கின்றது. கடலில் ஒரு கப்பல் முழுகும்போது, அந்நிலையிலுள்ள கப்பல் உடனே தன்னிடத்தில் இருக்கும் ஆகாயத் தந்திக்கருவியின் மூலமாய்ச் சுற்றிலும் தூரத்தில் ஓடும் மற்றக் கப்பல்

களுகுகுச செய்தியை அனுப்பலாம். ஆபத்தில் இருக்கும் கப்பல் அனுப்பும் செய்தி ஆகாயத்திற் பரவிநிற்கும் ஈதரின் அலைகளால் எல்லாப பக்கங்களிலும் ஓடுகின்றது. எல்லாத் திசைகளிலும் ஓடும் மற்றக் கப்பல்கள் தங்களிடத்தில் உள்ள விஷயவாங்கியின் (Receiver) மூலமாக விஷயம் தெரிந்துகொண்டு ஆபத்தில் இருக்கும் கப்பலுக்கு உதவிபுரிய ஓடிவரும். கப்பல் மூழ்கும் இடத்துக்கு அருகில் உள்ள ஆகாயத் தந்தி நிலையங்களுக்கும் (Wireless stations) இவ்விஷயம் செலலும். அங்கு உள்ளவர்களும் அக்கப்பலுக்கு ஏதாவது உதவி அனுப்பலாம். இரவாயிருந்தாலும், புயலடித்துக்கொண்டிருந்தாலும் கவலைபடவேண்டிய அவசியமே இல்லை செய்தி எட்டியதும், எச்சமயத்திலும் ஆபத்தில் உள்ள கப்பல்களுக்கு இக்கருவியால் உதவி கிடைக்கும்.

இது ஆபத்தில் உள்ள கப்பல்களுக்கு உதவிசெய்வதுமாத்திரமலலாமல், உலகமக்கள் இன்பத்தைப பெருக்குவதற்கும் ஏற்ற கருவியாய் நிற்கின்றது. இதனல் பப்பாயில் நாடகமேடையிற் பாடும் பாட்டை நாம் சென்னையிற் கேட்கலாம். ஏறக்குறைய ஐந்நூறு ரூபாய் விலையுள்ள சிறந்த ஒலிபரப்பும் கருவி வைத்திருந்தால், நாம் ஆங்கில நாட்டில் லண்டன் நகரத்திற் பாடும் பாட்டுகளைச் சென்னையிற் கேட்டு ஆனந்திக்கலாம். உலகத்தில் உள்ள சந்தைகள் எல்லாம் இப்போது ஆகாயத் தந்தியால் இணைக்கப்பட்டுள்ளன ; அமெரிக்காவில் நியூயார்க் நகரத்துக் கடைகளில் விற்கும் பொருள்களின் விலை சில விநாடிக்குள் இங்கிலாந்தில் உள்ள லண்டன் நகரத்துக் கடைகளுக்குத் தெரிவிக்கப்படுகின்றது. இக்காலத்தில் ஒலிபரப்புங்கருவி என்னும் ரேடியோ பல நன்மைகளை உலகத்துக்குப் புரிந்து வருகின்றது.

ஆகாயப் பேச்சுத் தந்தியும் தூர உருவக் காட்சியும்

ஆகாயப் பேச்சுத் தந்தியும் (Wireless Telephone) இக்காலத்தில வந்துவிட்டது. இபபோது நீங்கள் ஆங்கிலச் சர்வகலாசாலையிற் கற்கும் உங்களுடைய நண்பர்களோடு பேசலாம். விஞ்ஞான கலைஞர்கள், 'நீங்கள் தூரதேசத்தில் உள்ள நண்பருடைய டெலிபோனைக் கிட்டபடிதாடு அவர்களுடைய முகங்களையும் காணக்கூடும்' என்று நமக்கு உறுதி கூறுகின்றார்கள். அவர்கள் தூரஉருவக்காட்சி (Television) யைப்பற்றிப் பரிசோதனை செய்து அரும்முயற்சியில் வெற்றியும் பெற்றுள்ளார்கள். சில மாதங்களுக்கு முன்னே முதல்முதல ஆஸ்டிரேலியாவிலிருந்து இங்கிலாந்திற்கு உருவம் ஒன்று அனுப்பபட்டதை நீங்கள் பத்திரிகையில் வாசித்திருக்கலாம். ஒருவன் ஆகாயத்தில் உள்ள ஈதெர் அலைகளின் மூலமாய் ஒரு படத்தை அனுபபி, நூற்றுக் கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள இடத்தில அதன் பிரதிபடம் உண்டாகுமபடி செய்வதே தூர உருவக் காட்சி எனப்படும். இவைகள் எல்லாம் விஞ்ஞான கலைஞர் சந்தோஷமாக விளையாடும் விளையாட்டுப் பொருள்கள் அல்ல; எதிர்காலத்தில் மக்களுக்கு நன்மை செய்யப் புது வழிகளைக் காட்டக்கூடிய கைகண்ட முறைகளே.

கிராமபோன்

கிராமபோன் சங்கீதம் கேட்டு அதன் மாயத்திறத்தால் மகிழ்ச்சியடையாத குழந்தையே இராது என்று சொல்லலாம். அமெரிக்காவில் விளங்கிய புதுப்பொருள் புனை நிபுணரான (inventor) ஏடிசன் (Edison) 1877-ம் ஆண்டு பேசும் யந்திரம் ஒன்று செய்தார். அக்காலத்திலிருந்து அதில் பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டன. ஒருவன் எப்படிப் பேசினானே பாடினானே அப்படியே பேசக்கூடிய பாடக்கூடிய கருவி ஒன்று இன்று கடையில் நாம்



Reproduced by permission of the Saraswathi Stores

கிராமபோனைக்கு முதலில் பாட்டை பதிவு செய்வது
(மாஸடா ரெக்காாட் யாா செய்தல்)

குறைந்த விலைக்கு வைரங்கூடிய. பேசும் கருவியின் அமைப்புமுறை சடினமானது அன்று ; சுலபமானதே. பேசும் ஒலியின் அலைகள் முதலில் மெழுகுமேலான பொருளாற் செய்யப்பட்டதும் எட்டடிவட்டமான தட்டிற் பதிவு செய்

யப்படுகின்றன. இம் முதல்கட்டுக்குத்தான் 'மாஸ்டர் ரெக்கார்ட்' (master-record) என்பது பெயர். பின்பு இதில் மின்சாரப் பூச்சு முறையால (electro-plating) பேச்சலைகள் நிரந்தரமாகப் பதிவு செய்யப்படுகின்றன. விலைக்கு விற்கப்படும் 'ரிகார்ட்டுகள்' இதிலிருந்துதான் எடுக்கப்படுகின்றன. 'கிராமபோன் ரிகார்ட்டுகள்' வல்கனைட் என்னும் பொருளால் எளிதாகச் செய்யப்படுவதனால் இவைகள் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன; வல்கனைட் என்பது ரப்பரும் கந்தகமும் சேர்த்துச் செய்யும் ஒருவகைச் சேர்க்கைப் பொருள்.

டிக்டாபோன் அல்லது சொல்வது சொல்லி

பேசுங் கருவியின் முறையைப் பின்பற்றிச் செய்யத்த சொல்வது சொல்லி என்னும் கருவியாகும். இதை ஆங்கிலத்தில் 'டிக்டாபோன்' (Dictaphone) என்பர் ஒலியைப் பதிவு செய்யும் முறையும், பதிவு செய்யப்பட்ட ஒலியைத் திரும்ப வெளியிடும் முறையும் சேர்த்துசசெய்யப்பட்ட ஒருவகை அமைப்பை உடைய யந்திரம் இது. இந்த யந்திரம் வியாபாரிகளுக்கு மிகவும் பயனுள்ளது. கிராமபோன்போல இது வேலை செய்யும். இதில் மெழுகு உருளை (Wax-cylinder) ஒன்று இருக்கின்றது. இந்த மெழுகு உருளையைப்போட்டதும் யந்திரம் வேலைசெய்ய ஆரம்பிக்கும். வியாபாரி இதை உபயோகிக்கவேண்டுமானால் இதன் குழாயின் முனையிற் பேசவேண்டும். அவன் பேசப்பேச அவனுடைய பேச்சு ஒலியின் அலைகள் இதில் உள்ள சுழலும் மெழுகு உருளையிற் பதியும். அந்த அலைகள் உருளையின் மெழுகின்மேல் அலைபோன்ற மெல்லிய வரிகளாக மறுமுறை தோன்றும். இந்த உருளையில் பன்னிரண்டு கடிதங்களுக்கு வேண்டிய விஷயங்கள் அடங்கும். வியாபாரி தான் அனுப்பவேண்டிய கடிதங்களுக்குப் போது

மான விஷயங்களைக் கூறி முடித்ததும் யந்திரத்தை நிறுத்தி விடலாம்.

By permission of Dictaphone Co., Ltd.
'டிக்டாபோன்' அல்லது 'சொல்வது கேட்டு'

மேலே அடுக்குவர் குமாஸ்தா (typist) எழுதுவதை அடுக்குவதற்கு செய்யவேண்டியவைகளைச் சித்தரித்துச் செய்து கொண்டு, இந்த டிக்டாபோனின் அருகில் அமர்ந்து, இதில் உள்ள விஷயவாக்கியங்களின் முனைகளைத் தன் இரு காதுகளி லும் கவனத்துக்கொண்டு, இதில் இருந்துவரும் வேலைத்தள்ளிய வுடன் யந்திரம் வேலைசெய்ய ஆரம்பிக்கும். வியாபாரி சொன்ன விஷயங்களைச் சொன்னபடியே மெழுகு உருளை திருப்பப்படும் வெளிவிடும். மேலே அடுக்குவர் குமாஸ்தா தன் எழுத்தை அடுக்குவர் வேகத்துக்குத் தக்கவாறு மெழுகு உருளையை மெதுவாகவும் வேகமாகவும் சுழலவிடலாம். இந்த யந்திரம் பெரிய வியாபாரச் சாலைக்கு இப்போது மிக

வும் பயன்படுகின்றது. டைப் அடிக்கும் குமாஸ்தா அதிக வேலையாய் இருக்கலாம். காரியாலயத் தலைவர் கடிதங்களுக்கு விஷயம் சொல்ல நினைக்கும்போது டைப் அடிக்கும் குமாஸ்தா வெளியே வேறு வேலையாய்ப் போயிருக்கலாம். அல்லது உத்தியோகசாலை மூடியதும் எல்லோரும் வெளியே சென்று விட்டபின்பு காரியாலயத் தலைவர் ஒரு கடிதம் அடிப்பதற்கு விஷயஞ் சொல்ல நினைக்கலாம். இப்படிப்பட்ட சமயங்களில் காரியாலயத் தலைவரோ முதலாளியோ கடிதத்துக்குக் குறிப்பிடவேண்டிய விஷயங்களைச் 'சொல்வது சொலலி'யின் மூலமாய்ச சொலலி விடலாம்; எவைகளைக் குறிக்க வேண்டுமோ அவைகளனைத்தையும் விடாமற் கூறிவிடலாம்; குமாஸ்தாவுக்குச் சொல்லும் வார்த்தைகள் தெரியாதவைகள் என்று சந்தேகித்தால் அவைகளை இவ்வாறு எழுத்துக்கூட்டவேண்டும் எனவும் குறிப்பிடலாம். குமாஸ்தா காரியாலயத்துக்குள் நுழைந்ததும் அவன் 'டிக்டாபோன்' கூறும் விஷயங்களை வாங்கி டைப் அடித்து அப்படி அடித்த கடிதத்தை அனுப்ப வேண்டிய இடத்துக்கு அனுப்பிவிடலாம். மெழுகு உருளையில் உள்ள விஷயங்களை டைப் அடித்ததும், நாம் மறு முறை அவ்வுருளையை உபயோகப்படுவதற்காகக் கூர்மையான கத்தியைக்கொண்டு அதன்மேலே உள்ள மெல்லிய பலகையான மெழுகைச் சீவி எடுத்துவிட வேண்டும். இம்மாதிரியாகச் சீவிச்சீவி அவ்வுருளையை நூறு முறை உபயோகிக்கலாம். ஒரு கடவைக்குப் பன்னிரண்டு கடிதங்களாக நூறு முறைக்கு 1200 கடிதங்கள் அடிக்க அவ்வுருளை பயன்படுகின்றது.

பேசும் அசை படம்

மற்றோர் ஆச்சரியமான பேசுங்கருவி, இப்போது புதிதாக வந்து எல்லோருடைய மனத்தையும் கவர்ந்துநிற்கும்

பேசும் அசைபடம் ஆகும். இதுவும் கிராமபோனைப்போலச் சாதாரணமாகிவிட்டது. பேசும் அசைபடம் நாகரிகமற்ற கிராமவாசிக்கும் வியபபையோ பயத்தையோ இக்காலத்தில் தருவது இல்லை. இன்னும் இது சீர்திருத்தமடையலாம்; கூடிய சீக்கிரத்தில் இது மனிதன் பேசுவது போலவும் செய்வது போலவும் செய்யும். லண்டனில் சில ஆண்டுகளுக்கு முன்னே நடித்த நாடகத்தை இன்றுதான் தங்கள் முன் பாரப்பதுபோல் ஜனங்கள் இப்படத்திற் காணலாம். திறமை வாய்ந்த நடிப்போர் ஒரு நாடகத்தை எப்படி நடத்திக்காட்டினார்களோ, அப்படியே யாதொரு மாறுபாடும் இன்றி அந் நாடகம் பதிவுசெய்யப்பட்டு, வேண்டும் போது திரைபபடத்திற் போட்டுக் காட்டப்படும்.

இனி வருங்காலத்தில் குழந்தைகள் சாதாரண பொம்மைகளை வைத்து விளையாடா; மனுஷன் தன் முயற்சியால் இயற்கையை வென்றதால் ஏற்படும் விளையாட்டுச் சாமான்களையே வைத்துக்கொண்டு விளையாடும். நம்மை இப்போது வியக்கச்செய்யும் புதுப்புனைவுகளும் (inventions), முயற்சியின் பலனைக்கண்ட பொருள்களும் எதிர்காலத்துக் குழந்தைகளுக்கு வியப்பை உண்டாக்கா என்று சொன்னாலும் மிகையாகாது.

அத்தியாயம் X

மானிடன் மானிடனே

மானிடனின் அற்பநிலை

பூமியில் மானிடன் அடைந்த முயற்சியின் வெற்றியைப்பற்றிக் கூறும்போது நாம் நம்மைப்பற்றிப் பெருமையாக நினைத்துக்கொள்வது இயற்கைக்கு மாறுபாடானது அன்று: அவன் பல வழிகளில் தன் வன்மையையும் துண்

ணறிவையும் காட்டியுள்ளதை இதுவரைக்கும் பார்த்துள் ளோம். அவனது நுண்ணறிவும் இயற்கையை வெல்லும் சக்தியும் மனத்தைக் கவரத்தக்கனவாயில்லை என யாராவது மறுக்க முடியுமோ? முடியாது, முடியாது!. ஆனால் இந்த மானிட உலகுக்கும் மற்ற உலகங்களுக்கும் உள்ள சம்பந் தத்தைச் சொல்லாமற்போனால் உலக சிருஷ்டியில் மனித னுக்கு உள்ள இடத்தைப்பற்றித் தப்பான எண்ணமே உண்டாகும். இதைத் தெரிந்துகொண்டால் கவிஞர்களும் தத்துவ ஞானிகளும் கூறுவன உண்மை என உணர்வோம். சென்ற நூற்றாண்டில் இருந்த **கான்ட் (Kant)** என்னும் ஜெர்மனிய நாட்டுத் தத்துவஞானியார், 'வானத்தைக் காணும்போதே மானிடனுக்கும் பிரபஞ்சத்துக்கும் உள்ள வேற்றுமை மனத்தில் உதிக்கின்றது. மானிட சக்தியால் மனிதனுடைய அறிவு நிலையையும் பிரபஞ்சத்தின் அளவற்ற தன்மையையும் நினைத்தறிதல் முடியாது' என்றார். **டெனிசன் (Tennyson)** என்னும் ஆங்கிலக் கவிஞர் பெரு மானரும் இவ்வாறுகூவ மனிதனை

'இரவில் அழுதிடும் இளஞ்சிறு குழந்தை,
கவிஞ்ஞரி காணக் கதறிடும் குழந்தை'

என்று மொழிந்துள்ளார்.

வானம் நீலமாய் இருப்பது ஏன்?

பூமி இயங்குகின்ற சூனியப்பிரதேசம், ஒன்றும் அற்ற கடலைப் போல் இருக்கின்றது. அப்பிரதேசம் கண்ணுக்குத் தெரியாத ஈதெர் நிரம்பிய இடமாகும். அதற்கு ஆதியும் இல்லை, அந்தமும் இல்லை. அதற்கு நிறமும் கிடையாது. அதுதான் ஆகாயம் அல்லது வானம் எனப்படுவது. ஆனால், வானத்துக்கு நீல நிறம் எவ்வாறு உண்டாயிற்று என்ற கேள்வி எழலாம். வாயுமண்டலத்தில் உள்ள தூசி யின் அணுக்களால் வானம் நீலநிறமாகத் தோன்றுகின்ற

தேயன்றி, தன்னிடத்தில் இருக்கும் நிறத்தால் அன்று. வாயு மண்டலமும் (atmosphere) முந்நூறு மைல் உயரம் வரைக்குமே உண்டு. அதுவரைக்கும் நீல நிறம் தோன்றலாம். அதற்கு அப்புறம் உள்ள வெட்ட வெளியில் நிறமே கிடையாது. கவிஞர் ஒருவர் கூறியதுபோல அது தொட்டுணரக்கூடிய இருள் அடர்ந்த இடமாகும்.

நெருப்புக் கோளங்களின் தன்மை

இக்கையை இடத்திற்றான் வெறுங்கண்ணுக்கான நெருப்புக் கோளங்களும் நட்சத்திரக் கூட்டங்களும் இயங்குகின்றன. நாம் இரவில் அவைகளைக் காண்கின்றோம். அவைகள் நம்மைவிட்டு நெடுந்தூரத்தில் இருப்பதால், அவைகள் எத்தனை என்றுவது, அவைகள் எவ்வளவு தூரத்தில் இருக்கின்றன என்றுவது கண்டறிய நாம் சுவலைப்படுவது இல்லை. நாம் அவற்றைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியதே. நம்முடைய பிரபஞ்சத்தில் என்ன உண்டு என்று நன்றாக அறிந்துகொள்வதற்கு அதை இருபாகங்களாகப் பிரித்து ஒவ்வொன்றையும் தனித் தனியாக ஆராய்தல் நல்லது. முதலாவது, பூமி உள்ளிட்ட சிறிய கோள்களின் கூட்டத்தை ஆராய்வோம். இக்கூட்டத்திலேயே சூரியனும் அடங்கியிருக்கின்றது. இச்சூரியனே நமக்கு உஷ்ணத்தையும் வெளிச்சத்தையும் கொடுக்கின்றது. புதனும் (Mercury) சுக்கிரனும் (Venus) செவ்வாயும் (Mars) பல கிரகங்களில் உள்ள சந்திரர்களும் இக்குழுவில் அடங்கியுள்ள மற்றக் கிரகங்களாகும். சில வேளைகளில் வால் நட்சத்திரங்களும் இக்கூட்டத்தில் வருவது உண்டு.

இவை தவிர வேறு கிரகங்களும் உண்டு. அவையும் சூரியனும் சேர்ந்தே நம்முடைய பிரபஞ்சம் ஆகின்றது. இரவில் நட்சத்திரங்களாகக் காணப்படுகின்ற கோள்கள்,

நாம் காணும் சூரியனைப்போன்ற கிரகங்களே என்று தெரிந்து கொள்ளவேண்டும். நமக்கு ஒளி அளிக்கும் சூரியனும் ஒரு நட்சத்திரமே. நட்சத்திரங்களும் சூரியர்களே. நமக்கு நட்சத்திரங்களாகக் காணப்படும் சூரியர்களைச் சுற்றிக் கிரகங்களும் சந்திரர்களும் இருந்தாலும் இருக்கலாம். இன்னும் அவைகளைப்பற்றிய விஷயம் கண்டுபிடிக்கப்படவில்லை. அவைகள் கண்ணுக்கு எட்டாத நெடுந்தூரத்தில் இருப்பதால், நாம் அதிக தூரம் பார்க்கக்கூடிய சக்தி வாய்ந்த தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கொண்டும் அவைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளக் கூடாத நிலையில் இருக்கின்றோம். நமக்கு அருகில் இருப்பதாகத் தோன்றும் ஆல்பா சென்டாரி (Alpha Centauri) பூமியிலிருந்து இருபத்தைந்து லக்ஷம் கோடி (25,000,000,000,000) மைல் தூரத்தில் இருக்கின்றது. இன்று இப்பூமிக்கு இந்த நட்சத்திரத்திலிருந்து வந்திருக்கும் கிரணமானது, இந்த நட்சத்திரத்தைவிட்டு நான்கு வருடங்களுக்கு முன்னமே புறப்பட்டிருக்கவேண்டும். அதாவது இதனுடைய கிரணம் நாம் இருக்கும் பூமியை வந்து அடைய நான்கு ஆண்டுகள் செல்லும். இந்த நட்சத்திரந்தான் நமக்கு மிக அருகில் இருக்கின்றது. இன்னும் சில நட்சத்திரங்கள் மிக நெடும் பெருந்தூரத்தில் இருக்கின்றன என்றும், அவைகளின் வெளிச்சம் நம்முடைய பூமியில் இன்னும் வந்து சேரவில்லை என்றும் வான சாஸ்திரிகள் நம்புகிறார்கள். மொத்தம் ஏறக்குறைய இருபது லக்ஷத்துக்குக் குறையாமலும் முப்பது லக்ஷத்துக்கு மிகாமலும் உள்ள சூரியர்களாகிய நட்சத்திரங்கள் வானத்தில் விளங்குகின்றன. நம்முடைய சூரியன் இந்நட்சத்திரங்களின் இடையில் இருக்கின்றது; ஆனால், நடுமத்தியில் இல்லாமல் மத்தியிலிருந்து சில ஆயிரங்கோடி மைல் தூரம் தள்ளியிருக்கின்றது.

நமது சூரியனும் அன்டோரீஸ் நட்சத்திரமும்

இந்த நட்சத்திரங்கள் எல்லாம் நம்முடைய சூரியனைப் போலவே அளவு கடந்த உஷ்ணமும் வெளிச்சமும்

நட்சத்திரக் கூட்டம்

கொண்டுள்ள நெருப்புக் கோளங்கள். நமக்கு வெளிச்சம் அளிக்கும் சூரியன் நடுத்தரமான் அளவு உள்ளது. இதை

விட மிகப் பெரியனவாகிய நட்சத்திரங்களும் உண்டு. விருச்சிக தாரா சணங்களுள் (Constellation Scorpion) ஒன்றுகிய அன்டோரீஸ் (Antares) மிகப்பெரிய நட்சத்திரங் களில் ஒன்றுகும். இந்த அன்டோரீஸின் குறுக்களவு முப் பது கோடி மைல்களாகும். நமது சூரியன் இந்த அன் டோரீஸைவிட நான்கு கோடி மடங்கு சிறியது. ஆகையால் நமது சூரியன் கடுத்தரமானது என்று சொல்வது மிகவும் பொருத்தமன்றே? இந்த அன்டோரீஸின் பருமனே இவ் வளவு இருக்குமானால் இதன் உஷ்ணத்தைப்பற்றிச் சொல்ல வும் வேண்டுமோ? சூரியனுக்கு உள்ள வெப்பத்தின் தன்மை யை விளக்கினால் அன்டோரீஸின் உஷ்ணநிலை தானுகவே விளங்கிவிடும். சூரியனுக்கும் நமக்கும் உள்ள தூரம் ஒன்பது கோடியே முப்பது லகூஷம் மைல் ஆகும். இந்த இருட் படலம் நிறைந்த இடைவெளியில் பூமியிலிருந்து சூரியன் வரைக்கும் ஒன்பது கோடியே முப்பது லகூஷம் மைல் தூர மும், ஏறக்குறைய இரண்டரை மைல் குறுக்களவு உள்ள கெட்டியான பனிக்கட்டித் தூண் ஒன்றை நிறுத்தக்கூடு மானால், அதை நமது சூரியன் ஒரே நொடியில் உருக்கி நீராக்கிவிடும்; ஏழு நிமிடியில் நீராவியாக்கிவிடும். ஒன்பது கோடியே முப்பது லகூஷம் மைல் நீளம் உள்ள பனிக்கட்டித் தூணை இருந்த இடம் தெரியாதபடி செய்யக்கூடிய சூரிய உஷ்ணத்தின் கடுமை இப்படி யிருக்குமானால், சூரியனைவிட நான்கு கோடி மடங்கு பெரியதான அன்டோரீஸின் வெப்ப நிலை எப்படியிருக்கும்!

நட்சத்திரங்களின் வயதை அறியும் வகை

எல்லாச் சூரியர்களும் ஒரே அளவான உஷ்ணம் தரு வது இல்லை. அவைகள் கொடுக்கும் வெப்பம் அவற்றின் பருமனுக்கும் வயதுக்கும் ஏற்றவாறு இருக்கும். நட்சத் திரங்களிலும் இளவயது உடையனவும் வாலிபவயது

உடையனவும் நடுத்தரமான வயது உள்ளனவும் சாகுந்தரு ணத்தில் உள்ளனவும் இருக்கின்றன. நம்முடைய சூரியன் நடுத்தரமான வயதுடையது. வானநூல் வல்லார் நட்சத் திரத்தின் வயதை அதன் ஒளியைக்கொண்டு கண்டுபிடிக் கின்றார்கள். மங்கலான சிவப்புநிற ஒளியை அளிக்கும் நட்சத்திரம் நடுத்தரமான வயதுடையதாகும். அது பெற வேண்டிய அளவு உஷ்ண நிலையை அடையவில்லை; வாலிப வன்மையையும் இழந்துவிடவில்லை என்க. அது இன்னும் இளமையாயிருந்தால் அதை 'அரக்கன்' (Giant) என்பார் கள் வானசாஸ்திரிகள். அது கிழமாயிருந்தால் அவர்கள் அதைக் 'குள்ளன்' (Dwarf) என்பார்கள். நல்ல வாலிபப் பருவத்திலிருக்கும் நட்சத்திரம் நீலம் கலந்த வெண் ணிறமாயிருக்கும். வயதாக வயதாக அது நம்முடைய சூரி யனைப்போல மஞ்சள்நிறமுடையதாகும்; இன்னும் வய தேறினால் ஆரஞ்சு நிறத்தையும், இன்னும் வயது அதிக மானால் செந்நிறத்தையும் அடையும்; அதற்குமேல் வய தாகி விட்டால் கண்ணுக்குத் தெரியாது மறைந்துவிடும். ஒரு சூரியன் அழிந்துபோக எவ்வளவு காலமாகும் என்று நாம் சொல்ல முடியாது. நமக்கு அதிகமாய்த்தெரிந்துள்ள சூரியனுக்கு எப்போது அழிவுகாலம் ஏற்படும் என்று சொல்லமுடியா தென்றால் மிக நெடுந்தூரத்தில் உள்ள மற்றவைகளைப்பற்றி எப்படிச் சொல்லமுடியும்?

செவ்வாய்க் கிரகமும் உயிர் வாழ்க்கையும்

நாம் வாழும் பிரபஞ்சத்தைப்பற்றிச் சொல்லும் போது அடிக்கடி 'நம்முடைய உலகம்' என்ற தொடரைக் குறிப்பிட வேண்டியிருந்தது; ஏனென்றால் இவ்வுலகத் துக்கு அப்பாலும் வேறு பல உலகங்கள் இருப்பதாக ஐயுறுகின்றோம். இந்த விஷயத்தைப்பற்றி இங்கு விளக்கு வோம். விருச்சிக தாரா கணங்களில் ஒன்றாகிய அன்டேரீ

வில் உமக்கு ஒரு நண்பர் இருந்து அவர் உமக்கு ஈதெர் மூலமாய் ஆகாயத் தந்திச் செய்தி அனுப்ப விரும்பினால், அவர் சென்னையில் இருக்கும் உமக்குக் கீழ்வருவதைப் போல் விலாசம் குறிப்பிடுதல் வேண்டும் :

திரு. அ. மு. கோட்டிலிங்கனார்,
20, பெருமாள் நாய்க்கன் தெரு,
புரசை,
சென்னை,
இந்தியா,
பூமி,
சூரியக்கூட்டம்,
அ. இ. உ. மூலம்.

இதுதான் சுருக்கமான மேல் விலாசம்.

இப்படிச் சொல்வதனால் மற்றைச் சூரியக்கூட்டத்தைச் சார்ந்த கிரகங்களில் உயிர்கள் உண்டா என்றும், நம்மைப் போல் மக்கள் மற்றைய கோள்களில் வாழ்கின்றார்களா என்றும் கேட்கலாம். ஆம், நம்மைப்போன்ற மக்கள் வேறு கிரகங்களில் இருக்கின்றார்கள் என்று நினைக்கின்றோம். ஆனால், இக்கருத்தை உறுதியாய் நிலைநாட்டத்தக்க ஆதாரங்கள் கிடைக்கவில்லை. பண்டைக்காலத்தில் சில வானசாஸ்திரிகள் நம்முடைய சூரியனிலும் அதைச்சார்ந்த கிரகங்களிலும் உயிர்கள் இருந்தன என்று கனவுகண்டதும் உண்டு. ஆனால், மிகச் சிறந்த நவீன கருவிகளைக்கொண்டு ஆராய்ச்சி செய்ததில் வேறுவகையான விஷயம் புலப்பட்டது. நெருப்புக் கோளமான சூரியனிலும் உயிர்கள் இருக்கமுடியுமா ? அதன் உஷ்ணத்தில் எப்பொருள் இருத்தல்கூடும் ? அதில் ஓர் உயிரும் இராது என்று சொல்லவும் வேண்டுமா ? வேறு சில கிரகங்களில் உயிர்கள் வாழலாம். அப்படி உயிர் வாழக்கூடிய கிரகங்கள் எவை ? நாம் ஒவ்

வொன்றாக ஆராய்ந்து பார்த்தால் உயிர் வாழும் கிரகங்கள் எவை என்று கண்டுபிடிக்கலாம். நெப்டியூன், சனி, வியாழன், ஆகிய இவற்றிற் பெரும்பாலும் உயிர்கள் வாழ்தல் கூடாத காரியம்; எனென்றால் இவைகள் சூரியனுக்கு வெகுதூரத்தில் உள்ளன. உயிர் உண்டாச்சுவதற்கு இன்றியமையாத சூரியவெளிச்சம் இவைகளின்மேல் படாது. இப்படியானால் இவைகளில் உயிர்கள் எப்படி வாழமுடியும்? இப்பூமியில் உயிர்கள் வாழ்வதற்கு உரிய நிலைமைகளைக் கண்டு ஆராயும்போது இத்தன்மைகள் இக்கிரகங்களில் இல்லாமையால் இவற்றில் எவ்வகைப் பிராணியும் இருக்க முடியாது என்று நாம் பெரும்பாலும் கூறலாம்.

புதன், சுக்கிரன், செவ்வாய் என்னும் கிரகங்களைப் பற்றி மேலே குறிப்பிடவில்லை. புதன் கிரகத்தைப்பற்றி உறுதியாய்க் கூறிவிடலாம். பல காரணங்களுள், முக்கியமாக இரண்டு காரணங்களால், புதனில் உயிர்கள் இருத்தல் முடியாது என்று துணியலாம். முதலாவது, புதனின் ஒரு பாகம் எப்போதும் சூரியனுக்கு எதிராக இருப்பதால் அப்பாகம் நிரந்தரமாகக் கொதித்துக்கொண்டேயிருக்கின்றது; அதன் மற்றொரு பாகம் என்றும் மிகுதியாகக் குளிர்ந்தேயிருக்கின்றது. மிகுந்த உஷ்ணமும் மிகுந்த குளிர்ச்சியும் உடைய தீதோஷ்ணநிலையில் ஓர் உயிரும் வாழ்வது முடியாது. இரண்டாவதாக இப்புதனில் காற்று இல்லை என்று தெரிகின்றது. ஒருவேளை அதில் காற்று இருந்தாலும் அக்காற்று உயிர்களைப் பாதுகாக்கக்கூடிய நிலையில் இல்லாத மெல்லிய காற்றாய் இருக்கும். அதில் இருந்த வாயுப்படலம் (atmosphere) ஒழிந்துவிட்டது. இவ்விரண்டு காரணங்களுடன் மற்றொரு காரணமும் உண்டு. புதன் நம்முடைய பூமியைப் பார்க்கிலும் மிகவும் சிறியது. அங்கு உள்ள பொருளின் எடை இங்கு உள்ள எடையில் நான்கில் ஒரு பங்காகும். நான்கு மணங்கு எடையுள்ள ஒருவன் இப்

பூமியிற் சிறிது கஷ்டப்பட்டு நடக்கலாம். புதனில் அவனுக்கு எடை ஒரு மணங்கு ஆவதால் அவன் அங்குக் குழந்தையைப்போல் ஓடலாம். இக்காரணங்களால் புதனில் எத்தகைய உயிரும் வாழமுடியாது என்று உறுதியாய்க் கூறலாம்.

இனிச் சுக்கிரனைப்பற்றி ஆராய்வோம். சுக்கிரன் காணக்கூடிய நட்சத்திரங்களில் அழகானது. இதுதான் காலையிலும் மாலையிலும் ஒளி வீசுவது. மேகப்படலத்தால் எப்போதும் மறைக்கப்பட்டிருப்பதால் இச்சுக்கிரனின் நிலப்பரப்புகூட இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இதில் வீசும் காற்று மிகவும் ஈர்மானது. நாம் இதை ஒரு காரணமாகக்கொண்டு சுக்கிரனில் உயிர் வாழ்வதற்கு வசதி இல்லை என்று சொல்வதற்கு இடம் இல்லை. பல கஷ்டமான நிலையிலும் உயிர்கள் வாழமுடியும். நாம் பார்த்திராத சில பிராணிகளுக்குச் சுக்கிரனில் வீசும் ஈரக்காற்றும், எங்கும் பரவிப் பாயும் ஒளியும் ஒரு வேளை ஏற்றனவாய் இருப்பினும் இருக்கலாம். இக்கிரகம் ஏறக்குறைய பூமியைப்போலவே பருமனுடையது; இது சூரியனுக்கு மிக அருகிலும் இல்லை; அதிக தூரத்திலும் இல்லை. சில வானசாஸ்திரிகள் புதனைப்போல சுக்கிரனின் ஒரு பக்கமும் எப்போதும் சூரியனுக்கு எதிரே இருந்தது என்று பல ஆண்டுகளாக நினைத்துவந்தார்கள். சமீபகாலத்தில் நடந்த ஆராய்ச்சியால் சுக்கிரன் செங்குத்தான அச்சிற் சுழலுகின்றது என்றும், அது அப்படி முழுச்சுற்றுச் சுற்ற ஐந்து அல்லது ஆறு வாரங்களுக்கு மேலாகும் என்றும், இதனால் சுக்கிர வாசிகளுக்கு—அதில் மக்கள் இருப்பது உண்மையானால்—நீடித்த பகலும் இரவும் இருக்கும் என்றும், அந்தப்பகலும் இரவும் பூமியில் இருக்கும் இரவையும் பகலையும்விட நாற்பது மடங்கு அதிகமாயிருக்கும் என்றும் நாம் அறியலாமெனும். இக்காரணங்களை நோக்கும்போது நாம் இதிலும் மக்கள் இருத்தல் முடியாது என்று கூறலாம்.

உயிர்கள் வாழலாம் என்று நினைக்கக்கூடிய கிரகம் ஒன்று இருக்கின்றது. அதுதான் செவ்வாய்க்கிரகம். வானசாஸ்திரிகள் செவ்வாயில் மக்கள் வாழ்வதாகக் கனாக் காண்கின்றார்கள். செவ்வாய்க்கிரக வாசிகளோடு சம்பந்தம் ஏற்படுத்தப் பல முயற்சிகள் நடைபெற்றன. ஆனால், இப்போது உள்ள அறிவைக்கொண்டு ஆகாயத்திற் சிலமைல் உயரத்துக்கு அப்பால் தந்திச்செய்தி அனுப்ப வழி ஒன்றும் ஏற்படவில்லை. வானநூல் வல்லார் செவ்வாயின் அளவு, உஷ்ணநிலை, வாயுநிலை, அதன் நிலப்பரப்பு ஆகிய இவை களைக் கண்டுணர்ந்து அதில் ஒருவேளை மக்கள் வாழக்கூடும் என்று நினைக்கின்றார்கள். தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கொண்டு பார்க்கும்போது, அதில் அதிகமான வரிகள் தெரிகின்றனவாம். அவ்வரிகள் அக்கிரகத்தில் ஓடும் கால் வாய்களாக இருக்கலாம் என்று அவர்கள் கருதுகின்றார்கள். செவ்வாய்க்கிரக வாசிகள் இக்கால்வாய்களின் மூலமாய்ப் பனிக்கட்டிப் பிரதேசத்திலிருந்து உஷ்ணப் பிரதேசத் துக்கு நீர் செலுத்துகின்றார்கள்போலும். நம்முடைய பூமி யில் இருக்கும் பருவ காலங்களைப் போலவும் நமக்கு உள்ள இரவு பகலைப் போலவும் அங்கும் பருவகாலங்களும் இரவு பகலும் இருக்கின்றன. நம்முடைய மலையுச்சியில் இருப் பதுபோல அப்பருவங்களும் அந்த இரவும் பகலும் சிறிய அளவு குளிர்ந்திருக்கும்.

செவ்வாய்க் கிரகத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்தவர்க ளுள் தலைசிறந்தவராகிய டாக்டர் லவல் (Dr. Lowell) என்பவர், செவ்வாய்க்கிரகம் நம்முடைய பூமியைவிட முன் னேறி யிருப்பதாகக் கூறுகின்றார். செவ்வாய் வாசிகள் அறிவில் நம்மைவிடச் சிறந்தவர்கள். அங்குக் கிடைக்கும் நிலப்பொருள்கள் முதலியன மிக அதிகம். அக்கிரகத்தை செம்மை செய்யப்பட்ட சகாராப் பாலைவனம் என்னலாம். நாம் அதைத் தருவங்களுக்கு அருகில் உள்ள உறைபனி

உறைவிடம் என்றும் கூறலாம். இப்படியிருப்பதனற்றுன் அக்கிரகவாசிகளிற் சிறந்த அறிவாளிகள், நாம் ஆச்சரிய முறும்படியான வகையில் பகீரதப் பிரயத்தனஞ்செய்து கால்வாய்களை வகுத்திருக்கின்றார்கள் என்றும், இப்படிச் செய்யாவிட்டால் அங்கு ஒருவரும் வாழ்தல் அரிது என் றும், அவர்கள் தாங்கள் அடியோடு அழிந்துபோகாமல் வாழும்பொருட்டே கால்வாய்களை வெட்டியுள்ளார்கள் என்றும் சில வானசாஸ்திரிகள் ஊகிக்கின்றார்கள்.

மானிடன் நிலை

செவ்வாய்க்கிரகத்தில் மக்கள் இருக்கிறார்களோ இல் லையோ சொல்லமுடியாது. இக்காலத்தில் பலர் செவ்வாய்க் கிரகத்தில் மக்கள் இல்லை என்றே கருதுகின்றார்கள். ஆனால், இந்தப் பூமியில் மக்கள் இருக்கின்றார்கள். இவர்கள் நிலை என்ன? மானிடர் நிலை வெகு அற்பமாகவே தோன்று கின்றது. என்ன விந்தை! இடம் அகன்ற பரந்த அளக்க முடியாத இந்த உலகில் மனிதனுக்கு மாத்திரம் அறிவு இருப்பது ஏன்? இவன் இருக்கும் உலகம்மட்டும் உயிர்கள் நிரம்பிய இடமாய் இருப்பது ஏன்? ஆதியும் அந்தமும் அற்ற சிருஷ்டியில் வேறு உலகங்கள் பாழிடங்களாகவும் உயிரற்ற பிரதேசங்களாகவும் இருப்பது ஏன்? மற்றக் கிரகங்களில் இருக்கும் அறிவுள்ள உயிர்களில் இம்மனித னும் ஒருவனாய் இருக்கக் கூடுமானால், இவனுக்கு அவர் களைப்பற்றி ஒன்றுமே தெரியாமல் இருப்பதும், இவன் அவர்களோடு யாதொரு சம்பந்தமும் இல்லாமல் தனித்து இருப்பதும் என்ன ஆச்சரியம்! ஆ! இம்மனிதன் நிலை எத்தகைய அற்பநிலை! என்ன இழிவான நிலை! இவன் குறளனாய் இருக்கின்றன்; கடலில் ஒரு சிறு நீர்த்துளி போல் உள்ளான்; பரமரகசியமான ஆரம்பத்தையும் அறிய முடியாத முடிவையும் உடையவனாய் இருக்கின்றன். ஆ! படைப்பின் விந்தையே விந்தை!

அத்தியாயம் XI

மேன்மேற் செல்லும் புகழ் மேகம்

இயற்கையின் சக்தி

இயற்கை தன்னுடைய இரகசியங்களை வெளியிடாமல் மிகவும் ஜாக்கிரதையாய்ப் பாதுகாக்கின்றது. மனிதன் பல நூற்றாண்டுகளாக உழைத்தபோதிலும், சாமர்த்தியமாகச் சில விஷயங்களைக் கண்டுபிடித்தபோதிலும், அவன் இயற்கையைப்பற்றி அறியவேண்டியனவற்றில் மிகச் சிறிய அளவே தெரிந்துகொண்டிருக்கின்றான். இயற்கையின் பலத்தை அடக்கி அதைத் தன் வசப்படுத்தப் பல நூற்றாண்டுகளாக அவன் முயன்றபோதிலும், இன்னும் அவன் இயற்கையைத் தனக்கு அடக்கி நடத்த முற்றும் முடியாதவனாயிருக்கிறான். அது இன்னும் மனிதன் செய்ததை அழித்துக்கொண்டே வருகின்றது. எரிமலைகள் இன்றும் அட்டூழியம் செய்யாமலில்லை. அவைகள் இரண்டு நூற்றாண்டுகளுக்குமுன் அழித்தபடியே இந்த நூற்றாண்டிலும் அக்கினியைக் கக்கி மனிதன் அழகாகக் கட்டிய சிறந்த பட்டணங்களை அழிக்கின்றன. பூமியின் நுண்ணிய அசைவையும் பதிவு செய்யக்கூடிய பூமியதிர்ச்சிப் பதிவுக் கருவியைக் (Seismograph) கண்டுபிடித்தும், பூமியதிர்ச்சி இக்காலத்தில் நகரங்களை அழிக்காமல் இருக்கின்றதா? அது அழித்துக்கொண்டே வருகின்றது. பூமியதிர்ச்சிக்காக மக்கள் அஞ்சி நடுங்கி அலறி ஓடுவதை இன்றும் காண்கின்றோம். இயற்கையின் வன்மைக்கு முன்னே மனித சக்தி எங்கே?

மானிடன் இன்னும் செய்யவேண்டியவை

அழிவை உண்டாக்குவல்ல இயற்கையின் பலம் ஒருபுறம் நிலைத்துநிற்க, மானிடவர்க்கத்தையே நிர்மூலமாக்கக்

கிருமிப்பகைகள் மற்றெருபுறம் பெருகிவருகின்றன. ஓர் ஆங்கில நூலாசிரியர் கூறியபடி, அக்கிருமிகள் மானிடப் பூண்டையே அறுத்துவிடும்போலும்! மனிதர்க்குப் பகைகளாகிய அந்த உயிரணுக்கள் (microbes) நாளுக்குநாள் பெருகி வருகின்றன. அவைகளை அழிக்கும்வரைக்கும் மானிடன் அவைகளோடு போரிடவேண்டியது இன்றியமையாதது. அந்த அணுக்கள் ஒரு நிமிஷத்துக்குப் பத்துலக்ஷமாகப் பெருகி வளர்ந்தால் அவன் அவைகளைக் கொல்லாமல் இருத்தல் முடியுமா? தன் உயிரைப் பாதுகாக்கவேண்டுமானால் அவன் அவைகளை அவசியம் கொல்லவேண்டும். திரு. 'H. G. வெல்ஸ் (Mr. H. G. Wells) என்பவர், 'கிருமிகள் இன்றுமுதல் லக்ஷக் கணக்கான ஆண்டுகள் இந்த உலகை ஆளும்' என்று கூறிய தீர்க்கதரிசனம் உண்மையாக நிறைவேறினாலும் நிறைவேறாமற் போனாலும், மனிதன் அவைகளை வளரவிட்டுக் கவலையீனமாய் இருத்தல் முடியாது, முடியாது. அவன் அவைகளை உயிர்வாழ விட்டுவிட்டுத் தான் தப்பி வாழ்தல் முடியாது. அவன் அன்றும் போரிடவேண்டியவனாயிருந்தான்; இன்றும் போரிடவேண்டியவனாய் இருக்கின்றான்; என்றும் போரிடவேண்டியவனாய் இருப்பான்.

மானிடன் இன்னும் இயற்கையின் சக்தியை வென்றுவிடவில்லை. இயற்கை மனிதனுக்கு இங்கும் அங்குமாக மிகச் சொற்ப விஷயத்தையே புலப்படுத்தியிருக்கின்றதேயன்றி அதிகமாக ஒன்றும் வெளிப்படுத்திவிடவில்லை. மனிதனை சிறிது தெரிந்துகொண்டதும் இயற்கையின் முழு விவரங்களையும் உணர்ந்துகொண்டதாகக் கர்வம் கொள்கின்றான். இயற்கையரசியின் ராஜ்யம் முழுவதும் பிடிக்கப்படவில்லை; சிறிதுபாகமே கைப்பற்றப்பட்டிருக்கின்றது. உண்மையான விஞ்ஞான கலைஞன் இதை உணராமலில்லை. அவ்வன்னையின் இரகசியங்கள் இன்னும் பல

இருக்கின்றன. இடைவிடாமல் அதிகப் பொறுமையோடு உழைத்தாலல்லாமல் இயற்கையரசியின் இரகசியங்கள் வெளிவரா. உயிர்கள் பூமியில் தோன்றிய வரலாறும் மறை பொருளாகவே நிற்கின்றது. இதைப்போலவே உலகப் படைப்பும் பிரபஞ்சத்தின் எதிர்கால நிலையும் பரமரகசியங்களாகவே இருக்கின்றன. இன்னும் மனிதன் தன்னைப் பற்றி வேண்டிய அளவு அறிந்துகொள்ளவில்லை என்றால் மிகையாகாது. அவன் தன் மனத்தைப்பற்றித் தெரிந்து கொள்வது, எல்லா இரகசியத்திலும் பரமரகசியமாயிருக்கின்றது. அவனால் 'மனம் என்பது யாது?' 'அது என்ன?' என்பன போன்ற விஷயங்களை அறிய முடியவில்லையே!

எவரெஸ்டு உச்சியும் மானிட முயற்சியும்

ஆனால், மானிடன் இறுதியில் இயற்கையை வெல்லக் கூடும் என்பதை இதுவரைக்கும் தன் முயற்சியால் அடைந்துள்ள வெற்றியால் காட்டியுள்ளான். அவன் ஒவ்வொரு நாளும் தன் அறிவை விருத்திசெய்வதோடு கடைசிவரைக்கும் போரிடும் மனவுறுதியையும் சக்தியையும் பெற்றுவருகின்றான். தெரியாத விஷயங்களிற் புகுந்து அவற்றைச் சிறிது சிறிதாகத் தெரிந்துகொள்ள அவன் பாடுபடுவதை எவரெஸ்டு சிகரத்தின் உயரத்தைக் கண்டுபிடிக்க அவன் செய்யும் பகீரதமுயற்சி காட்டவில்லையா? 1922-ம் ஆண்டிலிருந்து ஏறக்குறைய ஒவ்வோர் ஆண்டும் பெருமுயற்சியுடைய கூட்டத்தார் அச்சிகரத்தைக் காண முயன்று கொண்டே வருகின்றனர். எவரெஸ்டு உச்சியோ வருவோரைப் பார்க்கவிடாமல் இமயமலையில் அதிக உயரத்தில் நின்றுகொண்டிருக்கின்றது. உயரத்தால்மாத்திரம் அதைக் கண்டுபிடிப்பது கடினமாயில்லை. இன்னும் பல கஷ்டங்களாலும் அதை நெருங்குவதும் முடியாத காரியமாய் இருக்கின்றது. அவ்வளவு உயரத்தில் பிராணவாயு

கிடையாது. இந்த வாயு இல்லாமற்போனால் மனிதன் எப்படி மூச்சுவிட முடியும்? எவரெஸ்டு உச்சிக்குப் போவதற்கு அதைச் சூழ்ந்துள்ள செங்குத்தான குன்று களில் ஏறவேண்டும். அங்கு ஏறும்பொழுது அவ்விடத் தில் ஓடும் உறைபனியாற்றிலிருந்து பனிப்பாறைகள் புரண்டு ஏறுவோர்மேல் விழும். உறைபனியோ எங்கும் உண்டு. இவைதாமோ கஷ்டங்கள்? அம்மம்ம! குளிர்ந்த காற்றும் இடைவிடாது அடித்துக்கொண்டிருக்கும். இத்தகைய நிலையில் எவரெஸ்டின் அருகில் அவர்கள் எப்படிச் செல்ல முடியும்?

மனிதனுக்கு இக்கஷ்டங்கள் எல்லாம் தெரியும். ஆனா லும் அவன் அதன் உயரத்தைக் கண்டுபிடிக்கவேண்டும் என்று கொண்ட மனவுறுதியைக் கைவிடவில்லை; முடியும் வரைக்கும் முயற்சி செய்ய முயல்கின்றான்; அவன் தன்னு டைய விடாமுயற்சியினால் ஒவ்வோர் ஆண்டும் அதன் உய ரத்தைக் கண்டுபிடிப்பதில் முன்னேறி வருகின்றான்; ஒரு முறை 22,000 அடி உயரத்திலிருந்து 24,000 அடிவரை ஏறிவிட்டான்; மற்றொருமுறை 24,000 அடியிலிருந்து 27,000 அடி ஏறிவிட்டான். 1927-ம் ஆண்டில் மேலரி (Mallory) எவரெஸ்டின் உச்சியைப் பெரும்பாலும் அடைந்துவிட்டார்; ஆனால், அவர் தாம் கண்ட வெற்றி யைச் சொல்ல, அந்தோ, நம்மிடத்துக்குத் திரும்பிவர வில்லை. வீரசிகாமணி ஒருவன் அதன் உச்சியில் ஒரு நாள் அடையும்போது மாண்புறு முயற்சிசெய்து மாண்ட மேலரியின் எலும்புகளை ஒருவேளை பார்க்கக்கூடும். அவை கள் அங்குக் கிடந்து அவனை 'நீ இவ்வுச்சியில் வந்து இதைக் கண்டுபிடித்த இரண்டாவது வீர திலகம்' என்று குறிப்பிடும்.

'ஒரு பயனையும் அளிக்காத முயற்சியால் உலகத்துக்கு யாது பயன்? இந்த வீண் முயற்சியில் என் அளவுகடந்த

பொருளைச் செலவிடவேண்டும்? இப்பயனற்ற முயற்சியில் என் அரிய உயிர்களை இழக்கவேண்டும்?' என்று பல வினுக்களை நீங்கள் எழுப்பலாம். இவை கேட்கவேண்டிய வினுக்களே! பெரும்பயன் ஒன்றும் இல்லைதான். ஆனால் அரும்பயன் ஒன்று உண்டு. 'தெரியாத விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டும், அறியாதனவற்றை அறிந்து கொள்ளவேண்டும்' என்று மானிடன் கொள்ளும் மன வுறுதியே இவ்வீர முயற்சிகளால் உண்டாகும் அரும்பயன் என்பதில் ஐயம் இல்லை. ஸர் பிரான்ஸிஸ் யங்ஹஸ்பெண்டு (Sir Francis Younghusband), 'எவரெஸ்டின் உயரத் தைக் கண்டுபிடிப்பதால் அதன் உயரம் வளரப்போவ தில்லை. ஆனால், மானிடனுடைய ஊக்கம் ஒவ்வொரு முயற்சியிலும் உயர்கின்றது' என்று அழகுபடச் சொல்லி யதையே நாமும் இவர்களுக்குப் பதிலாகக் கூறலாம். சிறிது சிறிதாக வளர்ந்துவந்த இந்த ஊக்கமே மனித னுக்கு இப்போது உள்ள உயர்நிலையை அளித்துள்ளது என்பதை யாரே மறுக்க வல்லார்? அதுதான் அவனுக்கு எல்லாவற்றையும் அடக்குஞ் சக்தியைக் கொடுத்திருக் கின்றது.

தோல்விக்கு அவன் அஞ்சி நடுங்கியிருந்திருப்பினும், தன்னைக் கஷ்டப்படுத்திய பல சிக்கலான விஷயங்களின் முடிவைக் கண்டுபிடிக்க மேலும் மேலும் முயற்சி செய்யா திருந்திருப்பினும், அறிவில் நாயினும் அவன் கடைப் பட்டவனாயிருந்திருப்பான். முயற்சி செய்யும்போது அவனுக்கு உண்டாகும் தோல்வியே இறுதியில் அவனுக்கு வரப்போகும் வெற்றிக்கு அறிகுறியாகும்.

'தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு.'

(திருக்குறள்)